**தமிழக அரசின் நிதியமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்டத்தை, 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே*

**“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்”**

திருவள்ளுவரின் இந்த வாக்கை மெய்ப்பிக்கும் வண்ணம், எங்களது நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவி **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா** அவர்கள் மன உறுதியுடனும், தளராத முயற்சியுடனும் அயராது செயல்பட்டு, தான் எண்ணியதை எண்ணியவாறு, தேர்தலில் பெரும் வெற்றியைப் பெற்று தமிழகத்தை மீண்டும் செழுமையான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் மகத்தான பணியை ஏற்றுள்ளார்கள். அவர்களது கனிவான ஆசியுடன், 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை இந்த அவையின் முன் வைக்க விழைகிறேன். **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் செயல்திறன் மிக்க தலைமையின் கீழ் பொறுப்பேற்றிருக்கும் இந்த புதிய அரசின் முதல் வரவு–செலவுத் திட்டம் இது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தொலைநோக்குச் சிந்தனையுடன் செயல்படும் எங்கள் தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வரலாறு காணாத வெற்றியைத் தேடித்தந்த தமிழக மக்களுக்கு எந்நாளும் நன்றிக்கடன் பட்டுள்ளோம். தமிழக மக்கள் இந்த அரசின் மேல் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை, மிகுந்த எதிர்பார்ப்பு ஆகியவற்றின் காரணமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதியளித்தபடி மக்கள் நல, வளர்ச்சித் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்தி ஒரு திறமையான, சிறப்பான நிர்வாகத்தை தரும் பெரும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

2. மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் நிதிநிலை கடுமையான நெருக்கடிக்குள்ளான சூழ்நிலையில்தான் இந்த அரசு பொறுப்பேற்றுள்ளது என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். முந்தைய அரசால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கையில் சிறிதளவு வருவாய் உபரி காட்டப்பட்டிருந்தாலும், புதிய திட்டங்களைத் தொடங்குவதற்கான எந்த நிதி ஆதாரத்திற்கும் அந்த அறிக்கையில் இடமில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மாறாக, மாநில அரசு **ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான கடன் சுமையில் மூழ்கியுள்ளது.** இது மட்டும் அல்லாமல், தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகம், போக்குவரத்துக் கழகங்கள் போன்றவற்றின் தொடர் வருவாய் இழப்பினால், அவை மிகப் பெரும் கடன் சுமையினால் முழுமையாக செயலிழக்கும் அபாய நிலையில் உள்ளன. எனவே, இந்தச் சூழ்நிலைகளையும், மாநில அரசின் வருவாயினையும் கருத்தில் கொண்டு மிகக் கவனமுடன் 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டை வகுத்துள்ளோம். இதற்கான இப்பேரவையின் ஒப்புதலைக் கோருகிறேன்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றவுடன் மக்களின் நன்மைக்காக கையொப்பமிட்ட ஏழு கோப்புகளில், **பொது விநியோகத் திட்டத்தின் மூலம் ஒரு கோடியே எண்பத்து மூன்று இலட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி; 23.95 இலட்சம் வயது முதிர்ந்தோர், ஆதரவற்றோர்களுக்கான பல்வேறு சமூகப்பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் பெற்றுவந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்வு; ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக 25,000 ரூபாய் நிதி உதவியுடன் நான்கு கிராம் தங்க நாணயம்; அப்பெண்கள் பட்டய, பட்டப் படிப்பு முடித்திருப்பின் நிதியுதவி 50,000 ரூபாயாக உயர்வு; மீன்பிடித் தடைக்காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்வு;** என ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் திட்டங்கள் மகத்தானவை. **தேர்தல் வாக்குறுதிகள்**

**அனைத்தையும் உரிய காலத்தில் நிறைவேற்ற இந்த அரசு சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையையும் புதிதாக உருவாக்கியுள்ளது.** இத்துறை அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த கருத்துரைகளைக் கூறுவதுடன் திட்டச் செயலாக்கத்திற்குத் தேவையான திருத்தங்கள் பற்றிய ஆலோசனைகளை எடுத்துரைக்கும்.

4. பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் தமிழக முதல்வரை சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுத்து அனுப்பிய ஸ்ரீரங்கம் தொகுதியில் ஜுன் 19 முதல் 21 ஆம் நாள் வரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட நன்றி அறிவிப்பு சுற்றுப்பயணத்தில் அப்பகுதியே விழாக்கோலம் பூண்டது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 190 கோடி ரூபாய் அளவில் பல்வேறு வளர்ச்சி, நலத் திட்டப்பணிகளை அத்தருணத்தில் அறிவித்தார்கள். காவிரி ஆற்றின் குறுக்கே முத்தரசநல்லூரில் 32 கோடி ரூபாய் செலவில் ஒரு தடுப்பணை; 10 கோடி ரூபாய் செலவில் மகளிருக்கென தோட்டக்கலைக் கல்லூரி–ஆராய்ச்சி நிறுவனம்; நான்கு கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய அறிவியல்–கலைக் கல்லூரி; 36.40 கோடி ரூபாய் செலவில் ஸ்ரீரங்கத்தில் பயணியர் விடுதி ஆகியவை இந்த அறிவிப்புகளில் குறிப்பிடத்தக்கவை. இந்த அரசு ஒரு தேசிய சட்டப் பள்ளியையும், இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தையும் ஸ்ரீரங்கம் தொகுதியில் புதிதாகத் தொடங்கவுள்ளது.** மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை ஒன்றரை ஆண்டில் நிறைவேற்ற ஒரு காலவரையறையை இந்த அரசுக்கு நிர்ணயித்து, அதற்கேற்ப வைராக்யத்துடன் செயல்பட்டு வாக்குறுதிகளை நிறைவேற்றும் வல்லமை படைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதியை இந்த அறிவிப்புகள் பறைசாற்றுகின்றன. இந்த அரசு பதவியேற்ற பின்பு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், நிருவாக அமைப்பை ஒழுங்குபடுத்துவதிலும், புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் எடுத்து வரும் முயற்சிகளைப் பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டுகின்றனர் என்ற செய்தியைத் தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

## ஆளுகை

5. விரைவான சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கு அரசின் திறமையான ஆளுகை மிக முக்கியமானதாகும். வெளிப்படையான நிருவாகத்தைத் தருவதுடன் குறைபாடுகள் ஏதுமின்றி சேவைகளைத் தரவல்ல அலுவல் நடைமுறையைப் பொறுப்புடன் செயல்முறைப்படுத்தி ஆளுகைத் திறனில் உள்ள குறைகளை அறவே களைய இவ்வரசு ஆவன செய்யும். மேலும், மின் ஆளுகை முயற்சிகள் மூலம் பொது மக்களுக்கான சேவைகள் ஊழலுக்கு இடமளிக்காத வகையில் உரிய முறையில் செயல்படுத்தப்படும். பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு அங்க அடையாள அடிப்படையில் அட்டையை வழங்கி அதன் அடிப்படையிலான '**ஆதார்**' திட்டத்தை இந்த அரசு செயல்முறைப்படுத்தும். இந்த முயற்சி, நலத்திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு உரிய காலத்தில், முழுமையாகச் சென்றடைய உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. மின் ஆளுகை முயற்சிகளில் தமிழகம் முன்னணியில் உள்ளது. இவ்வரசு மின் ஆளுகை செயல்பாட்டில் தமிழகத்தை முதன்மை நிலைக்குக் கொண்டுவர தீவிரமாக முயற்சி மேற்கொள்ளும். மின் ஆளுகைத் திட்டங்களை நிறைவேற்றத் தேர்வு செய்யப்பட்டுள்ள வருவாய்த் துறை, பதிவுத் துறை, நகராட்சி நிருவாகத் துறை, உணவுப் பொருள் வழங்கல் துறை, போக்குவரத்துத் துறை ஆகியவற்றில் அலுவல்முறை மாற்றங்கள் கொண்டு வருவதன் மூலம் எளிய முறையில் மக்கள் சேவையை முழுமையாக மக்களிடம் கொண்டு செல்வது உறுதி செய்யப்படும். மத்திய அரசின் நிதி உதவியுடன் இத்தகு மின் ஆளுகைத் திட்டங்கள் இந்த அரசால் விரைந்து செயல்படுத்தப்படும். சோதனை அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மாவட்ட மின் ஆளுகைத் திட்டம் விரைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். அனைத்து அரசு சேவைகளையும் கிராமம், நகர்ப்புரங்களில் உள்ள பொதுச் சேவை

மையங்கள் மூலம் தடையின்றி பெற வழிவகை செய்வதே இந்த அரசின் நோக்கம்.

## சட்டம் ஒழுங்கு

7. குற்றவாளிகள், சமூக விரோதிகள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்து அமைதியை நிலைநாட்ட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. பொதுமக்களிடையே நம்பிக்கையும், நல்லெண்ணமும் உருவாகும் வகையில் காவல் துறை தனது கடமையினை எந்தத் தலையீடுமின்றி சுதந்திரமாகவும் திறம்படவும் செயலாற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே அறிவித்தவாறு கடந்த ஆட்சிக் காலத்தில் நில அபகரிப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது காவல்துறை தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. நில அபகரிப்பு குறித்த புகார்களை விசாரிக்க மாவட்டங்களில் சிறப்புப் பிரிவுகள் காவல் துறையில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மே திங்கள் முதல் 2,491 புகார்கள் பெறப்பட்டுள்ளன. நில அபகரிப்பில் ஈடுபடுபவர் மீது கடும் நடவடிக்கைகளை எடுத்து அந்நிலங்களை உரியவரிடம் திரும்ப ஒப்படைக்கும் பணியினை இந்த அரசு மேற்கொள்ளும். எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் தாங்கள் இழந்த சொத்துக்களைத் திரும்பப் பெற இயலும் என்று திடமாக நம்பலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் 2001 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. காவலர்கள் நவீன ஆயுதங்களைக் கையாளத் தேவையான பயிற்சியும், விரைந்து செயல்படத் தேவையான வாகனங்களும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 54 கோடி ரூபாய் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காவல் துறையை மேலும் நவீனப்படுத்துவதற்காக கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும். பதிமூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரைப்படி காவலர்

பயிற்சிக்கென 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 25 கோடி ரூபாய் இதற்கென செலவிடப்படும்.

**9.** தற்போது, தமிழ்நாட்டில் 1,492 காவல் நிலையங்கள் உள்ளன. இவற்றுள் 282 காவல் நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றில் 92 இடங்களில் புதிய காவல் நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. பழுதடைந்த, வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் காவல் நிலையங்களுக்காக புதிய கட்டடங்கள் கட்டுவது தேவைக்கேற்ப நடைபெறவில்லை என்பதால் இந்த அரசு இப்பணிகளுக்கான நிதியொதுக்கீட்டை கணிசமாக உயர்த்தி வழங்கும். 2011–2012 ஆம் ஆண்டில் 11 கட்டடங்களைக் கட்டுவதற்கென 4.11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள இடங்களில் உரிய இடம் தேர்வு செய்தவுடன் பணிகள் தொடங்கப்படும்.

**10.** தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் இணையதளம் மூலமாக நடைபெறும் குற்றங்கள் (Cyber crimes) பெருகிவருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில்தான் சென்னை மாநகரில் சைபர் குற்றப்பிரிவுகள் தொடங்கப்பட்டன. பின்னர் இப்பிரிவுகள் சென்னை புறநகர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மாநகரங்களில் தொடங்கப்பட்டன. **சைபர் குற்றங்களை திறம்படத் தடுக்க சேலத்திலும், திருநெல்வேலியிலும் சைபர் குற்றப்பிரிவுகள் தொடங்கப்படும். சைபர் தடயவியல் சோதனைக்கூடங்கள், சென்னை மாநகர காவல், குற்றப்பிரிவு புலனாய்வுத் துறை ஆகிய இடங்களில் மட்டுமே உள்ளன. இத்தகு சோதனைக்கூடங்கள் சேலம், திருநெல்வேலி உள்ளிட்ட பிற ஆறு மாநகரங்களிலும் ஏற்படுத்தப்படும்.**

**11.** காவல்துறையின் தேவைக்கேற்ப காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. **தற்போது காலியாக உள்ள 896 சார் ஆய்வாளர்கள், 121 தொழில்நுட்ப சார் ஆய்வாளர்கள், 5,588 இரண்டாம் நிலை காவலர்களுக்கான**

**பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு, போக்குவரத்துக் கட்டுப்பாடு, குற்றப்புலனாய்வு ஆகியவற்றுக்குக் கூடுதலாகத் தேவைப்படும் காவலர்கள் எண்ணிக்கை உரிய முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு அப்பணியிடங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் காவல் துறைக்கு உறுதுணையாக ஊர்க்காவல் படையினர் செயல்பட்டு வருகின்றனர். தற்போது, 11,622 ஆக இருந்து வரும் இப்படையினரின் எண்ணிக்கை 16,000 ஆக உயர்த்தப்படும். இப்படையினரின் தினப்படி 65 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தப்படும்.** இந்த உயர்வு, ஊர்க்காவல் படையினர் சிறந்த முறையில் அர்ப்பணிப்புடன் பணியாற்ற ஊக்கப்படுத்தும் எனக் கருதுகிறேன்.

12. சென்னையை ஒட்டிப் பெருகி வரும் நகர்ப்புற வளர்ச்சியால் காவல் கண்காணிப்பு முறையில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை கருத்தில்கொண்டு, 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், சென்னை மாநகரக் காவல் துறையும், செங்கல்பட்டு கிழக்கு காவல் மாவட்டமும் ஒன்றிணைக்கப்பட்டு, சென்னை பெருநகரக் காவல் ஆணையரகம் உருவாக்கப்பட்டது. வேகமாகப் பெருகிவரும் சென்னை புறநகர்ப் பகுதிகளைச் சென்னை மாநகரக் காவல் ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் கொண்டுவரவேண்டும் என்ற நோக்குடன் இந்த மாற்றம் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 2008 ஆம் ஆண்டு மறுசீரமைப்பின்மூலம் சென்னை புறநகர் காவல் ஆணையரகம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டது. இதனால் காவல் கண்காணிப்பு முறையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. 2005 ஆம் ஆண்டு ஒரே நிருவாகத்தின்கீழ் உருவாக்கப்பட்ட சென்னை பெருநகர காவல் ஆணையரகமே குற்றத்தடுப்பிற்கு ஏதுவாகவும், சிறப்பாக செயல்பட உகந்ததாகவும் இருக்கும் எனக் கருதப்படுகிறது. எனவே, **இந்த அரசு சென்னைப் புறநகர் காவல் ஆணையரகத்தை சென்னை மாநகரக்காவல் ஆணையரகத்துடன் ஒருங்கிணைத்து சென்னை பெருநகரக் காவல் ஆணையரகமாக உருவாக்கும். நிருவாக வசதிக்காக இந்த ஆணையரகம்**

**வடக்கு, தெற்கு, மேற்கு, மத்திய மண்டலம் என நான்கு மண்டலங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.**

## நீதி நிருவாகம்

**13.** அனைத்து நீதிமன்றங்களையும் சொந்தக் கட்டடத்தில் இயங்கச் செய்வதையும், நீதிபதிகளுக்குத் தேவையான குடியிருப்புகளை உருவாக்கித் தருவதையும் இந்த அரசு குறிக்கோளாகக் கொண்டுள்ளது. உயர் நீதிமன்றம், சார் நீதிமன்றங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், நீதிபதிகளுக்கான குடியிருப்புகளைக் கட்டுவதற்காகவும் **2011–2012** ஆம் ஆண்டு **136** கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நீதி நிருவாகத்தை மேம்படுத்த பதிமூன்றாவது நிதிக்குழு **2010–2011** ஆம் ஆண்டில் தொடங்கி ஐந்தாண்டுகளில் செலவிட **252** கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நீதிமன்றங்களில் தேங்கியிருக்கும் வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கோடி ரூபாய் செலவிலும், சென்னை உயர் நீதிமன்றத்தில் **4.2** கோடி ரூபாய் செலவிலும் தகராறுகளைத் தீர்க்க மாற்றுமுறை தீர்வு மையங்கள் கட்டப்படும். மேலும், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு சமரசத் தீர்வு முறைகளில் பயிற்சி அளிக்கப்படும்.

## தீயணைப்பு, மீட்புப் பணிகள்

**14.** தீயணைப்பு, மீட்புப்பணிகள் துறை மனித உயிர்களையும் பொருட்களையும் தீ சேதத்திலிருந்து காக்கும் ஒரு மகத்தான பணியைச் செய்து வருகிறது. இந்தத் துறையின் செயல்திறனை வலுப்படுத்த இந்த நிதியாண்டில், மேம்படுத்தப்பட்ட தீயணைப்பு வாகனங்கள், உயர் அழுத்தக் குழாய்கள், இணைப்புக் கருவிகள் போன்றவற்றை வாங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். தீயணைப்பு, மீட்புப் பணி நிலையங்களுக்கான **10** புதிய கட்டடங்களும், பெரம்பலூர் கோட்ட அலுவலகத்திற்காக ஒரு புதிய

கட்டடமும் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் 243 வீடுகள் கட்டும் பணி 21.50 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகிறது. தீயணைப்பு–மீட்புப் பணிகள் துறைக்காக இந்த திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 170 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சிறைச்சாலைகள்

15. சிறைக் கைதிகளுக்கு வாழ்வாதாரத் தொழிற்பயிற்சி அளிப்பதற்காக புழல் மத்திய சிறைச்சாலையிலும், இதர எட்டு மத்திய சிறைச்சாலைகளிலும் மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரி நிறுவப்பட்டுள்ளது. சிறைக் கைதிகளின் சீர்திருத்தத்திற்கும் மறுவாழ்விற்கும் இது வழிவகை செய்யும். **சிறைச்சாலை நிருவாகத்தை வலுப்படுத்துவதற்கு, ஓர் ஆய்வாளர் பதவியும், 10 சார் ஆய்வாளர் பதவிகளும் உருவாக்கப்படும். மேலும், கூடுதலாக ஒன்பது உளவியல் நிபுணர்களும் ஒரு சட்ட ஆலோசகரும் நியமிக்கப்படுவார்கள்.** சிறைச்சாலைகள் துறைக்காக, இந்த திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 147 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சாலைப் பாதுகாப்பு

16. தமிழ்நாட்டில், 2005 ஆம் ஆண்டு 74.04 இலட்சமாக இருந்த வாகனங்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டில் 136.60 இலட்சமாக உயர்ந்துள்ளது. வாகனங்களின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்துவிட்டதால் சாலை விபத்துக்களின் எண்ணிக்கையும், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும், உடல் ஊனங்களும் அதிகரித்துள்ளன. சாலைப் பாதுகாப்பை வலுப்படுத்தி சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் அமைக்கப்பட்டுள்ள சாலைப் பாதுகாப்பு

மன்றங்கள் வலுவூட்டப்படும். தற்போது, தேசிய நெடுஞ்சாலைகளில் 80 ரோந்துப் பணிவாகனங்களும் மாநில நெடுஞ்சாலைகளில் 42 ரோந்துப் பணிவாகனங்களும் உள்ளன. அனைத்துக் காவல் நிலையங்களிலும் **சாலை விபத்து தகவல் கண்காணிப்புத் திட்டம்** (**Road Accident Data Monitoring System**) என்ற கணினி பயன்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சாலைகளில் தேவையான அளவு அடையாளக் குறியீடுகள், மேம்பட்ட ஒளிரும் விளக்குகள் உள்ளிட்ட சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சாலை மேம்பாட்டு நிதிக்கு இந்த திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆண்டுத் திட்டம்

17. பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டக் காலமான 2007–2008 முதல் 2011–2012 வரையில் 85,344 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. தமிழ்நாட்டில், முதல் நான்கு ஆண்டுகளில் 68,401 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த அரசால், 2011–2012 ஆம் ஆண்டுத் திட்டத்திற்காக கடந்த ஆண்டைக் காட்டிலும் 17.28 விழுக்காடு உயர்த்தப்பட்டு 23,535 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டில், பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 91,936 கோடி ரூபாய் என்ற அளவிற்கு திட்டப்பணிகள் அனுமதிக்கப்பட்டு, மதிப்பிடப்பட்ட அளவை விட 7.72 விழுக்காடு கூடுதலாக திட்டப்பணிகள் நிறைவேற்றப்படும்.

## பொருளாதார மேம்பாடு

18. உயர் பொருளாதார வளர்ச்சியை நிலையான வகையில் எட்டி அதன் பயன் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரையும் அடையக்கூடிய வகையில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், சராசரியாக ஒன்பது விழுக்காடு அளவு

ஒட்டுமொத்த வளர்ச்சியைக் காண தமிழ்நாடு அரசு இலக்கு நிர்ணயித்தது. ஆனால், இத்திட்டக் காலத்தில் 2007–2008 ஆம் ஆண்டிலிருந்து முதல் மூன்று ஆண்டுகளில் முதன்மை, இரண்டாம் நிலைத் துறைகளில் வளர்ச்சி விகிதம் ஏமாற்றம் அளிக்கும் வகையில் தேசிய சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட குறைவாகவே இருந்தது. இதன் விளைவாக, முதல் நான்கு ஆண்டுகளில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி 7.80 விழுக்காட்டை மட்டுமே எட்ட முடிந்தது. பெருமளவு மக்கள் முதன்மைத் துறை, உற்பத்தித் துறை ஆகியவற்றையே இன்னும் தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள நிலையில், கூடுதல் வளர்ச்சியை இத்துறைகள் அடையவில்லையெனில் சமுதாயத்தில் அனைத்து தரப்பினரும் முன்னேற்றம் பெறுவது இயலாத ஒன்று என இந்த அரசு கருதுகிறது. ஆனால், நம் மாநிலத்தின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி சேவைத் துறையின் மூலமாகவே உந்தப்படுகிறது. **சேவைத் துறையின் உந்துதலால் மட்டும் ஏற்படும் வளர்ச்சி நிலையானதாக இருக்காது என்பதை நாம் அறிவோம். எனவே, முதன்மைத் துறை, உற்பத்தித் துறை ஆகியவற்றின் மூலம் கணிசமான வளர்ச்சியை எட்டவும், சேவைத் துறையிலும் அதிக வளர்ச்சியைப் பெறவும், கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடர்பாடுகளைக் கண்டறிந்து நீக்கும் வகையில் திட்டப்பணிகளைச் செயல்படுத்தி, வரும் ஆண்டுகளில் 10 விழுக்காட்டிற்கு மேல் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை அடைய வழிவகை செய்யப்படும்.**

## விவசாயமும், கூட்டுறவும்

**19.** ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளவாறு, பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், முதன்மைத் துறையின் வளர்ச்சி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. 2007–2008, 2008–2009 ஆகிய ஆண்டுகளில் இத்துறையின் வளர்ச்சி எதிர்மறையாகி, 2009–2010, 2010–2011 ஆகிய ஆண்டுகளில் வளர்ச்சி சதவீதம் சிறிதளவு உயர்ந்த போதிலும், திட்டக் காலத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் இத்துறையின் மொத்த வளர்ச்சி ஒட்டுமொத்தமாக 0.51 விழுக்காடு எதிர்மறையாகவே

இருந்துள்ளது. நகரமயமாக்கலின் விளைவாக விவசாய சாகுபடி நிலங்கள் குறைந்து வருகின்றன. பயிரிடு திறன், பாசனத் திறன் போன்றவற்றில் போதிய முன்னேற்றம் காணப்படவில்லை. மோசமான இச்சூழ்நிலையை மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு மேற்கொள்ளும்.

20. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசால், காவிரி வடிநிலப் பகுதி விவசாயிகள், சாகுபடியை உரிய நேரத்தில் மேற்கொள்வதற்காக உரிய நாளிற்கு முன்னதாகவே மேட்டூர் அணையிலிருந்து பாசனநீர் திறந்துவிடப்பட்டது. மாநிலத்தில் உள்ள பிற முக்கிய அணைகளிலும் போதிய நீர் இருப்பு இருந்த காரணத்தினால், பாசனத்திற்கான நீர் திறந்துவிடப்பட்டது. **கடந்த ஆண்டு 85.35 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி அடைந்துள்ள நிலையில் 2011–2012 ஆம் ஆண்டில் 115 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் இலக்கினை இந்த அரசு நிர்ணயித்துள்ளது.** உரிய காலத்தில் அணைகளிலிருந்து பாசனநீர் திறந்துவிடப்பட்டதாலும், வழக்கமான மழையளவு கணிக்கப்பட்டுள்ளதாலும் இந்த உயர் இலக்கினை அடைய முடியும் என நம்புகிறேன்.

21. முதன்மைத் துறையினைப் புத்துயிரூட்ட எடுக்கப்படவுள்ள உத்திகளைப் பற்றி நான் இப்போது குறிப்பிட விரும்புகிறேன். வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு ஆகியவற்றின் மூலம் கிடைக்கப் பெறும் வருமானத்தையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்க இந்த அரசு உரிய கவனம் செலுத்தும். தற்போது வேளாண்மைத் துறையில் உற்பத்தியிலும் உற்பத்தி திறனிலும், ஒரு தேக்கநிலை நிலவுகிறது. **உற்பத்தித் திறனில் உள்ள இடைவெளியை சீர் செய்தும், மதிப்புக் கூட்டியும், வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து இரண்டாம் பசுமை புரட்சிக்கு வித்திட உறுதி கொண்டுள்ளோம். மேலும், விவசாயிகளின் தனி நபர் வருமானத்தை வரும் ஐந்தாண்டுகளில் இரண்டு முதல் மூன்று மடங்கு உயர்த்தும் உயரிய குறிக்கோளை நிர்ணயித்து அதற்கேற்ப செயல்பட உள்ளோம். நவீன தொழில்நுட்பத்தை விரிவாக்கம் செய்து, விவசாயிகளிடம் கொண்டு**

**செல்வதன் மூலம் பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்தியும், பண்ணை அளவில் கலப்புப் பண்ணையம் போன்ற உத்திகளை மேற்கொண்டும், பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்தும் செயல்படுத்துவதன் வாயிலாக ஒருங்கிணைந்த பண்ணை வளர்ச்சி உறுதி செய்யப்படும்.**

22. சிறந்த தொழில்நுட்ப உத்திகளை ஒருங்கிணைந்த முறையில் கடைப்பிடிக்க, நடைமுறையில் உள்ள தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட பயறு வகை உற்பத்தித் திட்டம், நீர்வள நிலவளத் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், நுண்ணீர் பாசனத்திற்கான தேசிய இயக்கம் ஆகியவை பண்ணை அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். **தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2010–2011 ஆம் ஆண்டு, 197 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு இந்நிதியாண்டில் 467 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதுபோலவே 2010–2011 ஆம் ஆண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 91.18 கோடி ரூபாய், 2011–2012 ஆம் ஆண்டில் 145 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்.**

23. நெல், கரும்பு, பருத்தி, பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற முக்கிய பயிர்களின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், காய்கறிகள், பூக்கள், பழங்கள் போன்ற அதிக வருவாய் ஈட்டுகின்ற தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடும் பரப்பை விரிவுபடுத்தவும் இந்த அரசு கவனம் செலுத்தும். முன்னோடி தொழில்நுட்பங்களான **திருந்திய நெல் சாகுபடித் திட்டம், நவீன முறையில் கரும்பு உற்பத்தித் திறனை உயர்த்தும் திட்டம்,** துல்லிய பண்ணையம், பி.டி. பருத்தியைப் பரவலாக்குதல், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றில் உகந்த பயிர் மேலாண்மையைக் கடைப்பிடித்தல், பசுமைக் குடில், **துல்லிய பண்ணையம்** முறைகளில் காய்கறிகளைப் பயிரிடுதல், தோட்டக்கலைப் பயிர்களுக்கான **அடர் நடவு முறை** போன்றவை தீவிரமாக பரவலாக்கப்படும். **நெல் உற்பத்தித் திறனை உயர்த்த 2011–2012 ஆம் ஆண்டில் 22.24 இலட்சம் ஏக்கரில்**

**திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும். இதே போன்று 14,000 ஏக்கரில் நவீன முறையில் கரும்பு உற்பத்தித் திறன் உயர்த்தும் திட்டம் மேற்கொள்ளப்படும்.** கரும்பு உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக, அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் 2.45 இலட்சம் ஏக்கரில் இத்திட்டத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. **பயறு வகைகளை இறவையில் அதிகப் பரப்பில் தனிப் பயிராக சிறந்த பயிர் மேலாண்மையுடன் சாகுபடி மேற்கொள்வதன் மூலம், அதன் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படும். பழங்கள் மற்றும் காய்கறிகளின் உற்பத்தித் திறனை உயர்த்திடும் வகையில் 20.93 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 22,000 ஏக்கர் பரப்பில் துல்லிய பண்ணையமும், நான்கு இலட்சம் சதுர மீட்டர் பரப்பில் பசுமைக் குடில் முறையும் மேற்கொள்ளப்படும்.**

24. தரமான விதை, உரம், குறைந்த வட்டியிலான கடன் போன்றவை உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு கிடைக்கப் பெறுவது அவசியமாகும். விரிவான விதைத் திட்டம் ஒன்றை இந்த அரசு தயாரித்து விவசாயிகளுக்கு தரமான விதைகள் உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்யும். 2011–2012 ஆம் ஆண்டில் விதை மானியத்திற்காக மட்டும் 85.92 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியுள்ளது. இதே போன்று போதுமான உரங்கள் கூட்டுறவு விற்பனை மையங்கள் மூலமாக வழங்கப்படும். உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து இவ்வரசு விலக்களித்துள்ளதால் இப்பொருட்கள் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் கிடைக்கும். மேலும், விவசாயிகளுக்கு தடையில்லாமல் உரம் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், **தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு வழங்கப்படும் வட்டியில்லா முன்பணத்தின் தற்போதைய அளவு 90 கோடி ரூபாயிலிருந்து 150 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்.** விவசாயிகளுக்கான கடன் வழங்குதல் மற்றும் இதர சேவைகளை மேம்படுத்திட கூட்டுறவுச் சங்கங்கள் வலுப்படுத்தப்படும். **கூட்டுறவுத் துறை வாயிலாக, 2011–2012 ஆம் ஆண்டில், உரிய காலத்தில் கடனைத் திரும்பச்**

**செலுத்துவோருக்கு வட்டியில்லாப் பயிர்க்கடனாக 3,000 கோடி ரூபாயினை வழங்கும் உயர் இலக்கினை இவ்வரசு நிர்ணயித்துள்ளது.**

25. மாநிலத்தின் நிகர பாசனப் பரப்பு 58 விழுக்காடாக மட்டுமே உள்ளது. பாசனத் திறன் ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறது. மாநிலத்தில் உள்ள 95 விழுக்காடு மேற்பரப்பு பாசன ஆதாரமும், 85 விழுக்காடு நிலத்தடி நீராதாரமும் பயன்படுத்தப்பட்ட நிலையில் நுண்ணீர் பாசனப் பரப்பினை அதிகரிப்பதன் மூலமே நீர் பயன்பாட்டின் திறனை மேம்படுத்த இயலும். சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசன முறையினை பரவலாக்க 1991 ஆம் ஆண்டிலேயே நுண்ணீர் பாசன உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன. நீரைச் சேமித்து நீர் பயன்பாட்டினை திறம்பட நிர்வகிக்கவும், நுண்ணீர் பாசன முறைகளை விவசாயிகளிடையே விரிவாக்கம் செய்யவும் அதைப் பெரும் இயக்கமாக நடத்தவும் இந்த அரசு விரும்புகிறது. தற்போது நுண்ணீர் பாசனத்திற்கான தேசிய இயக்கத் திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு 75 விழுக்காடும், இதர விவசாயிகளுக்கு 65 விழுக்காடும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. பண்ணை அளவில் உற்பத்தித் திறனை மேலும் அதிகரிக்க நுண்ணீர் பாசனம் ஒரு முக்கிய தேவை என்று இந்த அரசு கருதுவதால், சிறு, குறு விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனம் அமைத்திட 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் இனி வழங்கப்படும். மத்திய அரசு அளிக்கும் மானியத்தை விட கூடுதலாக ஆகும் மானியத்தினை மாநில அரசே முழுமையாக ஏற்றுக் கொள்ளும். இதே மானிய முறை நீர்வள நிலவளத் திட்டத்திலும் பின்பற்றப்படும். **2011–2012 ஆம் ஆண்டில் நுண்ணீர் பாசன இயக்கத்தின் கீழ் 87,500 ஏக்கர் பரப்பும், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் 37,500 ஏக்கர் பரப்பும், ஆக மொத்தம் 1,25,000 ஏக்கர் பரப்பு நுண்ணீர்ப் பாசன முறையின் கீழ் கொண்டுவரப்படும். இதற்காக மாநில நிதியிலிருந்து 151 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**26.** ஊரகப் பகுதிகளில் விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக, உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், வேளாண் உற்பத்தியை அதிகரிக்க எடுக்கப்படும் முயற்சிகளில் பெரும் பின்னடைவு ஏற்படுகிறது. தற்போது வேளாண் துறையை இந்த பின்னடைவிலிருந்து மீட்க வேளாண் இயந்திரமயமாக்குதலை ஒரு மாநிலம் தழுவிய இயக்க அணுகுமுறையாக மேற்கொள்ள வேண்டும் என இந்த அரசு கருதுகிறது. வேளாண் இயந்திரமயமாக்கலை விரைவுபடுத்த மும்முனை முறைகளைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். **முதல் நிலையாக, வேளாண் பொறியியல் துறையின் கீழ் செயல்படும் 74 வேளாண் உப கோட்டங்களுக்கு அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்கள் வாங்கப்படும். இரண்டாம் நிலையாக, நடுத்தர வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படும். இந்த இயந்திரங்கள் வாங்குவதற்காக ஒவ்வொரு சங்கத்திற்கும் 50 விழுக்காடு அளவிற்கு, அதிகபட்சமாக 20 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். நடப்பு ஆண்டில் குறைந்தபட்சம் 400 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் இந்த வசதியைப் பெறும். மாநில அரசின் நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் இத்திட்டத்திற்கென வழங்கப்படும். மூன்றாம் நிலையாக, விவசாயிகள், விவசாயக் குழுக்கள், சுயஉதவிக் குழுக்கள் ஆகியவற்றுக்கு இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்குத் தேவையான மானிய உதவி வழங்கப்படும். இப்பணிகளுக்காக தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 72.30 கோடி ரூபாய் நடப்பாண்டில் ஒதுக்கப்படும்.** வரும் ஆண்டுகளில் கூடுதல் நிதியுதவிடன் இம்முயற்சிகள் தீவிரப்படுத்தப்படும்.

27. பயிர்கள், பண்ணைகள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை கலப்பு பண்ணையம் வாயிலாக உயர்த்துவதன் மூலமும், அதிக வருவாய் தரும் தோட்டக்கலைப் பயிர்களையும், வணிகப் பயிர்களையும் மாற்று சாகுபடி முறையின் கீழ் கொண்டு வருவதன் மூலமும் மட்டுமே வேளாண்மையில் உயர் வளர்ச்சி அடையும் நோக்கம் நிறைவேறும். இதனால் உணவுப்

பாதுகாப்பு எந்த வகையிலும் பாதிக்கப்படாத அளவில் போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தோட்டக் கலைப் பயிர்களின் உற்பத்தியில் நிலைத்தன்மையை அடைய வேண்டுமெனில், அறுவடைக்குப் பின் தேவைப்படும் வசதிகளையும் (post harvest facilities) உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளையும் வலுப்படுத்தினால் மட்டுமே சாத்தியமாகும். இதன் ஒரு முயற்சியாக, இத்திட்டத்தில் **தனியார் நிறுவனங்கள் தொகுப்பு முறையில் (cluster approach) விவசாயிகளின் பங்களிப்புடன் உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நிறுவுவதை இந்த அரசு ஊக்குவிக்கும். இந்நிறுவனங்களில் விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் 25 விழுக்காடு பங்கு மூலதனம் இருக்கவும், அரசே அந்த பங்கு மூலதனத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.** இதுபோன்ற பதப்படுத்தும் தொழிற்சாலைகளை கிராமப்புறங்களில் நிறுவுவதன்மூலம் பயிர்பரப்பு நிலைப்படுத்தப்படுவதுடன், அழுகக் கூடிய விளை பொருட்களை விவசாயிகள் குறைவான விலைக்கு விற்கும் அவல நிலையிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள்.

28. உறுதியான கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதன் வாயிலாக மட்டுமே வேளாண்மையில் நிலையான வளர்ச்சியைப் பெற இயலும். இந்த அரசு, ஏற்கெனவே உறுதியளித்தபடி சந்தை வசதிகளை மேம்படுத்துதல், கூடுதல் குளிர்பதன வசதிகள், கிடங்கு வசதிகள் ஆகியவற்றை அதிகரித்தல் போன்ற தீவிர நடவடிக்கைகளை எடுக்கும். சிறப்பான சேவை வழங்கும் வகையில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், கூட்டுறவு சந்தைகள் ஆகியவை நவீனப்படுத்தப்படும். **நடப்பாண்டில் ஒரு முன்னோடி முயற்சியாக, விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, மின்னணு வசதி மூலம் வேளாண் பொருட்களின் வணிகப் பரிமாற்ற மையத்துடன் இணைக்கப்படும். இதன் அடிப்படையில் பிற ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் இத்தகைய வசதிகள் படிப்படியாக விரிவுபடுத்தப்படும். தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் சேமிப்புக் கிடங்கு**

**வசதிகளை ஏற்படுத்தி அதிக அடமான கடன் வழங்கவும், வேளாண் கூட்டுறவு சந்தை வளாகம், ஒழுங்கு முறை விற்பனைக் கூட வளாகம் ஆகியவற்றில் சேமிப்பு வசதிகளை அதிகப்படுத்தவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கூடுதல் சேமிப்பு வசதிகளை ஏற்படுத்தி உணவு தானியங்களை சேமிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த நோக்கத்திற்காக, 2011–2012 ஆம் ஆண்டு 'நபார்டு' வங்கியின் ஊரகக் கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து 237 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.** கூட்டுறவு, அரசுத் துறைகளின் கீழ் உள்ள கிடங்குகளின் கொள்ளளவுத் திறனை அடுத்த ஐந்தாண்டுகளில் குறைந்தபட்சம் மூன்று இலட்சம் மெட்ரிக் டன் அளவு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**29.** வானிலை மாற்றங்களால் ஏற்படும் இடர்பாடுகளிலிருந்து விவசாயிகளை மீட்பதை இந்த அரசு முக்கிய பணிகளுள் ஒன்றாகக் கருதுகிறது. பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்பிலிருந்து விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு, தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் தீவிரமாக செயல்படுத்தப்படும். தற்போது இத்திட்டத்தில் பயன்பெறும் எட்டு இலட்சம் விவசாயிகளின் எண்ணிக்கை நடப்பாண்டில் இரு மடங்காக உயர்த்தப்படும். தற்போது, முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படும் வானிலையை அடிப்படையாகக் கொண்ட பயிர்க் காப்பீட்டுத் திட்டம் முறையாக ஆய்வு செய்யப்பட்டு, பிற பகுதிகளிலும் விரிவுபடுத்தப்படும். மாநிலத்தில், வட்டார அளவில் 211 தானியங்கி வானிலை மையங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 88 தானியங்கி வானிலை மையங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டால் இணையதளம், குறுந்தகவல் ஆகியவற்றின் மூலம் வானிலை தொடர்பான தகவல்கள், நோய்கள், பூச்சிகளால் ஏற்படும் பாதிப்பு குறித்த தடுப்பு முன்னெச்சரிக்கைகளை விவசாயிகள் பெற்றிட இயலும். இத்துடன் விலை, வேளாண் தொடர்பான பிற விவரங்களை தானியங்கி பரிமாற்றம் மூலம் விவசாயிகளுக்குக் கொண்டு செல்ல இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

## கால்நடைப் பராமரிப்பு

**30.** தற்பொழுது மாநிலத்தின் பால் உற்பத்தி **5.78** மில்லியன் டன் ஆக உள்ளது. கடந்த சில ஆண்டுகளில் மாநிலத்தின் பால் உற்பத்தி தேக்கமடைந்துள்ளது. குறைவான விரிவாக்க வசதிகள், கட்டமைப்புக் குறைபாடுகள், கால்நடை மற்றும் தீவன மேலாண்மையில் உள்ள குறைபாடுகள் போன்றவை பால் உற்பத்தியை அதிகரிக்கத் தடைகளாக உள்ளன. வேளாண் பெருமக்களுக்குக் கூடுதல் வருமானத்தை தொடர்ச்சியாகத் தரவல்லது கால்நடை வளர்ப்பு. எனவே இந்த அரசு கால்நடை வளர்ப்புக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும். **இக்குறிக்கோளை எட்ட, பால் உற்பத்தியில் இரண்டாவது வெண்மைப் புரட்சியை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளில், வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு, 60,000 கறவை மாடுகள் இலவசமாக வழங்கப்படும். 2011–2012 ஆம் ஆண்டில் பால் உற்பத்தி குறைவாக உள்ள பின்தங்கிய கிராமப்புறங்களில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு ஜெர்சி போன்ற 12,000 கலப்பின கறவை மாடுகள் வழங்கப்படும். இந்த திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், இதற்காக 56 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.** கறவை மாடுகள் வழங்கப்படும் இக்கிராமங்களில் பிற அடிப்படைக் கட்டமைப்புகளான பால் கூட்டுறவு சங்கங்கள், பால் சேகரிப்புத் தடங்கள் ஏற்படுத்தப்படும். இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில் பயனடைந்த குடும்பங்களைச் சேர்ந்த மகளிரைக் கொண்டு **4,000** பால் உற்பத்திக் குழுக்கள் உருவாக்கப்படும். மேலும் இத்தகைய பின்தங்கிய கிராமப்புறங்களில், பல்வேறு பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் கீழ், மூன்று முதல் ஐந்து கறவை மாடுகள் கொண்ட சிறு பால் பண்ணைகள் ஏற்படுத்த ஊக்குவிக்கப்படும்.

**31.** மாநிலத்தின் ஒரு நாள் மொத்த பால் உற்பத்தியான **158** இலட்சம் லிட்டரில் ஆவின் நிறுவனம் மூலம் **20** இலட்சம் லிட்டர் பால் மட்டுமே கையாளப்படுகிறது. ஆவின் நிறுவனம், பால் உற்பத்தி கூட்டுறவு

சங்கங்கள் ஆகியவற்றின் கட்டமைப்பு வசதிகளை பால்வளம் குறைவாக உள்ள பகுதிகளில் பலப்படுத்துவதன் மூலம் பால் கொள்முதலை அதிகரிக்க வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கமாகும். **கால்நடை மருத்துவ சேவையை மேம்படுத்தி பயனாளிகள் இருக்கும் இடத்திற்கே கொண்டு செல்ல கூடுதலாக 155 நடமாடும் கால்நடை மருத்துவ மையங்கள் ஆவின் நிறுவனத்தால் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் பத்து கிலோமீட்டர் சுற்றளவில் ஒரு நடமாடும் கால்நடை மருத்துவ மையம் செயல்படுவது உறுதி செய்யப்படும்.** ஆவின் நிறுவனம், மேலும் 100 கூடுதல் பால் கொள்முதல் மையங்களை 32.50 கோடி ரூபாய் செலவில் நிறுவும். 5,000 லிட்டருக்கு கூடுதலாகக் கொள்ளளவுத் திறன் கொண்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் குளிரூட்டும் வசதி, மதிப்பு கூட்டு வசதிகளுடன் நவீனப்படுத்தப்படும். 2011–2012 ஆண்டில், ஆவின் நிறுவனம் மூலம், மேலும் 10 பால் பண்ணைகள் இந்த முறையில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

32. கால்நடைப் பராமரிப்புத் துறையில் விரிவாக்க வசதிகளை வலுப்படுத்த, தற்போதுள்ள உதவி இயக்குநர்களின் எண்ணிக்கை 65 லிருந்து 76 ஆக உயர்த்தப்படும். இதன் மூலம் ஒரு வருவாய் கோட்டத்திற்கு ஒரு உதவி இயக்குநர் என்ற நிலை உருவாக்கப்படும். கால்நடை மருத்துவச் சேவையை மேம்படுத்த 2011–2012 ஆம் ஆண்டில் 385 கால்நடை துணை மையங்கள், கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும். விரிவாக்க வசதிகளை வலுப்படுத்துவதற்காக 2011–2012 ஆம் ஆண்டில், ‘நபார்டு’ வங்கியின் ஊரகக் கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து 122.24 கோடி ரூபாய் செலவிடப்படும். இதனால் செயற்கை முறை கருவூட்டல், நோய் தடுப்பு, கால்நடை, தீவன மேலாண்மை போன்ற சேவைகள் பரவலாக கிடைக்கவும் அதன்மூலம் கால்நடைகளின் கன்று ஈனும் விகிதம் அதிகரிப்பதுடன், மலட்டுத்தன்மை குறையவும் வாய்ப்பு ஏற்படும். தற்போது சென்னையிலும், நாமக்கல்லிலும் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. திருநெல்வேலியில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி விரைவில் செயல்படத் தொடங்கும். இது தென் மாவட்டங்களில்

வாழும் வேளாண் பெருமக்களுக்கு பயனளிக்கும் என்று நம்புகிறேன். இதுபோலவே, **தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டிலும் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி நடப்பாண்டில் தொடங்கப்படும். மேலும், உலகத் தரம் வாய்ந்த கோழி வளர்ப்பு மற்றும் மேலாண்மை மையம் ஒன்று ஒசூரில் ஏற்படுத்தப்படும்.**

33. **மாண்புமிகு முதலமைச்சரின் மற்றொரு தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் இந்த அரசு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு, குறிப்பாக விவசாயக் கூலித் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நான்கு வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகளை இலவசமாக வழங்கும். 2011–2012 ஆம் ஆண்டு, ஒரு இலட்சம் குடும்பங்கள் தலா 12,000 ரூபாய் மதிப்புள்ள ஆடுகளை இத்திட்டத்தின் கீழ் பெற்று பயனடைவர். இந்த திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், 135 கோடி ரூபாய் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. பின்னர் ஒவ்வோர் ஆண்டும் 1.5 இலட்சம் குடும்பங்களுக்கு ஆடுகள் வழங்கப்படும். ஐந்து ஆண்டுகளின் முடிவில் ஏழு இலட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைவார்கள். இது ஊரகப் பகுதிகளில் உள்ள குடும்பங்களில் சுமார் 10 விழுக்காடாகும். பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் அன்று ஏழைக் குடும்பங்களுக்கு இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்துடன் இந்தத் திட்டமும் தொடங்கி வைக்கப்படும்.** ஏழை எளிய மக்கள் 12,000 ரூபாய் மதிப்புள்ள சொத்தினைப் பெற்று பொருளாதார நிலையில் உயருவதுடன் தொடர்ந்து வருவாய் பெறும் வாய்ப்பினையும் ஏற்படுத்தும் ஒரு முக்கியத் திட்டமாக இதை அரசு கருதுகிறது.

**34.** பசுந்தீவனங்களின் பற்றாக்குறை கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறன் குறைவதற்கு ஒரு முக்கிய காரணமாக உள்ளது. தமிழ்நாட்டில் பசுந் தீவன பற்றாக்குறை 20 விழுக்காடாக உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் அளவு ஆண்டுக்கு 100 இலட்சம் டன் என்பது

குறிப்பிடத்தக்கது. பல்வேறு திட்டங்களின் மூலமாக பசுந்தீவன உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டாலும், உற்பத்தியின் அளவு தேவையை விட மிகக் குறைவாகவே உள்ளது. மேலும், கோடையிலும், பசுந்தீவனப்பயிர் சாகுபடிக்கு வாய்ப்பில்லாத காலங்களிலும் தேவையான உலர், பதப்படுத்தப்பட்ட தீவனங்களின் இருப்பையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. **இந்த அரசு, தீவன உற்பத்தியை மேம்படுத்த சிறப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கும். நடப்பு ஆண்டில் 24,000 ஏக்கரில் குறிப்பிட்ட பசுந்தீவன வளர்ப்பிற்கு மானியம் வழங்கப்படும். நுண்ணீர் பாசனத் திட்டம், தீவனப் வளர்ப்பிற்கும் விரிவுபடுத்தப்படும். நுண்ணீர், பாசன தெளிப்பான்கள், வேகத் தெளிப்பான்கள் போன்றவற்றைப் பயன்படுத்த சிறு குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் வழங்கப்படும். அவற்றோடு, தீவன சேதாரத்தைக் குறைக்க, 50 விழுக்காடு மானியத்தில் 5,000 புல்வெட்டிகளும், 5,000 நறுக்கும் இயந்திரங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இத்தகைய பசுந்தீவன உற்பத்தித் திட்ட மானியத்திற்கென, அரசு, 20 கோடி ரூபாயை இந்த ஆண்டு ஒதுக்கியுள்ளது.**

## மீன் வளம்

35. மீன்பிடித் தொழிலை நவீனப்படுத்துவதையும் மீனவர்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதையும், இந்த அரசு முன்னுரிமைத் திட்டங்களாகக் கருதுகிறது. மாநிலத்தின் மொத்த கடல்மீன் உற்பத்தி செய்யக்கூடிய திறன் 7 இலட்சம் டன் ஆகும். ஆனால் 4.04 இலட்சம் டன் உற்பத்தியை மட்டுமே நாம் எட்டியுள்ளோம். அதேபோல் மாநிலத்தின் உள்நாட்டு மொத்த மீன்உற்பத்தி செய்யும் திறனான 4.5 இலட்சம் டன் ஆக இருந்தாலும், 1.71 இலட்சம் டன் உற்பத்தியை மட்டுமே தமிழ்நாடு அடைந்துள்ளது. ஆழ்கடல் மீன்பிடி தொழிலுக்கு ஏற்ற படகுகளை நிறுத்தி வைக்கும் வசதி போதுமானதாக இல்லாததும், பதப்படுத்துதல், சேமிப்பு, சந்தை வசதிகளில் உள்ள குறைபாடுகள் ஆகியவையும் மீன் உற்பத்தியை அதிகரிப்பதில் தடைகளாக உள்ளன. உலக வங்கியின்

சுனாமி மறுசீரமைப்புத் திட்ட நிதியிலிருந்து, 35.65 கோடி ரூபாய் செலவில் நாகப்பட்டினத்திலும், 27.56 கோடி ரூபாய் செலவில் பழையாற்றிலும் நவீன மீன்பிடி துறைமுகங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 75 கோடி ரூபாய் செலவில் பூம்புகாரிலும், 60 கோடி ரூபாய் செலவில் இராமேஸ்வரத்திற்குத் தெற்கிலுள்ள மூக்கையூரிலும் மீன்பிடித் துறைமுகங்களை அமைக்க மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கோரப்பட்டுள்ளது. இதுதவிர 7 கடலோர மாவட்டங்களில், 12 புதிய மீன் இறங்கு தளங்கள் 74 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

36. ஆழ்கடல் மீன்பிடித்தலை ஊக்குவிக்க விசைப் படகுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது அவசியமாகும். தற்போது மீன்பிடி தொழிலில், சுமார் 56,000 பல்வேறு வகையான படகுகள் ஈடுபட்டுள்ளன. இதில் 6,000 படகுகள் மட்டுமே விசைப் படகுகளாகும். **இயந்திரப் படகுகள், ஆழ்கடல் சூரை மீன்பிடி தூண்டில் படகுகள் (deep sea tuna liners) ஆகியவற்றை வாங்குவதற்கு 25 விழுக்காடு மானியத்தில் ஐந்து இலட்சம் ரூபாய் வரை மீனவர்களுக்கு நிதியுதவி வழங்கும் ஒரு புதிய திட்டத்தை இந்த அரசு தொடங்கும். இந்த ஆண்டு 500 புதிய விசைப் படகுகள் அல்லது ஆழ்கடல் சூரை மீன்பிடி தூண்டில் படகுகளுக்குத் தேவையான மானியமாக 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த அரசின் இன்னொரு தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆழமற்ற கடல் பகுதிகளில் மீன் அளவு மிகக் குறைவாக இருப்பதால் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்க, அரசு–தனியார் ஒத்துழைப்புடன், சோதனை அடிப்படையில் நடுக்கடலில் மீன் பதப்படுத்தும் அலகு ஏற்படுத்தப்பட்டு, தாய்க் கப்பல் (Carrier Mother Vessel) ஒன்று நடுக்கடலில் நிறுத்தி, வணிக ரீதியில் ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு (Baby vessel) தேவையான உதவிகளை அளித்து மீன் பிடிக்கும் புதிய உத்தியை சோதனை முறையில் இந்த ஆண்டு அரசு மேற்கொள்ளும்.**

37. தேவையான கட்டமைப்புகள் மீன்பிடித் தொழிலின் நீடித்த வளர்ச்சிக்கு அவசியமானவை. **தமிழகத்தின் கடலோரப் பகுதியில் அரசு–தனியார் ஒத்துழைப்பின் மூலம் 13 மீன்பிடி நகரங்களில், மீன் பதப்படுத்தும் பூங்காக்கள், மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் அமைச்சகத்தின் நிதியுடன் தேசிய மீன் வளர்ச்சிக் கழக நிதியையும் பெற்று படிப்படியாக ஏற்படுத்தப்படும். 2011–2012 ஆம் ஆண்டு சென்னை, நாகப்பட்டினத்தில் இத்தகைய குளிர்ப்பதன வசதியுடன் கூடிய மீன் பதப்படுத்துதல், கட்டுமான வசதிகள் முன்னோடித் திட்டங்களாக மேற்கொள்ளப்படும்.**

38. மீனவர் நலனுக்கு எப்பொழுதும் இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த அரசு பதவி ஏற்றவுடனே மீன்பிடித் தடை காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையான 1000 ரூபாயை 2000 ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளது. **இந்த அரசு, மற்றொரு வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக, மீன்பிடி அல்லாத காலங்களில் மீனவக் குடும்பம் ஒன்றுக்கு 4,000 ரூபாய் சிறப்பு உதவித் தொகை வழங்கும். இதனால் அரசுக்கு 72 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். இத்தொகை தேசிய மீனவ சேமிப்பு மற்றும் நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு மீனவருக்கும் தற்போது வழங்கப்படும் 1,800 ரூபாயுடன் கூடுதலாகக் கிடைக்கும்.**

39. நமது மீனவர்களின் மீன்பிடி உரிமையை நிலைநாட்டுவதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. 1974, 1976 ஆம் ஆண்டுகளில் இந்தியா–இலங்கை நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் இழந்த கச்சத்தீவை மீட்பதற்கு இந்த அரசு எடுத்துவரும் முனைப்பான நடவடிக்கைகளே இதற்குச் சான்றாகும். நில ஆவணங்களுக்கு வருவாய்த் துறையே பொறுப்பு என்பதால், கச்சத்தீவை மீட்பது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்த ரிட் மனுவில் தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை தன்னையும்

இணைத்துக்கொள்ள ஆணை உறுதி வாக்குமூலம் (affidavit) தாக்கல் செய்துள்ளது.

## பாசனமும் வெள்ளத் தடுப்பும்

40. தமிழ்நாடு, நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலமாகும். பாசன வசதிக்கு முற்றிலும் பருவமழையை தமிழ்நாடு நம்பி உள்ளது. எனவே ஆற்று வடிநில திட்டமிடல் மூலம் நீரை திறம்பட பயன்படுத்துவதும், மழை நீரை சேகரிப்பதன் மூலம் நிலத்தடி நீரை பெருக்குவதும் அவசியமானதாகும். **இந்த அரசு உலக வங்கி உதவியுடன் "அணைக்கட்டு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (Dam Rehabilitation and Improvement Project)" ஒன்றைச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதலை அளித்துள்ளது. இதில் 2011 ஆம் ஆண்டு தொடங்கி ஆறு ஆண்டுகளுக்கு 745.49 கோடி ரூபாய் செலவிடப்படும். இதன் மூலம் 104 அணைக்கட்டுகள் புனரமைக்கப்படும்.** 2011–2012 ஆம் ஆண்டு 18 அணைக்கட்டுகள் புனரமைக்கப்பட்டு அவற்றின் நீர்ப் பயன்பாட்டுத் திறன் மேம்படுத்தப்படும்.

41. நிலத்தடி நீர் ஆதாரத்தை மேம்படுத்தவும் இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. பதிமூன்றாவது நிதிக்குழு பரிந்துரைப்படி பாரம்பரிய நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 50 கோடி ரூபாய் 2011–2012 ஆம் ஆண்டில் செலவிடப்படும். 'நபார்டு' வங்கியின் ஊரகக் கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து 67 கோடி ரூபாய் செலவில், 4 திட்டங்களின் கீழ் ஏரிகளின் கொள்ளளவு, நீர் உபயோகத்திறன் ஆகியவை அதிகரிக்கப்படும். 2011–2012 ஆம் ஆண்டில், செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டல் திட்டத்தின் மூலமாக நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கு 11.27 கோடி ரூபாய் செலவில் உரிய நீர் ஆதார கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும். வேளாண் பொறியியல் துறை பல்வேறு நீர் சேகரிப்பு முயற்சிகள் வாயிலாக நீர்பயன்பாட்டுத் திறனை உயர்த்த பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

திருக்கோவிலூர், குண்டாறு, கொடகனாறு, வைகை, தெற்குவெள்ளாறு, கொடிவேரி போன்ற ஆற்றுப் பாசனப் பகுதிகளில் இத்தகைய பணிகள் நடைபெற்று வருகின்றன. 2011–2012 ஆம் ஆண்டு கால்வாய், வாய்க்கால்களின் நீர் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்த, பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 74 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

42. 15.22 இலட்சம் ஏக்கர் பாசனப் பரப்புப் பகுதி பயன் பெறும் வகையில், 60 உப வடிநிலப் பகுதி அணைக்கட்டுகளை உள்ளடக்கி உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ஆறாண்டுத் திட்டமான தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM) நான்காவது கட்டத்தை எட்டியுள்ளது. நடப்பாண்டில் நான்காவது கட்டப்பணிகளின் கீழ், ஐந்து உப வடிநிலப் பகுதிகளில் 1,90,260 ஏக்கர் பாசனப் பரப்பு பயன் பெறும் வகையில், 761 ஏரிகள், ஐந்து அணைக்கட்டுகள், 1056 கி.மீ. நீளமுள்ள துணைக் கால்வாய் புனரமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்படும். இதற்கென 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 367 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

43. தமிழ்நாட்டிலுள்ள நதிகளை இணைப்பதை, இந்த அரசு முதன்மையானப் பணியாகக் கருதுகிறது. நதிநீர் இணைப்பால், பாசன வசதிகளை மேம்படுத்துவது, வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவது, உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து போன்ற பல பயன்கள் ஏற்படும். இதன் முதல் கட்டமாக காவிரி ஆற்றை வைகை, குண்டாறு ஆறுகளுடன் இணைப்பதற்காக, காவிரி ஆற்றில் கட்டளைக் கதவணை அமைக்கும் பணி 189 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்கெனவே நடைபெற்று வருகிறது. இப்பணிக்கு 2011–2012 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு 93 கோடி ரூபாயாகும். **இதன் அடுத்த கட்டமாக கட்டளைக் கதவணையை குண்டாறு ஆற்றுடன் இணைப்பதற்குரிய பணியினை இவ்வரசு தொடங்கும். மத்திய அரசு உதவியுடன் வெள்ள மேலாண்மைப் பணியாக இரண்டு கட்டத்தில் இப்பணி செய்யப்படும். முதற் கட்டமாக கட்டளை அணைக்கட்டிலிருந்து கால்வாய்**

**அமைத்து அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறுடன் 3,787 கோடி ரூபாய் செலவில் இணைக்கப்படும். இரண்டாவது கட்டத்தில் மணிமுத்தாறு, வைகை ஆற்றுடன் குண்டாறு 1,379 கோடி ரூபாய் செலவில் இணைக்கப்படும். இந்த வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கு 5,166 கோடி ரூபாய் மதிப்பில் விரிவான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்படும். எனினும் மத்திய அரசின் உதவிக்காக காத்திராமல் மாநில அரசே இப்பணியினை உடனடியாகத் தொடங்கும். இப்பணிக்காக 2011–2012 ஆம் ஆண்டில் 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.** இதே போன்று மற்றொரு நதிநீர் இணைப்புத் திட்டமான நம்பியாறுடன் தாமிரபரணி ஆற்றை இணைக்கும் பணி 369 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டில் இப்பணிக்காக 90 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

44. காவிரி நீர் தீர்ப்பாயத்தின் 5.2.2007 ஆம் நாளிட்ட இறுதித் தீர்ப்பை இந்திய அரசிதழில் அறிவிக்கையாக வெளியிட நீர்வள அமைச்சகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென இவ்வரசு வலியுறுத்தும். காவிரி நீர் தீர்ப்பாயத்தின் தீர்ப்பை முழுமையாகச் செயல்படுத்த காவிரி மேலாண்மை வாரியம் தொடங்கப்பட வேண்டுமென கடுமையாக வலியுறுத்துவோம். முல்லை பெரியாறு அணை குறித்து இவ்வரசு எடுத்துள்ள நிலையையே மீண்டும் வலியுறுத்தும். இவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் கேரள அரசு தற்போதுள்ள நிலைக்கு மாறாக புதிய அணை கட்ட எந்தவித நடவடிக்கையையும் எடுக்கக்கூடாது என்று மத்திய அரசு வலியுறுத்த வேண்டுமென இவ்வரசு கேட்டுக்கொள்கிறது. இதே போன்று ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் கட்டுவதை நிறுத்தும் பொருட்டு மத்திய அரசின் முன்னிலையில் அந்த மாநில அரசுடன் நடந்த பேச்சுவார்த்தை பயனின்றி முடிவுற்றதால், இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் மூலம் விரைவாகத் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சுற்றுச்சூழலும், வனப் பாதுகாப்பும்

**45.** தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் **21.76** விழுக்காடு காடுகள், மரங்கள் உள்ள பகுதிகளாக உள்ளன. மாநிலத்தின் நிலப்பரப்பில் **33** விழுக்காடு வனப்பகுதியாக இருக்க வேண்டும் என்ற இலக்கை அடையவேண்டும் என்பது தேசிய வனக் கொள்கையாகும். எனவே, வனத்துறை, **தனியார் நிலங்களில் மரங்கள் வளர்க்கும் திட்டத்தை** அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் **1,21,500** ஏக்கர் தனியார் நிலங்களில் **43.74** கோடி ரூபாய் செலவில் **3** கோடி மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதனால் **71,454** விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் **2011–2012** ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். **தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்–இரண்டாம் கட்டப்பணிகளின்** (**Tamil Nadu Afforestation Project II**) **தொடர்ச்சியாக, 2011–2012 ஆம் ஆண்டில் ஜப்பானிய உதவியுடன் 686 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம்** (**Biodiversity Conservation and Greening Project**) **தொடங்கப்படும்.**

**46.** மக்கட்தொகைப் பெருக்கத்தாலும், தொழில் மயமாக்கலாலும் விலங்குகளின் இயற்கை வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. இதன் விளைவாக, வன விலங்குகள் அடிக்கடி காடுகளை விட்டு வெளியேறி மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைவதால் மனிதர்கள் வனவிலங்குகளை எதிர்கொள்ளும் சூழ்நிலை உருவாகிறது. விலங்குகளின் வாழ்விடங்களை மேம்படுத்துவது, அவை விரும்பி உண்ணும் பயிர்களை காட்டுப் பகுதிகளிலேயே வளர்ப்பது, காடுகளின் எல்லை ஓரமாக தடைகளை அமைப்பது, கிராம மக்களின் திறனை மேம்படுத்துவது, விழிப்புணர்வு ஏற்படுத்துவது, மனித உயிருக்கும், விவசாயப் பயிர்களுக்கும், உடமைகளுக்கும் விலங்குகளால் ஏற்படும் பாதிப்பிற்கு உடனடியாக இழப்பீடு வழங்குவது போன்ற பல்முனை அம்சங்களை உள்ளடக்கிய செயல்திட்டத்தின் மூலம் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும்.

**இச்செயல் திட்டத்தைப் படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டுவரும் முதற்கட்ட பணிக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். மனித உயிரிழப்பிற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை 1.50 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.**

**47.** சுற்றுச்சூழலின் சமநிலையை நிலைநிறுத்த நாம் சார்ந்திருக்கும் உயிர்சூழல் அமைப்புகளை முறையாக பாதுகாப்பது அவசியமாகிறது. **அருகிவரும் சதுப்பு நிலங்களையும் அதைச் சார்ந்த உயிரினங்களின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியை சீராக்கி பாதுகாக்க விரிவான திட்டம் ஒன்றை இந்த அரசு தயாரித்து செயல்படுத்தும்.** ஆளுநர் உரையில் அறிவித்துள்ளவாறு முதன் முறையாகவோ அல்லது மறுசுழற்சி மூலமோ தயாரிக்கப்படும் 60 மைக்ரானுக்குக் குறைவான 8 X 12” அளவுக்குள் உள்ள பாலிதின் பைகளுக்கு தடை விதிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. **பிளாஸ்டிக் கழிவுகளைத் திரட்டி சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்துவதையும், அதனை முறையாக அகற்றுவதையும் மாநிலம் தழுவிய ஒரு மக்கள் இயக்கமாக மேற்கொள்ள இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி, சோதனை அடிப்படையில் சாலைகள் அமைப்பதற்காக, 50 கோடி ரூபாய் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சோதனை முறையில் சாலைகள் அமைக்க இத்தகைய பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படும்.**

## பொது விநியோகத் திட்டமும் விலைவாசிக் கட்டுப்பாடும்

**48.** அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பை வழங்கும் வகையில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை

தமிழ்நாடு பின்பற்றி வருகிறது. இந்த அரசு பதவி ஏற்றவுடன் அரிசி பெறத் தகுதியான 1.83 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், இலவச அரிசி வழங்கி தேர்தல் வாக்குறுதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். இந்த அரசு சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணையை சலுகை விலையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து வழங்கும். இந்தப் பொது விநியோகத் திட்டம் மேலும் சீரமைக்கப்பட்டு, தவறுகள் நடைபெறாவண்ணம் திறம்பட கண்காணிக்கப்படும். அரிசி கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடுபவர் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த அரசு பதவியேற்ற கடந்த இரண்டு மாதங்களுக்குள் கள்ளச் சந்தை தடுப்புச் சட்டத்தின் கீழ் 67 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பொது விநியோகத் திட்ட அரிசியை கள்ளத்தனமாகக் கடத்தியவர்களுக்கு எதிராக 1,519 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 6,227 குவிண்டால் அரிசி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. **முந்தைய அரசால் கலைக்கப்பட்ட ஐந்து எல்லையோர ரோந்துப் படைகள் மீண்டும் புதுப்பிக்கப்படும். எல்லைப் பகுதிகளில் அரிசிக் கடத்தலை தடுப்பதற்காக, ஒரு புதிய உணவு வழங்கல் குற்றத் தடுப்புப் பிரிவு பொள்ளாச்சியில் ஏற்படுத்தப்படும். இன்றியமையாப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்க இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பது இதன்மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இலவச அரிசி வழங்குவதனால் ஏற்படும் கூடுதல் மானியத்தையும் கணக்கில் கொண்டு 2011–2012 ஆம் ஆண்டிற்கு உணவு மானியத்திற்காக திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 4,500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**49.** விலை உயர்வை நிரந்தரமாகக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் பொருட்களின் தேவைக்கும், உற்பத்திக்கும் உள்ள இடைவெளியை சரிசெய்வதே உறுதியான தீர்வாக அமையும் என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனினும், விலை உயர்வைக் கட்டுப்படுத்த எடுக்கவேண்டிய குறுகிய கால நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கும்.

இதன் அடிப்படையில் **பொது விநியோகத் திட்டத்தைச் செம்மைப்படுத்துவதோடு மட்டுமல்லாது துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், கோதுமை மாவு, மசாலாப் பொட்டலங்கள் ஆகியவற்றைச் சலுகை விலையில் வழங்கும் பொது விநியோக சிறப்புத் திட்டத்தை 31.12.2011 வரை இந்த அரசு நீட்டித்துள்ளது. விலை ஏற்றத்தின் போக்கைத் தொடர்ந்து கண்காணித்து, பொருட்களில் நிலையற்ற விலை மாற்றங்கள் ஏற்படும்போது மத்திய அரசின் மூலமாக முன்பேர வர்த்தக ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று அத்தகைய பொருட்களை முன்பேர வர்த்தக பட்டியலிலிருந்து நீக்குவதற்கான முயற்சியை மேற்கொள்வோம். இன்றியமையாப் பொருட்களின் விலை அளவுக்கு அதிகமாக உயரும்போது அவற்றைக் கொள்முதல் செய்து கூட்டுறவு பண்டக சாலைகள் மூலமாக நுகர்வோர்களுக்கு அடக்க விலையில் வழங்குவதற்கு ஏதுவாக 50 கோடி ரூபாய் தொடக்க நிதி இருப்புடன் கூடிய ஒரு விலைக் கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட உள்ளது.** மத்திய அரசு சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலையை 50 ரூபாய் உயர்த்திய போதும் நுகர்வோர் நலன் கருதி அதன் விற்பனை விலையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், அதன் மீதான மதிப்புக் கூட்டு வரியை 1.7.2011 முதல் ரத்து செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கை மகளிர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதன் மூலமாக மாநில அரசிற்கு 120 கோடி ரூபாய் வரி வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் நுகர்வோருக்கு ஒரு சிலிண்டருக்கு 15 ரூபாய் பயன் கிடைக்கும்.

## தொழில்துறை

50. உலக அளவில் தமிழ்நாடு உற்பத்தி சார்ந்த தொழில் முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக கருதப்படுகிறது. வாகனங்கள், அவற்றின் உதிரிப் பாகங்கள், பொறியியல், துணி, தோல் பொருட்கள் உற்பத்தி, தகவல் தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள் ஆகியவற்றின் முன்னணி உற்பத்தியாளர்களின் உற்பத்தி மையமாக இம்மாநிலம்

நிலைபெற்றுள்ளது. இருப்பினும், சமீபகாலத்தில் இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சி பின்னடைவைச் சந்தித்து வருகிறது. பதினோறாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட 9.2 விழுக்காடு என்ற தொழில் வளர்ச்சி இலக்கில் 2007-2008 முதல் 2010–2011 வரையிலான முதல் நான்கு ஆண்டு காலத்தில் 4.43 விழுக்காடு வளர்ச்சி மட்டுமே எய்தப்பட்டுள்ளது. இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் (Centre for Monitoring Indian Economy) 2010–2011 ஆண்டிற்கான அறிக்கையின்படி, உற்பத்திப் பிரிவிற்கான முதலீட்டை ஈர்ப்பதில் தமிழ்நாடு ஏழாமிடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது. உற்பத்தி சார்ந்த வளர்ச்சி சிறப்பாக அமைந்தால்தான் பொருளாதார நிலை மீள்வது உறுதி பெறும். முதலீட்டாளர்களுக்கு உகந்த முனைப்பானக் கொள்கைகளை உருவாக்குவதாலும், மின்சாரம் வழங்குவதை மேம்படுத்தி அடிப்படைக் கட்டமைப்பில் உள்ள இடைவெளியை நீக்குவதாலும், திறன் வாய்ந்த தொழிலாளர்களை உருவாக்குவதாலும் அதிகளவில் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை பெற்று, தற்போதுள்ள மந்த நிலையினை மாற்றி தொழில்துறையில் கூடுதல் வளர்ச்சியினைக் கொண்டு வர இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும். **இந்த அரசு மோட்டார் வாகனங்கள், அதன் உதிரி பாகங்கள் தயாரித்தல், உயிரி தொழில்நுட்பம், மருந்துகள் தயாரிப்பு போன்ற துறைகளுக்கென தனித்தனியே துறை சார்ந்த திட்டவட்டமானத் தொழிற் கொள்கைகளை வகுப்பதுடன் புதிய தொழிற் கொள்கை 2011 ஒன்றையும் உருவாக்கும்.**

**51.** பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத துறைகளிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து, கட்டமைப்பு வசதிகளை வளப்படுத்துவதற்கு தொகுப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றும் நோக்கில், ஏற்கெனவே இந்த ஆண்டு ஆளுநர் உரையில் அறிவித்தவாறு '**2025 தொலைநோக்கு திட்டத்தை**' தயாரிக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. **மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒன்றினையும்**

**இந்த அரசு உருவாக்கும்.** இந்த வாரியம், தொடர்ந்து பல்வேறு திட்டக் கருவினைக் கண்டறிந்து, தக்க மதிப்பீடு செய்து அவற்றின் தன்மைக்கேற்ப அரசு—தனியார் பங்களிப்பு முறையிலோ, அரசே நேரடியாகவோ இத்திட்டங்களை நிறைவேற்றுவதை உறுதி செய்யும். இத்தகைய அமைப்பு அடிப்படையிலான ஏற்பாட்டின் மூலம் ஓர் இணக்கமான செயலாக்கச் சூழ்நிலை உருவாக்கப்பட்டு, முதன்மை, இரண்டாம், மூன்றாம் நிலைத் துறைகளின் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் கட்டமைப்புத் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்யும் என உறுதியாக நம்புகிறேன்.

**52.** தொழில் முதலீட்டை ஈர்ப்பதற்கு தொழில் நிறுவனங்களுக்கு வழங்க போதிய அளவில் நிலம் அரசின் வசம் இருப்பது அவசியமாகிறது. தற்போதைய சூழ்நிலையில் நிலம் கையகப்படுத்தும் பணி கடுமையாகவும், பொதுமக்களின் எதிர்ப்பினால் முடிவில்லா வழக்குகளைச் சந்திக்கவும் நேரிடுகிறது. நிலம் குறித்த பலப் பிரச்சனைகளால் புதிய முதலீடுகளைப் பெறுவதிலும், தொழில் வளர்ச்சி கட்டமைப்பு மேம்பாட்டினை மேற்கொள்வதிலும் தடைகள் ஏற்படுகின்றன. பெரிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் மாநிலங்களுக்கிடையே கடும் போட்டி நிலவும் தற்போதைய சூழ்நிலையில் அரசிடம் போதிய நிலம் இல்லையெனில், இத்தகைய முதலீடுகளை ஈர்க்கும் திறனை அரசு இழந்து விடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அரசின் வசம் உள்ள நிலங்களை ஒருங்கிணைத்தும், நில உரிமையாளர்களை பாதிக்காதவண்ணம் தனியார் நிலத்தைக் கையகப்படுத்தியும் ‘நில வங்கியை’ ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும். தற்போதுள்ள கட்டாய நில எடுப்புச் சட்டத்தில் சில குறைபாடுகள் உள்ளதால் **நிலங்களை ஒருங்கிணைத்து அதன் பயனை அனைவரும் பகிர்வது போன்ற புதுமையான வழிமுறைகளை உள்ளடக்கி ஒரு புதிய நில எடுப்புக் கொள்கையை இந்த அரசு உருவாக்கும். இதன் மூலம் போதிய அளவு நில வங்கியை உருவாக்கி தொழிற் பூங்காக்கள் மற்றும் அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

**53.** ஏற்கெனவே இம்மாநிலத்தில் வாகன தொழிற்சாலைகள், தகவல் தொழில் நுட்பம் போன்ற முக்கியமான துறைகளில் பெருமளவில் பன்னாட்டு முதலீடுகள் வெற்றிகரமாக ஈர்க்கப்பட்டுள்ள நிலையில் உற்பத்தித் துறையினை இந்த அரசு தொடர்ந்து வலுப்படுத்தும். இந்த அரசு 21,500 கோடி ரூபாய் அளவிற்கு முதலீட்டு வாய்ப்புள்ள 22 பெரும் திட்டங்கள் குறித்து பெரிய தொழில் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து வருகிறது. கொரியா, ஜப்பான், தாய்லாந்து போன்ற வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு அதிக ஆர்வம் கொண்டுள்ளனர். இந்நாடுகளிலிருந்து வரும் தொழில் முதலீட்டாளர்கள் தொழில் நிறுவனங்களை அமைக்க தனிப்பட்ட தொழிற்பேட்டைகளை இந்த அரசு உருவாக்கும். இந்நிறுவனங்களில் பெரும்பாலானவை ஏற்றுமதி இறக்குமதிக்கு எண்ணூர் துறைமுகத்தைப் பயன்படுத்துவதால் வடக்குத் துறைமுக இணைப்புத் திட்டத்தின் வாயிலாக எண்ணூர் துறைமுகத்திற்கும், ஐந்தாம் எண் தேசிய நெடுஞ்சாலைக்கும் நேரடி இணைப்பு உருவாக்கப்படும்.

**54.** இந்த அரசு மாநிலத்தின் தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. **மதுரை–தூத்துக்குடி நெடுஞ்சாலையை, தற்சார்புடைய தொழில் வளர்ச்சி பெருவழிப் பாதையாக இந்த அரசு உருவாக்கும் என்று ஏற்கெனவே அறிவித்துள்ளது. இதுகுறித்து விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையில் உற்பத்தி வணிக முதலீட்டு பகுதி, விவசாய வணிக முதலீட்டு பகுதி, அறிவுசார் மையம், சிறப்புச் சுற்றுலா முதலீட்டு மண்டலம் ஆகியவற்றை அமைப்பதற்கு தகுந்த இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.** அரசு–தனியார் பங்களிப்பு அடிப்படையில் இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**55.** தொழில் துறையின் வளர்ச்சிக்கு அரசு பொதுத்துறை நிறுவனங்கள் கூடுதல் பங்களிக்கும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்

அதனுடைய ஆலங்குளம், அரியலூர் அலகுகள் மூலம் தமிழ்நாட்டின் மொத்த சிமெண்ட் உற்பத்தியில் 3.6 விழுக்காடு மட்டுமே உற்பத்தி செய்கிறது. **தற்போது 165 கோடி ரூபாய் செலவில் ஆலங்குளம் அலகின் உற்பத்தித் திறனை இரண்டு இலட்சம் டன்னிலிருந்து நான்கு இலட்சம் டன் ஆகவும், 350 கோடி ரூபாய் செலவில் அரியலூர் அலகின் உற்பத்தித் திறனை ஐந்து இலட்சம் டன்னிலிருந்து பதினைந்து இலட்சம் டன் ஆகவும் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

## குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்

56. நாட்டிலேயே தமிழ்நாட்டில் தான் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. தேசிய அளவில் இது 15.07 விழுக்காடாகும். குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் அதிக அளவு வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய திறன் கொண்டவை. பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் குறு, சிறு நிறுவனங்களை ஊக்குவிக்க, தொழிலக குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (Cluster Development Programme) 50 தொழிலக குழுமங்களை உருவாக்க உத்தேசிக்கப்பட்டது. இதுவரை 15 தொழிலக குழுமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2011–2012 ஆம் ஆண்டில் ஒன்பது தொழில் தொகுப்புகள் உருவாக்கப்படும். வரும் ஆண்டுகளில் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க நிலம் ஒதுக்கீடு செய்ய சிட்கோ நிறுவனம் 25 இடங்களில் 2,256 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்துள்ளது. தொழிற்பேட்டைக்கு உகந்த செயலற்றுப்போன கூட்டுறவு நூற்பாலைகளின் நிலங்களை புதிய தொழிற்பேட்டைகள் அமைக்க பயன்படுத்தி சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை உருவாக்கவும், வேலைவாய்ப்பைப் பெருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். 2011–2012 ஆம் ஆண்டில் 23.50 கோடி ரூபாய் செலவில் ஏழு புதிய தொழிற்பேட்டைகளில் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், 27.49 கோடி ரூபாய் செலவில் எட்டு

தொழிற்பேட்டைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் சிட்கோ நிறுவனம் நடவடிக்கை எடுக்கும்.

57. நில ஒதுக்கீட்டிற்கான விலைக் கொள்கை, நில வங்கி உருவாக்குதல், அது தொடர்பான நடைமுறைகளை எளிமையாக்குதல் போன்ற நடவடிக்கைகள் வாயிலாக சிட்கோ நிறுவனத்தின் செயல்பாடுகள் சீரமைக்கப்படும். தற்போது, குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் தொடங்க 15 விழுக்காடு மூலதன மானியம் வழங்கப்படுகிறது. **இந்த அரசு குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனத் துறையில் முதலீடுகளை ஊக்குவிக்க கூடுதல் ஊக்க உதவிகள் வழங்குவதற்கான வழிவகைகளை ஆராயும். முதற்கட்டமாக, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், குறு, சிறு, நடுத்தர தொழிற்சாலைகளுக்கு மூன்று சதவீத வட்டி தள்ளுபடியில் கடன் வழங்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகம் உள்ள சணல், கயிறு அடிப்படையிலான தொழில்களுக்கு உள்ள வாய்ப்பை கருத்தில் கொண்டு, 2011–2012 ஆம் ஆண்டில், 100 கோடி ரூபாய் மூலதனத்தில் இத்தகு தொழிற்சாலைகளை அமைக்க இந்த அரசு கடனையும், தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கும். இதனால், ஏராளமான படித்த இளைஞர்கள் குறைந்த வட்டியில் கடனைப் பெற்று, தொழில் அலகுகளை தொடங்க வாய்ப்புகள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

## திறன் வளர்ப்பு, வேலைவாய்ப்பு, தொழில் முனைவோர் மேம்பாடு

58. தமிழ்நாடு, திறமையான தொழிலாளர் ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில் வளர்ச்சியில் முற்போக்கான மாநிலமாகத் திகழ்கிறது. தற்போது மாநிலத்தில் 38,601 தொழில் நிறுவனங்கள் உள்ளன. விரைவான தொழில் வளர்ச்சி காரணமாக, மாநிலத்தில் திறன்மிகு மனிதவள (skilled manpower) தேவைக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆனால், அதே சமயம் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலைக்காக 68 இலட்சம் இளைஞர்கள் பதிவு செய்து

உள்ளனர். இந்திய தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry) வெளியிட்ட ஆய்வறிக்கையில், 2015 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில், 130 முதல் 150 இலட்சம் வரை திறன்மிக்க பணியாளர்களுக்கான கூடுதல் தேவை ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய திறன்மிக்க தொழிலாளர்களுக்கான தேவை, உற்பத்தி சார்ந்த தொழில்கள், நெசவுத் தொழில், மோட்டார் வாகனத் தொழில், சில்லரை வணிகம், தகவல் தொழில்நுட்பத்துறை, மின்னணு உற்பத்தி, நிதி சார்ந்த சேவைத் துறைகள் போன்ற துறைகளில் இருக்கும் எனக் கருதப்படுகிறது. தேசிய தகவல் தொலைத் தொடர்பு நிறுவனக் கூட்டமைப்பு (NASSCOM) மதிப்பீட்டின்படி, ஆண்டுதோறும், பட்டம் பெற்று வெளியேறும் 3.5 இலட்சம் பட்டதாரி மாணவர்களில் 20 விழுக்காடு மட்டுமே வேலைவாய்ப்பைப் பெற தகுதி உடையவர்களாக உள்ளனர் என்றும், தகவல் தொடர்புத் திறன் (communication skill) கணினி அறிவு போன்ற மென் திறமைகளில் அவர்களுக்கு போதிய திறமையின்மையே இதற்குக் காரணங்கள் என்றும் தெரிவிக்கிறது.

59. மாநில அரசு, **தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம் (Tamil Nadu Skill Development Mission)** மூலமாக தனியார் தொழில் நிறுவனங்களோடு இணைந்து வேலைவாய்ப்புக்குரிய திறன் தேவையில் உள்ள குறைவைக் கண்டறிந்து, அதற்கேற்ப சான்றிதழ் அடிப்படையில் வேலைவாய்ப்புக்கு உகந்த பயிற்சிகளை (Modular Employable Skill) வழங்கும் பாடத்திட்டங்களை வடிவமைக்கும். அரசு கலை—அறிவியல் கல்லூரிகளிலும் அரசு உதவி பெறும் கலை—அறிவியல் கல்லூரிகளிலும் மென்திறன் பயிற்சியும், வாழ்வாதாரத் தொழிற் பயிற்சி (vocational training) வழங்கும் அமைப்புகள் மூலமாக, அனைத்து அரசு தொழில் பயிற்சி நிறுவனங்களில் தொழில் திறன் பயிற்சியும் வழங்கப்படும். இத்தகைய பயிற்சிகள் மூலமாக, 2011—2012 ஆம் ஆண்டில் 1.5 இலட்சம் இளைஞர்கள் மென்திறன், தொழில்நுட்பத் திறன் போன்றவற்றைப் பெறுவார்கள். திறன் மிகுந்த பயிற்சியாளர்களை தொடர்ந்து உருவாக்கும் நோக்குடன்

பயிற்றுவிப்போர் திறன் மேம்பாட்டு நிறுவனம் (Faculty Development Institution) ஒன்றை தனியார் தொழில் நிறுவனங்களுடன் அரசு இணைந்து உருவாக்கும். தமிழ்நாடு மாநிலத் திறன் பதிவுத்தொகுப்பு (Tamil Nadu State Skill Registry) தொடங்கப்பட்டு, அதன்மூலம், நமது மாநிலத்தில் தொழில் திறன் பெற்றவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு பராமரிக்கப்படும். முதற்கட்டமாக அரசு தொழில்நுட்பப் பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்றவர்கள் விவரங்களும், வேலைவாய்ப்புக்கு உகந்த பயிற்சி (Modular Employable Skill) மூலம் திறன் வளர்ப்புப் பயிற்சி பெற்றவர்கள் விவரங்களும் பதிவு செய்யப்படும்.

**60.** தற்போது தமிழ்நாட்டில் **62** அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் உள்ளன. **தமிழ்நாட்டில் திறன் மிகுந்த தொழிலாளர்களின் தேவை அதிக அளவில் உள்ளதால் இத்தகைய பயிற்சி மையங்கள் அரசின் சார்பில் கூடுதலாகத் தொடங்கப்பட வேண்டியுள்ளன. இந்த ஆண்டு 10 புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படும்.** இத்தகைய பயிற்சி நிலையங்கள் இல்லாத ஒவ்வொரு வட்டங்களிலும் ஒரு தொழிற் பயிற்சி நிலையத்தைத் தொடங்க வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கமாகும். அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மின்னணு பாடமுறை, பணிச்சூழலின் மாதிரி அடிப்படையிலான பயிற்சி (Simulator Based Training) போன்றவற்றின் மூலம் மாணவர்களின் அறிவுத்திறன் மேம்படுத்தப்படும். அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் பலர் ஏழை எளிய மாணவ மாணவியர்கள் என்பதால் அவர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு சீருடைகளும், ஒரு செட் காலணியும் இலவசமாக வழங்கப்படும். இதற்கென **4.6** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இத்தகைய பயிற்சி பெறும் மாணவர்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்தவும், பொதுமக்களிடையே இம்மாணவர்கள் பற்றிய உயர்வான கண்ணோட்டத்தை ஏற்படுத்தவும் அப்பயிற்சி நிலையங்களிலிருந்து தேர்ச்சி பெற்று வெளிவரும் மாணவர்களுக்கு அரசு முத்திரையுடன் கூடிய திறன் அடையாள அட்டை வழங்கப்படும்.

**61.** வாழ்வாதார தொழிற் கல்விப் பயிற்சிக்கு பொதுவாக உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. இத்தகைய கல்விப் பயிற்சிகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கி தரம் உயர்த்தப்பட வேண்டுமென இந்த அரசு கருதுகிறது. எனவே, உயர் தொழில்நுட்பமான **வானூர்தி பராமரிப்பு, உற்பத்தி சார்ந்த தொழில்கள், கப்பல் மற்றும் அது சார்ந்த சேவைகள் போன்ற உயர் தொழில்நுட்பங்களில் இளைஞர்களை பயிற்றுவிக்க உலகத்தரம் வாய்ந்த ஒரு பயிற்சி மையத்தை தனியார் பங்கேற்புடன் இந்த அரசு அமைக்கும். மாணவர்களிடையே சிறப்புத் திறன் வளர்க்கும் மையமாக இது விளங்குவதுடன், உலக அளவில் மதிக்கக்கூடிய வகையில் பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்கவும், அதனால் மாணவர்களுக்கு உள்ளூரிலும், உலக அளவிலும் பணி செய்யும் வாய்ப்புக்கான புதிய வழிகள் ஏற்படுத்தவும் இது வழிவகுக்கும். இந்த அறிவிப்பினால் இளைஞர்களின் நலனுக்காக அளிக்கப்பட்டிருந்த இன்னொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்படுகிறது.**

**62.** தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் திட்டம் வேலைவாய்ப்பைப் பெருக்குவதுடன் சீரான பொருளாதார வளர்ச்சிக்கும் உதவுகிறது. இளைஞர்கள் தொழில் முனைவோர்களாக உருவாகும் போது ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு வெற்றி காண அவர்களுக்கு உரிய உதவிகளைச் செய்யத் தகுந்த நிறுவன அமைப்புகள் தேவைப்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு ஏற்கெனவே உள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் சீரமைக்கப்படும். இந்த நிறுவனம் திறம்பட செயல்பட்டு இளைஞர்களை ஊக்குவிக்கவும், குறிப்பாக முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு உரிய பயிற்சிகள் அளிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இதற்காக தனியார் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து புதிய பயிற்சிகள் தொடங்கப்படும். **இத்தகைய பயிற்சிகளை மேற்கொள்வதற்கான நவீன வகுப்பறைகள், நூலகம், கணினி மையம், கூட்ட அரங்கம், தங்கும் விடுதிகள் போன்ற வசதிகளை உள்ளடக்கிய நவீன பயிற்சி வளாகம் நான்கு கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இந்த தொழில் முனைவோர் அமைப்பு நிறுவனம்,**

**நிதி நிறுவனங்கள், மத்திய, மாநில அரசுகளின் உதவிகளோடு ஒரு மூல நிதியை உருவாக்குவதோடு, தனியார் தொழில் நிறுவனங்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்து பணைய மூலதன நிதியையும் (Venture Capital) உருவாக்கும்.**

## தகவல் தொழில்நுட்பம்

63. உலகளவில் தகவல் தொழில்நுட்பத்திற்கும், அதனைச் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கும் தமிழ்நாடு ஒரு முக்கிய முதலீட்டு இடமாக அமைந்துள்ளது. இம்மாநிலத்தில் 2010–11 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி 40,000 கோடி ரூபாயாகும். தகவல் தொழில்நுட்பமும், அதனைச் சார்ந்த தொழில்களும் வளர்ச்சியடைய இந்த அரசு அனைத்து வசதிகளையும் தொடர்ந்து செய்து தரும். குறிப்பாக, இரண்டாம் நிலை நகரங்கள், ஊரகப் பகுதிகளில் இந்நிறுவனங்களைத் தொடங்குவதற்கு அனைத்து வசதிகளையும் செய்து தரும். **இரண்டாம் நிலை நகரங்களில் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட மிகப் பெரிய கட்டமைப்புகளை முழு அளவில் பயன்படுத்தும் பொருட்டு காலியாக உள்ள இடங்களைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். கணினி வன்பொருள் துறையில் முதலீட்டினை ஈர்க்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசானது புதிய தகவல் பரிமாற்ற தொழில்நுட்பக் கொள்கை 2011–ஐ உருவாக்கும். இக்கொள்கையானது மென்பொருள், வன்பொருள் தொழில்களை ஊக்குவிக்கும் விதமாகவும், முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையிலும் அமையும்.**

64. ஏற்கெனவே அறிவித்தபடி, அரசு கம்பிவட தொலைக்காட்சிக் கழகத்தைப் (Arasu Cable TV Corporation) புத்துயிரூட்ட இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. **தற்போது தஞ்சாவூர், கோயம்புத்தூர், வேலூர், திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் உள்ள ஒளிபரப்பு தலைமுனையங்கள் (head ends) மீண்டும் செயல்படத்**

**தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 50 கி.மீ சுற்றெல்லையில் இருக்கும் கம்பிவட இயக்குபவர்கள் அரசு கம்பிவட தொலைக்காட்சி சேவையைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும். 16 மாவட்டங்களில் புதிய தலைமுனையங்கள் நிறுவியும், 11 மாவட்டங்களில் தனியார் தலைமுனையங்களுடன் ஒப்பந்தம் செய்தும் ஒளிபரப்பு வசதிகளை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்தகைய தலைமுனையங்களிலிருந்து விரைவில் மாநிலம் முழுவதும் ஒளிபரப்பு தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## மின்சக்தித் துறை

**65.** துரிதமான பொருளாதார வளர்ச்சியடைய தொழிற்சாலைகளுக்கு தகுந்த விலையில் தரமான மின்சாரம் வழங்குவது அவசியமாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு மிகை மின் மாநிலமாக விளங்கியது. ஆனால் முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கடுமையான மின் பற்றாக்குறை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் கூடியுள்ள புதிய உற்பத்தித் திறன் 206 மெகாவாட் மட்டுமே. எனவே, மின் உற்பத்தியைப் பெருக்குவதே இந்த அரசின் முதன்மையானப் பணியாகும். தனியார் துறை, தனியாருடன் கூட்டு முயற்சியில் மின் உற்பத்தியைப் பெருக்குவதை ஒரு கொள்கையாக இந்த அரசு ஊக்குவிக்கும்.

**66.** மின்சாரத் துறை வளர்ச்சியடைய பல்முனை உத்திகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. உற்பத்தி சார்ந்த மேலாண்மை உத்தியாக நடந்தேறிவரும் மின் உற்பத்தித் திட்டங்களை விரைந்து முடிக்கவும், புதிய மின் உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கவும், மின் பகிர்வு கட்டமைப்புகளை பிரிக்கவும், மின் இழப்பைத் தடுக்கும் பொருட்டு பகிர்மான அமைப்புகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். நம்பிக்கையான மாற்று ஏற்பாடாக காற்று, சூரிய சக்திகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யவும்

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தேவை குறித்த மேலாண்மை உத்தியாக, எரிசக்தியை சேமிக்கும் விதமாக, சி.எப்.எல் பல்புகளை பயன்படுத்துவது, எரி சக்தி தணிக்கை, சூரிய ஒளியில் எரியும் தெருவிளக்குகள், சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டுவது ஆகியவற்றிலும் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. மின் திருட்டைக் கண்டுபிடிப்பதற்கும், தடுப்பதற்கும் தமிழ்நாடு மின்உற்பத்திப் பகிர்மானக் கழகம் ஒரு குழுவிற்கு ஐந்து முன்னாள் படைவீரர்கள் கொண்ட 80 குழுக்களை உருவாக்கியுள்ளது. இச்சிறப்புக் குழுக்கள் முதற்கட்டமாக நான்கு மாதங்கள் செயல்படும். அதன் பிறகு அக்குழுக்களின் செயல்பாட்டைப் பொறுத்து, நீட்டிப்பு வழங்குவது பற்றி பரிசீலிக்கப்படும்.

67. இம்மாநிலத்தின் தற்போதைய மின் உற்பத்தித் திறன் 10,237 மெகாவாட்டாக இருந்தாலும், சராசரி மின் உற்பத்தி 8,000 மெகாவாட்டாகவே உள்ளது. ஆனால் மின் தேவையோ 10,500 முதல் 11,500 மெகாவாட்டாக உள்ளது. எனவே, 2500 மெகாவாட் முதல் 3500 மெகாவாட் வரை மின் தட்டுப்பாடு உள்ளது. இதனை வெளிச்சந்தையில் மின்சாரம் வாங்குவதன் மூலமாகவும், காற்று மூலம் பெறப்படும் மின் சக்தியைப் பயன்படுத்துவதன் மூலமாகவும், மின்தடை–கட்டுப்பாட்டு நடவடிக்கை (Restriction and control) மூலமாகவும் சமாளித்து வருகிறோம். **ஊரக, நகர்ப்புரப் பகுதிகளில் மூன்று மணி நேரமாக இருந்த மின்வெட்டு 1.7.2011 முதல் இரண்டு மணி நேரமாக குறைக்கப்பட்டுள்ளது. மின்சக்தியின் உற்பத்திக்கேற்ப இந்த மின்வெட்டு படிப்படியாக தளர்த்தப்பட்டு, 2012 ஆகஸ்டு மாதத்திற்குள் மாநிலம் முழுவதும் முற்றிலுமாக நீக்கப்படும்.**

68. 2011–2012 ஆம் ஆண்டில் புதிய திட்டங்களால் கிடைக்கும் மின்உற்பத்தி திறன் 3,280 மெகாவாட் ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், மின் விநியோகத்தில் கணிசமான முன்னேற்றம் இருக்கும் என நம்புகிறேன். மாநில அரசு, வடசென்னை மூன்றாம் நிலை, நான்காம் நிலை உற்பத்தி, உடன்குடி, எண்ணூர் இணைப்பு,

குந்தா விசை சேமிப்பு ஆகிய மின் உற்பத்தி திட்டங்களை விரைவுபடுத்தும். இத்திட்டங்களின் மூலம் அடுத்த ஐந்தாண்டுகளில் கூடுதலாக 5,100 மெகாவாட் மின்சக்தி கிடைக்கும். **2011–2012 ஆம் ஆண்டில் 4,800 கோடி ரூபாய் செலவில் 800 மெகாவாட் உடன்குடி விரிவு திட்டம், 9,600 கோடி ரூபாய் செலவில் 1,600 மெகாவாட் உப்பூர் அனல் மின்திட்டம், 3,600 கோடி ரூபாய் செலவில் 40 ஆண்டு பழமை வாய்ந்த எண்ணூார் அனல் மின் இயந்திரத்திற்கு பதிலாக 600 மெகாவாட் திறன் கொண்ட புதிய மின் இயந்திரம் நிறுவும் திட்டம், 4,800 கோடி ரூபாய் செலவில் 800 மெகாவாட் தூத்துக்குடி நான்காம் நிலை உற்பத்தித் திட்டம் ஆகியவை தொடங்கப்படும். இதனால் அரசாலும், பல்வேறு கூட்டு முயற்சிகளாலும் மொத்தம் 22,800 கோடி ரூபாய் முதலீட்டில் 3,800 மெகாவாட் மின்சார உற்பத்தி கூடுதலாகக் கிடைக்கும்.**

69. தமிழ்நாடு மின்உற்பத்திப் பகிர்மானக் கழகம் 40,000 கோடி ரூபாய் கடன் சுமையாலும், 38,000 கோடி ரூபாய் அளவிற்கான திரண்ட நட்டத்தாலும் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. இந்த அரசு பதவி ஏற்றபோது நிதி ஆதாரங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தால், பெரும்பாலான பட்டிகளுக்கு பணம் வழங்கப்படாத நிலையே இருந்தது. இவ்வரசானது தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிதி நிலையைச் சீராக்குவதற்கு குறுகிய கால நடவடிக்கையாக நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கும், நீண்டகால அடிப்படையில் முழுமையாக நிதி நிர்வாகத்தைச் சீரமைப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

70. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் குறிப்பாக காற்று மூலம் பெறப்படும் எரிசக்தியில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. காற்றாலை மூலம் நிறுவப்பட்ட மொத்த உற்பத்தித் திறன் 6,007 மெகாவாட் ஆகும். இது இந்தியாவில் உள்ள மொத்த உற்பத்தித் திறனில் 47 விழுக்காடாகும். காற்று மூலமான எரிசக்தி உற்பத்தியில் முதலீடு

செய்வதற்கு வசதியாகவும், எரிசக்தியை மின் நிலைய இணைப்பு வரை அனுப்புவதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். கடலோர காற்று எரிசக்தி (Offshore wind mills) உட்பட காற்று மூலமான மின் உற்பத்தியை மேலும் அதிகரிக்க இந்த அரசு உரிய வழிகளைக் கண்டறியும்.

71. **ஆண்டுக்கு 20,000 தெரு விளக்குகள் வீதம் 1000 கிராமங்களில் 248 கோடி ரூபாய் செலவில் சூரிய சக்தியில் எரியும் ஒரு இலட்சம் தெரு விளக்குகளை அமைக்கும் ஒரு மகத்தான திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். இதில் மாநில அரசின் பங்கு 191.60 கோடி ரூபாயாகவும், மத்திய அரசின் மானியம் 56.40 கோடி ரூபாயாகவும் இருக்கும். 2011–2012 ஆம் ஆண்டில் 200 கிராமங்களில் 20,000 தெரு விளக்குகள் சூரிய எரி சக்தியை பயன்படுத்தும் வகையில் மாற்றியமைக்கப்படும். இதற்கென ஆகும் செலவான 49.60 கோடி ரூபாயில் மத்திய அரசு 11.20 கோடி ரூபாயையும், மாநில அரசு 38.40 கோடி ரூபாயையும் பகிர்ந்து கொள்ளும். இதேபோன்று 2011–2012 ஆம் ஆண்டில் சூரிய சக்தியுடன் கூடிய 60,000 பசுமை வீடுகள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கட்டப்படும்.** மத்திய அரசின் 48.60 கோடி ரூபாய் மானியம் உட்பட சுமார் 180 கோடி ரூபாய் செலவில் பசுமை வீடுகளுக்கு சூரிய எரிசக்தி வழங்கும் பணியினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் மேற்கொள்ளும். அரசு ஏற்கெனவே உறுதியளித்தவாறு **பசுமை எரிசக்தியை ஊக்குவிக்க அரசு–தனியார் பங்களிப்பு முறையில் திறந்த ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளைப் பின்பற்றி 50 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட சூரிய ஒளியில் மின்சாரம் தயாரிக்கும் பூங்கா ஒன்றை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் அமைக்கும்.**

## சாலைகள், சிறு துறைமுகங்கள்

72. மாநிலத்தின் சீரான பொருளாதார வளர்ச்சிக்குத் தரமான சாலைகளின் இணைப்பு அவசியமாகும். ஏற்கெனவே தெரிவித்தபடி அடுத்த

மூன்றாண்டுகளில் 2,400 கோடி ரூபாய் செலவில் 963 கி.மீ. மாநில நெடுஞ்சாலைகளை இருவழிச் சாலையாகவும், 3,700 கி.மீ. மாவட்டச் சாலைகளை இடை வழிச் சாலையாகவும் மாற்றுவதற்கு இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. சாலைக் கட்டமைப்புகளை வலுப்படுத்த கணிசமான அளவு நிதி தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு, முக்கியமான சாலைப் பணிகளை அமைத்து, பராமரித்து அரசுக்கு மாற்றம் செய்யும் முறையை (Build, Operate and Transfer) தனியார் பங்கேற்புடன் இந்த அரசு செயல்படுத்தும். **உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 2,500 கி.மீ. நீளமுள்ள நெடுஞ்சாலைகளை 5,000 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணியை இந்த அரசு மேற்கொள்ளும்.** 2011–2012 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Comprehensive Road Infrastructure Development Programme) 1,450 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி, சாலைகளை விரிவுபடுத்துதல், மேம்படுத்துதல், பாலங்கள், மதகுகளைப் புனரமைத்தல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படும். **2011–2012 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 257 கோடி ரூபாய் செலவில் தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூர் வழியாக கன்னியாகுமரி வரை செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையின் மீதமுள்ள 113 கி.மீ. நீள சாலை விரிவுபடுத்தப்பட்டு மேம்படுத்தப்படும்.**

73. தெற்காசியாவின் பெரிய தொழில் மையமாக சென்னை திகழ்கிறது. வேகமாக உயர்ந்துவரும் மக்கட் தொகை, வாகன நெரிசல் ஆகியவற்றை சமாளிக்க முதற்கட்ட வெளிவட்டச் சாலைப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **நெமிலிச்சேரியையும் மீஞ்சூரையும் இணைக்கும் இரண்டாம் கட்ட வெளிவட்டச் சாலை அமைக்கும் பணி ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் உதவியுடன் 1,075 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.** சிறுசேரியிலிருந்து மாமல்லபுரத்தை இணைக்கும் 25 கி.மீ. நீளமுள்ள ராஜீவ் காந்தி சாலையின் இரண்டாம் கட்டப்

பணிகளுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவுற்றவுடன் 550 கோடி ரூபாய் செலவில் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

74. சாலையின் தரத்தைச் சீராகப் பராமரிப்பதற்கு தொழில்நுட்பத்தை முறையாக பயன்படுத்துவது இன்றியமையாததாகும். இந்த ஆண்டில் கணினிவழி சாலை பராமரிப்பு முறை, சாலையின் தரம், புவியியல் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தகவல் தொகுப்பு ஆகியவற்றை உபயோகித்து சாலை மேலாண்மையும், திட்டமிடும் பணிகளும் மேற்கொள்ளப்படும். **மாநில நெடுஞ்சாலைகளையும், மாவட்டப் பெருஞ் சாலைகளையும் செயல்பாட்டின் அடிப்படையில் சாலைப் பராமரிப்பு ஒப்பந்த முறை மூலம் மேம்படுத்தி பராமரிக்கும் பணிகளை அரசு–தனியார் கூட்டு முயற்சியில் இந்த அரசு செயல்படுத்தும்.**

75. மாநிலத்தில் 22 சிறு துறைமுகங்கள் உள்ளன. ஆளுநர் அவர்கள் உரையில் ஏற்கெனவே அறிவித்துள்ளபடி அரசு–தனியார் கூட்டு முயற்சியின் மூலமாக சிறு துறைமுகங்களின் மேம்பாட்டுப் பணிகளை இவ்வரசு மேற்கொள்ளும். கப்பல் கட்டும் தொழிலுக்கு 10,000 கோடி ரூபாய் முதலீடு கொண்டுவரப்படும் என்று தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்துள்ளோம். இத்தொழிலுக்குத் தேவையான கட்டமைப்புகளை மேம்படுத்துவதுடன் இதற்கான முதலீட்டையும் ஈர்க்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

## சுற்றுலா

76. தற்பொழுதுள்ள சுற்றுலா வளர்ச்சிக்கான கட்டமைப்புகளை மேம்படுத்துவதுடன், சுற்றுலா கட்டமைப்புகளில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து சுற்றுலாப் பயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் வகையில் மேம்பாட்டுத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தும். இம்மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உலகத்தரம் வாய்ந்த வசதிகளைச்

செய்து கொடுப்பதே இந்த அரசின் நோக்கமாகும். மதுரை, ராமேஸ்வரம், கன்னியாகுமரி, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள சுற்றுலாக் கட்டமைப்புகள் 51 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட சுற்றுலா மையங்களுக்கான சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2011–2012 ஆம் ஆண்டில் 53 கோடி ரூபாய் செலவில் சுற்றுலாத் தலங்களுக்கான ஒன்பது திட்டங்கள் மேற்கொள்ளப்படும். **ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சுற்றுலாக் கட்டமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ள நான்கு மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

77. சுற்றுலாத் துறையில் தனியார் முதலீட்டைப் பெறுவதற்கு இந்த அரசு ஆவன செய்யும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை உள்ளடக்கிய தொன்மைமிகு சுற்றுலாவை இந்த அரசு ஊக்குவிக்கும். இந்த இடங்களில் பழமை வாய்ந்த கட்டடங்களை தங்கும் விடுதிகளாகப் புனரமைத்துப் பயன்படுத்த தனியார் ஊக்குவிக்கப்படுவர். திருக்கடையூர் மற்றும் நவக்கிரக கோவில்களையும் உள்ளடக்கிய சுற்றுலா, தெற்குச் சுற்றில் உள்ள ராமேஸ்வரம், மதுரை, கன்னியாகுமரியை உள்ளடக்கிய தெற்கு மண்டலச் சுற்றுலா போன்ற ஆன்மீகச் சுற்றுலாக்கள் முதன்மைப்படுத்தப்படும். அதைப்போன்றே வனங்கள், மலைப் பகுதிகள், கடற்கரை ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் சுற்றுலாவை ஊக்குவிக்க அரசு–தனியார் கூட்டு முயற்சியின் மூலம் உணவகங்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## இந்து சமய அறநிலையத் துறை

78. கோயில்களின் புனிதத் தன்மை, தொன்மை, வரலாற்று முக்கியத்துவம் முதலியவற்றைப் பேணிக் காப்பதில் இந்த அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த உன்னதமான நோக்கத்தை

மனதிற்கொண்டு ஆகம விதிகளின்படி கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேல் குடமுழுக்கு நடைபெறாமல் உள்ள கோயில்களில் 1,006 கோயில்களுக்கு புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பெற்று குடமுழுக்கு செய்யப்படும். இந்த நிதியாண்டில் 89 கோயில்களை புனரமைப்பதற்காக 22.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அவரது முந்தைய ஆட்சிக் காலத்தில் திருக்கோயில்களில் தொடங்கப்பட்ட அன்னதானத் திட்டம் முழு உத்வேகத்துடன் செயல்படுத்தப்படும். இத்திட்டம் மேலும் 106 கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும். நாள்தோறும் ஒரு கால பூஜையாவது மேற்கொள்வதற்காக வட்டி வருமானம் கிடைக்கும் வகையில் 11,931 கோயில்களுக்கு 25,000 ரூபாய் வீதம் நிரந்தர வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வைப்பீடு ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். கோயில் அர்ச்சகர்கள், ஓதுவார்கள், இசைவாணர்கள், கிராம பூசாரிகள் ஆகியோர்களுக்கான மாத ஓய்வூதியம் 750 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்படும்.**

## தமிழ் வளர்ச்சி

**79.** திருக்குறளையும் மகாகவி பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் கவிதைகளையும், ஆங்கிலம், அரபு, சீன மொழிகளில் மொழிபெயர்த்து இணையதளத்தில் வெளியிடும் பொருட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பணியாற்றும் அறிஞர்கள், பிற தமிழறிஞர்கள், பிற மொழி அறிஞர்கள் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும். அத்தகைய மொழி பெயர்ப்பிற்காகத் தமிழ் பல்கலைக் கழகத்திற்கு 48.50 இலட்சம் ரூபாயும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு 10 இலட்சம் ரூபாயும் இந்த திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## பள்ளிக் கல்வி

**80.** குழந்தைகளுக்கான **2009** ஆம் ஆண்டு இலவச–கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, கல்வி ஓர் அடிப்படை உரிமையாக அரசியல் சாசனப்படி கட்டாயமாக்கப் பட்டுள்ளது. மத்திய அரசின் இந்தச் சட்டத்தைப் பின்பற்றி இந்த அரசு, அனைத்துக் குழந்தைகளையும் தொடக்கப் பள்ளிகளிலும், இடைநிலைப் பள்ளிகளிலும் சேர்த்து தரமான கல்வியை வழங்கும். அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்து தொடர்ந்து **100** விழுக்காடு மாணவர்களும் தொடக்கக் கல்வி பெறுவதற்கு வழிவகை செய்வதே இந்த அரசின் குறிக்கோளாகும். இந்த இலக்கை எய்துவதற்காக அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ‘‘**அனைவருக்கும் கல்வித் திட்டம்**’’ (Sarva Shiksha Abhiyan) சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கக் கல்வியை மிகவும் பயனுள்ளதாக ஆக்குவதற்காக இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தவும், மனித வள மேம்பாட்டின் ஒரு பகுதியாக ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் அளிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக **2011–2012** ஆம் ஆண்டில் **498.24** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் பள்ளி மேலாண்மைக் குழுக்களும் (School Management Committees) அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களை வலுப்படுத்துவதற்காக **2011–2012** ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்கு **27.07** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளிக்குச் செல்லாமல் **56,113** சிறார்கள் உள்ளனர் என கணக்கிடப்பட்டுள்ளது. தீவிர முயற்சிகள் மூலம் இவர்கள் அனைவரையும் இந்த ஆண்டே பள்ளிகளில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**81.** பள்ளிக் கல்வியில் ஆண், பெண் கல்வி விகிதாச்சாரத்தில் உள்ள இடைவெளியை சரி செய்வதற்கான வழிவகைகளை அரசு வகுத்து வருகிறது. **2011** ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி

தமிழ்நாட்டின் கல்வி கற்றோர் விகிதாச்சாரம் 80.33 விழுக்காடாக உள்ளது. இதில் ஆண்களின் கல்வி விழுக்காடு 86.81 ஆகவும் பெண்களின் கல்வி விழுக்காடு 73.86 ஆகவும் உள்ளது. பெண்களுக்கான தேசிய தொடக்கக் கல்வித் திட்டம் 11 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கியுள்ள 38 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தங்கிப் பயிலக் கூடிய வகையில் இடைநிலைக் கல்வியை வழங்கும் கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா திட்டத்தில் 14 மாவட்டங்களில் உள்ள 45 வட்டாரங்களில் உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உயர்நிலை, மேனிலைக் கல்வி பயிலும் மாணவியருக்கு உண்டி–உறைவிட வசதி செய்து தருவதற்காக 13 மாவட்டங்களில் உள்ள 44 வட்டாரங்களில் 44 மாணவியர் தங்கும் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு தொடக்கக் கல்வி வழங்கும் தேசியத் திட்டம், கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா, மாணவியர் தங்கும் விடுதிகள் ஆகிய திட்டங்களின் மூலம் 2,58,715 மாணவியர் பயனடைகின்றனர். **பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டப் படிப்பும், பட்டயப் படிப்பும் படித்த பெண்களுக்கான திருமண உதவித் தொகையை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தியதுடன், நான்கு கிராம் தங்கக் காசும் மனமுவந்து வழங்கியுள்ளார்கள். பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளை ஆண் குழந்தைகளுக்கு நிகரான கல்வி புகட்ட ஊக்கமளிப்பதோடு கல்வி கற்பதில் விரைவில் பாலின சமநிலையை எட்டவும் இது உதவும் என நம்புகிறேன்.**

82. தொடக்கக் கல்வி நிலையில் மாணவர் சேர்க்கை உயர்ந்து வருவதால் மேனிலைக் கல்வி நிலையிலும் மாணவர் சேர்க்கை உயர்ந்து வருகிறது. மேனிலைக் கல்வியின் தரத்தையும், உள்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவதற்காக, 2009–2010 ஆம் ஆண்டு முதல் **தேசிய இடைநிலைக் கல்வித் திட்டம் (Rashtriya Madhyamik Shiksha Abhiyan)** செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, இத்திட்டம், நடுநிலைப் பள்ளிகளை உயர் நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதையும் இடைநிலைக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக தற்போதுள்ள

இடைநிலைப் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 2011–2012 ஆம் ஆண்டில் 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2009–2010 ஆம் ஆண்டில் மேனிலைப் பள்ளிகளில் இடைநிற்றல் விகிதம் 1.39 விழுக்காடாக இருந்தது. **மேனிலைப் பள்ளிகளிலிருந்து இடை நிற்றலை இன்னும் குறைப்பதற்கு பத்தாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு சிறப்பு ஊக்கத் தொகை வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றில் பத்தாம் வகுப்பு, மேனிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தலா 1,500 ரூபாயும், மேனிலை இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு தலா 2,000 ரூபாயும் ஊக்கத் தொகையாக மாநில அரசால் வழங்கப்படும். இத்தொகை மாணவ மாணவியர்களின் பெயரில் மின்விசை நிதி நிறுவனம் போன்ற பொதுத் துறை நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாக வைப்பீடு செய்யப்பட்டு, அவர்கள் பள்ளிப் படிப்பை முடிக்கும் பொழுது அத்தொகை அவர்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 394.04 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 24,94,649 மாணவ மாணவியர் பயன்பெறுவார்கள். இத்திட்டத்தின் மூலம் மேனிலைப் பள்ளிகளில் இடைநிற்றல் விகிதம் மேலும் குறையும் என நம்புகிறேன்.**

**83. 2011–2012 ஆம் ஆண்டில் பள்ளிக் குழந்தைகளுக்கு இரண்டு செட் சீருடைகள் வழங்கப்படும். இதற்கு கூடுதலாக 59 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தபடி 2012–2013 ஆம் ஆண்டு முதல் பள்ளிக் குழந்தைகளுக்கு நான்கு செட் சீருடைகள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு ஆண்டிற்கு 177 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். ஆறாம் வகுப்பும் அதற்கு மேலும் பயிலும் மாணவர்களுக்கு அரைக் கால்சட்டைக்குப் பதிலாக முழுக் கால்சட்டையும், மாணவியர்களுக்கு பாவாடை தாவணிக்குப் பதிலாக சல்வார் கமீசும் வழங்க முடிவு**

**செய்யப்பட்டுள்ளது. இந்த உடை மாற்றம் பள்ளி மாணவ மாணவியரிடையே பெருத்த வரவேற்பைப் பெறும் என நம்புகிறேன். தற்போதுள்ள கூலி விவரத்தைக் கருத்தில் கொண்டு தையல் கூலியும் உயர்த்தி வழங்கப்படும். அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் காலணிகள் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள்.**

84. **சென்னையில் டி.பி.ஐ. வளாகத்தில் (**Directorate of Public Instructions**) ஒருங்கிணைந்த அறிவுசார் பூங்கா அமைக்கப்படும். இதில், பள்ளிக் கல்வி சார்ந்த அனைத்து இயக்குநரகங்களும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கட்டடங்களில் இடம் பெறுவதுடன் கூட்ட அரங்குகள், பயிற்சி மையங்கள், கலந்துரையாடல் மையங்கள், புகைப்படக் காட்சிக் கூடத்துடன் கூடிய கல்வி தொலை தொடர்பு மையம் போன்ற நவீன வசதிகளும் ஏற்படுத்தப்படும். இந்த ஒருங்கிணைந்த அறிவுசார் பூங்காவில் ஏற்படுத்தப்படும் அடிப்படை வசதிகள், ஆசிரியர்களின் பயிற்சித் தேவைகளை மட்டும் கருத்தில் கொள்ளாமல், மாணவர்கள் பாடப் புத்தகங்களுக்கு அப்பாலும் கல்வியறிவு பெறக்கூடிய வகையில் அமையும்.**

## உயர் கல்வி

85. அனைவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய தரமான உயர் கல்வியை வழங்குவதே இந்த அரசின் குறிக்கோளாகும். உலகத் தரம் வாய்ந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பட்ட வசதிகளுடன் கூடிய உயர்கல்வி மையமாக தமிழகத்தை உருவாக்குவதே இந்த அரசின் விருப்பமாகும். நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கும், கிராமப்புற மாணவ மாணவியர்களுக்கும் உயர் கல்வி வசதி மேலும் கிடைக்கச் செய்ய மாநில அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நோக்கத்தை அடையும் வகையில் குறைந்தபட்ச தகுதியாக அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் (AICTE) குறிப்பிட்டுள்ள அளவுகோலிலிருந்து மாறுபட்டு அக்குறியீடுகளைத் தளர்த்தி பின்பற்ற இந்த அரசு முயற்சி

மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவ மாணவியர்களும் கிராமப்புற மாணவ மாணவியர்களும் உயர்கல்வியைப் பெருமளவில் பெற முடியும். இத்தகைய தளர்த்தப்பட்ட குறியீடுகளைப் பின்பற்றும்படி மாண்பமை உயர் நீதிமன்றமும் இந்த மாநிலத்திற்கு ஓர் இடைக்கால ஆணை பிறப்பித்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். **தருமபுரி மாவட்டத்தில் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி**; **தூத்துக்குடி மாவட்டத்தில் நாகலாபுரம்; விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி; நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேதாரண்யம்; வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூர்; திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி, நன்னிலம்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெம்மேலி; விருதுநகர் மாவட்டத்தில் சாத்தூர்; திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம் என பதினோறு இடங்களில் புதிதாக அரசு கலை–அறிவியல் கல்லூரிகளை அந்தந்த பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் தொடங்கி வைத்தார்கள். தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூரில் அரசு பொறியியல் கல்லூரி ஒன்றை புதிதாகத் தொடங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.** தொழிற்கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டணம் இந்த அரசால் தொடர்ந்து வழங்கப்படும். 2011–2012 ஆம் ஆண்டில் இதற்காக, 280 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

86. அடிப்படை ஆய்வு, செயல்முறை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், மாணவர்கள் பரிவர்த்தனை, இரட்டைப் பட்டங்கள் வழங்குதல், கல்வி பயிற்றுநர்களுக்கு உதவி போன்ற பணிகளை நமது பல்கலைக் கழகங்கள் உலகின் தலைசிறந்த பல்கலைக் கழகங்களுடனும், உலகத் தரமிக்க பிற நிறுவனங்களுடனும் இணைந்து மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளவும், கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளவும் ஊக்குவிக்கப்படும். இதற்கான, கட்டமைப்பு வசதிகள் தேவையான அளவு மேம்படுத்தப்படும். இப்பல்கலைக் கழகங்களில்

பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், சீன மொழிகளைப் பயிற்றுவிக்கும் பொருட்டு, காண்ஒளி கணினி வழிக் கலந்துரையாடல் வசதியுடன் கூடிய வகுப்பறைகளும், மொழி ஆய்வுக் கூடங்களும் உருவாக்கப்படும். வெளிநாட்டு பல்கலைக் கழகங்களிலிருந்து புகழ் பெற்ற விரிவுரையாளர்களும், ஆசிரியர்களும் வரவழைக்கப்பட்டு நமது ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பயிற்சியளிக்க வழிவகை செய்யப்படும். உலக அளவில் புகழ்பெற்ற வல்லுநர்களின் கருத்துகளின் அடிப்படையில் நமது பாடத் திட்டங்களை உலகத் தரத்தில் உருவாக்கும் வகையில் இந்தப் பல்கலைக் கழகங்களில் பாடத் திட்டம் உருவாக்கும் பிரிவு ஒன்றையும் மாநில அரசு ஏற்படுத்தும். இம்முயற்சிகள் நமது கல்வி நிறுவனங்களை உலக அளவில் தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களாக மாற்ற ஒரு தொடக்கமாக அமையும் என நம்புகிறேன்.

87. **அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் அனைத்து +1, +2 மாணவ மாணவியர்களுக்கும், அரசு, அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் இலவசமாக மடிக்கணினி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். இந்நாட்டு இங்கர்சால் என்றும் தென்னாட்டு பெர்னாட்ஷா என்றும் போற்றப்பெறும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த பொன்னாளான செப்டம்பர் 15 ஆம் நாளன்று இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்.** ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களும் குறிப்பாக நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களும் தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் நன்மைகளைப் பெறும் வகையில் கணினிப் பயன்பாட்டில் அவர்களது அறிவுநுட்பமும், திறனும் மேம்படச் செய்ய வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கமாகும். **2011–2012 ஆம் ஆண்டில் தகுதியுள்ள மாணவர்களுக்கு 9.12 இலட்சம் மடிக்கணினிகளை வழங்குவதற்கு உத்தேசித்துள்ளோம். இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென 912 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## மக்கள் நல்வாழ்வு

**88.** சமூகப் பொருளாதார அளவுகோல்களைப் பொறுத்த வரையில் குறிப்பாக, சுகாதார அளவுகோல்களில், தமிழ்நாடு மிக உயர்ந்த நிலையில் உள்ளது. அகில இந்திய அளவில் பச்சிளங்குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆயிரம் பிறப்புகளுக்கு 50 ஆகவும், பேறு காலத்தில் பெண்களின் இறப்பு விகிதம் ஒரு இலட்சம் பிறப்புகளுக்கு 212 ஆகவும் இருந்த போதிலும் நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் பச்சிளங் குழந்தைகளின் இறப்பு விகிதம் 28 ஆகவும், பேறு காலத்தில் பெண்களின் இறப்பு விகிதம் 80 ஆகவும் உள்ளது. மகப்பேறு வசதிகளை ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெற்ற தாய்மார்களின் எண்ணிக்கை 2010–2011 ஆம் ஆண்டில் 26.8 விழுக்காடாக உயர்ந்துள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 4,761 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **அனைவருக்கும் சுகாதாரம் என்ற குறிக்கோளை எய்தும் நோக்குடன் தேசிய ஊரக சுகாதார நலத் திட்டம், தமிழ்நாடு சுகாதார நலத் திட்டம் என்ற இரண்டு மாபெரும் திட்டங்கள் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.**

**89.** கிராமப்புறங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், **தேசிய ஊரக சுகாதார நலத் திட்டம்** தொடங்கப்பட்டது. கிராமப்புற மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். அனைவருக்கும் சுகாதாரம் என்ற குறிக்கோளை அடைவதற்காக, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வாரத்தின் எல்லா நாட்களிலும் 24 மணி நேரமும் மகப்பேறு வசதிகளை அளிப்பதற்காக கூடுதலாக மூன்று செவிலியர்களை நியமித்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனைகளாக தரம் உயர்த்துதல், கர்ப்பிணிப் பெண்களின் ரத்த சோகை நோயைத் தடுப்பதற்காகவும் இரும்புச் சத்து குறைபாடுகளைக் களைவதற்காகவும் கூடுதல் ஊட்டச் சத்து மேலாண்மை, மருத்துவமனையின் மூலம் மகப்பேறு

வசதிகள் பெறுவதை அதிகரிக்கும் பொருட்டு ரத்த சேமிப்பு மையங்களை வலுப்படுத்துதல் ஆகிய பல்வேறு நடவடிக்கைகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதனால் பச்சிளங் குழந்தைகளின் இறப்பு விகிதமும், பேறு காலத்தில் பெண்களின் இறப்பு விகிதமும் குறைந்துள்ளது. பச்சிளங் குழந்தைகளின் இறப்பு விகிதத்தையும், பேறு காலத்தில் பெண்களின் இறப்பு விகிதத்தையும் மேலும் குறைப்பதற்காக, இந்த அரசு கடும் முயற்சிகளை மேற்கொள்ளும். **2011–2012** ஆம் ஆண்டில் தேசிய ஊரக சுகாதார நலத் திட்டத்திற்காக இந்த அரசு, **900** கோடி ரூபாய் செலவிடும்.

**90.** மாண்புமிகு முதலமைச்சரின் கடந்த ஆட்சி காலத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு சுகாதார நலத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம், **627.72** கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில், **564.94** கோடி ரூபாய் உலக வங்கியின் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. **2013** ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மருத்துவ சேவைகளின் செயல்திறனை மேம்படுத்துதல், மாவட்ட, வட்ட அளவில் உள்ள பொது மருத்துவமனைகளில் தாய்மார்கள், பச்சிளங் குழந்தைகள் சுகாதார சேவைகளை எளிதாக அணுகி பெற வழி செய்தல், அரசு மருத்துவமனைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை இந்த திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். **2011–2012** ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுகாதார நலத் திட்டத்திற்கு **194** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ‘**108**’ ஆம்புலன்ஸ் சேவையின் மூலமாக வழங்கப்படும் அவசரகால போக்குவரத்து சேவையை மருத்துவமனைகளுக்கு இடையேயான போக்குவரத்து வசதிகளையும் அனுமதிப்பது (inter facility transfer) போன்ற கூடுதல் சேவைகளுடன் இத்திட்டச் செயல்பாடு மேம்படுத்தப்படும். பழங்குடியினர் வாழும் மலைப் பகுதிகளில் கூடுதல் வசதிகளுடன் கூடிய சிறப்பு ஊர்திகள்மூலம் இந்த சேவை அளிக்கப்படும். பச்சிளங் குழந்தைகளின் அவசரகால சேவைக்கென மாவட்டந்தோறும் ஊர்தி ஒன்று தனியாக அமர்த்தப்படும்.

**91.** நகர்ப்புரங்களில் தற்போதுள்ள ஆரம்ப சுகாதார வசதிகள் போதுமானதாக இல்லாததால் இந்த அரசு அவற்றை மேம்படுத்துவதில் தனி கவனம் செலுத்தும். மூன்றாம் நிலை மருத்துவ வசதிகளையும், சிறப்பு மருத்துவச் சிகிச்சை வசதிகளையும் இந்த அரசு மேம்படுத்தும். ஏற்கெனவே அறிவித்தபடி நகர்ப்புர உள்ளாட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில், கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைப் போன்றே வாரத்தில் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் மூன்று செலவிலியர்கள் நியமிக்கப்படுவார்கள். **தேசிய ஊரக சுகாதார நலத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள 60 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களை பொது சுகாதாரம்–நோய்த் தடுப்பு இயக்குநரின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, அவற்றுக்குத் தேவையான பணியாளர்களும், உபகரணங்களும் வழங்கப்படும். ஆரம்ப சுகாதார வசதிகள் இல்லாத ஒரு இலட்சத்திற்கும் குறைவாக மக்கள் தொகையுள்ள 75 சிறிய நகரங்களில், பொது சுகாதாரம்–நோய்த் தடுப்பு இயக்குநரின் கட்டுப்பாட்டில் புதிய நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்படும்.**

**92.** ரத்த சுத்திகரிப்பு அலகு (dialysis unit), மின் ஒலி இதய வரைவு (echo cardiogram), டிஜிட்டல் எக்ஸ்ரே, மார்பக ஊடுகதிர் பட சோதனை (mammogram), மோடுலர் வகை மல்டிபேரா மானிட்டர்கள், வெண்டிலேட்டர், விஷ முறிவு சிகிச்சைக்கான உயிர் காக்கும் உபகரணங்கள் ஆகியவை தமிழ்நாடு சுகாதார நலத் திட்டத்தின் கீழ் 55 கோடி ரூபாய் செலவில் மாவட்ட மருத்துவமனைகளுக்குக் கூடுதலாக அளிக்கப்பட்டு நோய் கண்டறியும் மருத்துவ பரிசோதனைச் சேவைகளின் தரம் உயர்த்தப்படும். **ஒரு சிறப்பு முயற்சியாக, திருச்சி அண்ணல் காந்தி அரசு மருத்துவமனையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு சிகிச்சை மையம் ஒன்று (**Super Speciality Centre**) அமைக்கப்படும். அரசு–தனியார் கூட்டுமுயற்சியின் மூலம் மாவட்ட அளவில் உள்ள பெரிய மருத்துவமனைகளில் நோய் கண்டறியும் பரிசோதனை வசதிகள்**

**மேம்படுத்தப்படும். அத்தகைய கூட்டுமுயற்சியில் கணினி வசதியுடன் கூடிய அதிநவீன ஆய்வுக்கூடங்கள் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக ஏற்படுத்தப்படும்.**

93. **மக்களின் வீட்டிற்கே சென்று சுகாதார வசதிகள் அளிப்பதற்கு 'நடமாடும் மருத்துவமனை' என்ற புதிய திட்டம் ஒன்றும் இந்த அரசால் தொடங்கப்படும். முதற்கட்டமாக எளிதில் சென்றடைய முடியாத தொலைதூரப் பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மருத்துவர் ஒருவருடன், செவிலியர், உதவியாளர், ஆய்வுக் கூட தொழில்நுட்பப் பணியாளர் உள்ளிட்ட ஒரு மருத்துவக் குழு, ஆய்வுக்கூட வசதிகளுடன் கூடிய இந்த 'நடமாடும் மருத்துவமனை' அறிவிக்கப்பட்ட பயணத் திட்டத்தின்படி தொலைதூரத்தில் உள்ள கிராமங்களுக்குச் சென்று சிகிச்சைகள் அளிக்கும்.**

94. இளம் பெண்களிடையே சுகாதாரத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, எதிர்வரும் காலத்தில் தொற்று நோய்களையும், கருவுறாமையின் ஆபத்தையும் குறைப்பதற்கு பெரும் உதவியாக இருக்கும். கிராமப்புறங்களில் வாழும் இத்தகையப் பெண்களுக்கு ஆறு சானிடரி நாப்கின் உள்ள ஒரு பேக்கெட் ஆறு ரூபாய் என்ற மானிய விலையில் பத்து மாவட்டங்களில் விநியோகிக்கும் திட்டம் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், **ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்படும் கிராம சுகாதார செவிலியர்களின் மூலமாக மாநிலத்திலுள்ள கிராமப்புறங்களில் வாழும் இளம் பெண்களுக்கு சானிடரி நாப்கின் இலவசமாகவே வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால் இந்த ஆண்டுக்கு 46 கோடி ரூபாய் செலவாகும்.**

95. **டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ், ஏழை எளிய பெண்களுக்கு இரண்டு மகப்பேறுகள் வரை வழங்கப்படும் உதவித் தொகை 6,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக**

**உயர்த்தி வழங்கப்படும். இதில் 4,000 ரூபாய் ஏழாவது மாதத்திலும், 4,000 ரூபாய் அரசு மருத்துவமனையில் மகப்பேறு வசதி பெறும்போதும், கடைசி தவணையாக 4,000 ரூபாய் ஐந்தாவது மாதத்தில் குழந்தைக்கு தேசிய அட்டவணையின்படி நோய்தடுப்பு மருந்துகள் கொடுத்த பின்பும் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக இந்தத் திருத்த வரவு–செலவுத்திட்ட மதிப்பீட்டில் 596 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**96.** 1954 ஆம் ஆண்டு உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்திற்கு மாற்றாக, 2011 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் உணவுப் பாதுகாப்பு–தரக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. எனவே, இந்த புதிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி **உணவுப் பாதுகாப்பு–மருந்து கட்டுப்பாட்டு நிருவாகத்திற்கென தனியாக ஒரு ஆணையரகத்தை உருவாக்குவதென இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கேற்ப உணவு–மருந்து கட்டுப்பாட்டு சோதனைக் கூடங்கள் நவீனப்படுத்தப்பட்டு தரம் உயர்த்தப்படும். இந்நோக்கத்திற்கென அரசு 50 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.**

97. **அனைவருக்கும் மருத்துவ சேவையை நல்க இந்த அரசு ஒரு முழுமையான பொதுக் காப்பீட்டுத் திட்டத்தைப் புதிதாக அறிமுகப்படுத்த உள்ளது. அதன்படி, "முதலமைச்சரின் விரிவான பொது மருத்துவ காப்பீட்டுத் திட்டம்" என்ற மேம்படுத்தப்பட்ட இப்புதிய திட்டம் விரைவில் தொடங்கப்படும். முந்தைய அரசு செயல்படுத்திய திட்டத்தில் இருந்த குறைபாடுகள் இந்தப் புதிய திட்டத்தில் நீக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் ஓர் ஆண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் காப்பீடாக நான்கு ஆண்டுகளுக்கு வழங்கும் வகையிலும், காப்பீட்டுக்காலம் மேலும் ஓர் ஆண்டிற்கு நீட்டிக்கத்தக்க வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு சில நோய்களுக்கு காப்பீட்டு வரம்பு ஒன்றரை இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் மருத்துவ சிகிச்சை முறைகள் அதிகரிக்கப்பட்டு குறிப்பாக மருத்துவ பராமரிப்புக்கும், குழந்தை**

**பிறப்புக்கு பின் தேவைப்படும் சிகிச்சைகளுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இப்புதிய திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவ வசதிகள் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ளப்படும்.**

## வருவாய் நிருவாகம்

98. ஒவ்வோர் ஆண்டும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை ஒட்டி இலவச வேட்டி–சேலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் பயன்பெறுவதோடு அல்லாமல், கைத்தறி, விசைத்தறித் தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கப்படுகிறது. வரும் 2012 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி 159.04 இலட்சம் சேலைகளும் 158.19 இலட்சம் வேட்டிகளும் பயனாளிகளுக்கு வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டமதிப்பீட்டில் 269 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**99. தஞ்சாவூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகமும், அம்மாவட்டத்தின் பிற துறை அலுவலகங்களும் கொண்ட புதிய வளாகம் ஒன்று 25 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருப்பூர் மாவட்ட நிருவாகத்திற்கு பெருந்திட்ட வளாகம் ஒன்று 25 கோடி ரூபாய் செலவில் கட்டும் பணி நடப்பு ஆண்டிலேயே தொடங்கப்படும். இந்த வளாகத்தில், மாவட்டக் காவல்துறை அலுவலகம் உட்பட, பல்வேறு துறைகளின் அலுவலகங்களும் இடம் பெறும். 2011–2012 ஆம் ஆண்டில் தாம்பரம், உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் புதிதாக உருவாக்கப்பட்ட வருவாய் கோட்ட அலுவலகங்களுக்கான கட்டடங்களும் கட்டப்படும்.**

100. வேளாண் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் கடந்த 2005 ஆம் ஆண்டில் “தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்” தொடங்கப்பட்டது. தற்போது 1.09 இலட்சம் பயனாளிகள் இத்திட்டத்தில் பதிவு செய்துள்ளனர்.

இத்திட்டம் புதுப்பொலிவுடன் செயல்படும் வகையில் சீரமைக்கப்பட்டு விரைவில் நடைமுறைக்கு கொண்டுவரப்படும். இதற்கென இத்திருத்த வரவு–செலவுத் திட்டமதிப்பீட்டில் 166 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்

**101.** தற்போதுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் முடிவடையும் தருவாயில் உள்ளதால், அதற்கான தேர்தல்கள், வரும் அக்டோபர் திங்களில் நடத்தப்பட வேண்டும். திட்டமிட்டபடி, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் இவ்வாண்டு அக்டோபர் திங்களில் நடத்தப்படும். தற்போது கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள பல–உறுப்பினர் வார்டுகளை ஓர்–உறுப்பினர் வார்டுகளாக மாற்ற இந்த அரசு முடிவு செய்துள்ளது.

## உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப்பகிர்வு

**102.** மாநில நிதிக் குழுவின் பரிந்துரைப்படி அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு, வழங்கப்படும் நிதிப் பகிர்வு 2010–2011 ஆம் ஆண்டில் 10 விழுக்காடாக இருந்தது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2011–2012 ஆம் ஆண்டு நிதிப் பகிர்வுக்கு மொத்தம் ஒதுக்கப்படும் தொகை 6,509 கோடி ரூபாயாகும். இந்தப் பங்களிப்பு மானியங்கள் தவிர உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு அடிப்படை வசதிகளான தொடக்கக் கல்வி, குடிநீர் விநியோகம், பொது சுகாதாரம் ஆகியவற்றுக்கு ஆகும் செலவுகளையும் மாநில அரசே நேரடியாக ஏற்று வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டிற்குப் பிறகு உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வை முடிவு செய்ய அமைக்கப்பட்ட நான்காவது மாநில நிதிக்குழு, தனது பரிந்துரைகளை விரைவில் அளிக்க உள்ளது. இவை ஆய்வு செய்யப்பட்டு பன்னிரெண்டாவது திட்ட காலத்திற்கான நிதிப்பகிர்வு இந்த அரசால் முடிவு செய்யப்படும்.

## ஊரக வளர்ச்சி

**103.** நகர்புரங்களுக்கு மக்கள் இடம் பெயர்ந்து செல்வதால் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்கும் பொருட்டு கிராமப் பகுதிகளில் நகரங்களுக்கு இணையான அடிப்படை வசதிகளை செய்து தருவது இந்த அரசின் நோக்கமாகும். அடிப்படை வசதிகள், ஊரகக் கட்டமைப்பு மேம்பாடு போன்றவை பிரதம மந்திரியின் கிராமச் சாலைகள் திட்டம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பின்தங்கிய பகுதிக்கான வளர்ச்சி நிதி, குறைந்தபட்ச தேவைகள் திட்டம், முழு சுகாதாரத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. **கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, 2011–2012 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த கிராம கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (THAI) ஒன்றை இந்த அரசு தொடங்கும். தற்போதுள்ள பல்வேறு திட்டங்களையும் ஒருங்கிணைத்து கிராமக் குடியிருப்புகளை (Habitation) அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்த ஒருங்கிணைந்த கிராம கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் 680 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு ஐந்தாண்டுகளில் அனைத்து கிராம குடியிருப்புகளும் படிப்படியாக இத்திட்டத்தின் கீழ் பயனடையும்.** கிராமப்புறங்களில் அடிப்படைக் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கு தேவையான நிதி ஆதாரங்களில் உள்ள இடைவெளியினை இத்திட்டம் நிறைவுசெய்யும்.

**104.** சட்டப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வழங்கப்படும் நிதி இரண்டு கோடி ரூபாயாக அதிகரிக்கப்படும். இதற்கென நடப்பாண்டில் 470 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதி ஊரகக் கட்டமைப்புகளை மேம்படுத்த பெரிதும் பயன்படும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தற்போது ஒவ்வொரு உறுப்பினருக்கும் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள இந்த 25 இலட்சம் ரூபாய்,

பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகளான குடிநீர், கழிப்பிட வசதி போன்றவற்றை அமைக்க முழுமையாகப் பயன்படுத்தப்படும்.

105. கிராமப்புற மக்களுக்கு ஆண்டுக்கு நூறு நாள் வேலை வாய்ப்பை உறுதியளிக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால் வேளாண் பருவத்தில் விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு பெருமளவில் தட்டுப்பாடு ஏற்படுவதாக புகார்கள் இருப்பதால், உச்ச வேளாண் பருவத்தின்போது இத்திட்டத்தின் கீழ் வேலைகள் எடுத்துக் கொள்வதை தவிர்ப்பது பற்றி மத்திய அரசுடன் இந்த அரசு கலந்தாலோசித்து உரிய நடவடிக்கையை எடுக்கும். உச்ச வேளாண் பருவ காலத்தை உள்ளூர் நிலவரத்திற்கு ஏற்ப மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முடிவு செய்வர். பிற மாநிலங்களின் அனுபவங்களை ஆராய்ந்த பிறகு, தனியார் விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கும் இத்திட்டத்தைப் பயன்படுத்துவது பற்றி இந்த அரசு ஆய்வு செய்யும். 2011–2012 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 3,472 கோடி ரூபாய் செலவிடப்படும்.

106. **கிராமப்புறங்களிலுள்ள வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு, ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி அளவில், 1.80 இலட்சம் ரூபாய் மதிப்பில், சூரிய ஒளி மூலம் மின்வசதி பெறும் 60,000 பசுமை வீடுகளை 1,080 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த அரசு 2011–2012 ஆம் ஆண்டில் கட்டித்தரும். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ், தற்போது கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்படும் உதவித் தொகையான 75,000 ரூபாய் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு வழங்கப்படும். இதில் மத்திய அரசின் மானியப் பங்கு ஒவ்வொரு வீட்டிற்கும் 33,750 ரூபாய் ஆகும். மாநில அரசின் மானியப் பங்கு தற்போதுள்ள 41,250 ரூபாய்க்கு பதிலாக 66,250 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். 2011–2012 ஆம் ஆண்டில் 1,00,553 வீடுகள் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் கட்டித் தரப்படும்.**

107. மத்திய அரசின் சுவர்ண ஜெயந்தி கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், மாநில அரசின் மகளிர் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. வறுமை நிலையிலிருந்து மீளும் வகையில், பொருளாதாரத்தை மேம்படுத்தும் பல்வேறு பணிகளைச் செய்வதற்காக சுயஉதவிக் குழுக்களையும், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளையும் வலுப்படுத்தி அவற்றின் வங்கிக் கடன் பெறும் திறனை இந்த அரசு மேம்படுத்தும். தமிழகத்தில், 2005 ஆம் ஆண்டு முதல், வறுமை ஒழிப்பிற்காக குடும்ப அளவில் உதவிகள் வழங்கும் புதுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, இத்திட்டம் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 16 மாவட்டங்களில் 70 பின்தங்கியுள்ள வட்டாரப் பகுதிகளில் உள்ள 2509 கிராம ஊராட்சிகளில் வசிக்கும் 5.8 இலட்சம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் பயனடைந்துள்ளன. தற்போது 950 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் மேலும் 10 மாவட்டங்களிலுள்ள 50 வட்டாரப் பகுதிகளில் வசித்து வரும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 3.80 இலட்சம் குடும்பங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென 2011–2012 ஆம் ஆண்டில் 315.11 கோடி ரூபாய் செலவிடப்படும். இத்திட்டத்தின் அடிப்படையிலேயே மத்திய அரசும் தேசிய வாழ்வாதாரத் திட்டத்தினை வகுத்து செயல்படுத்த உள்ளது. **தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து வறுமை ஒழிப்புத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஒவ்வொரு குடும்பமும் நேரடியாகப் பயன்பெறும் வகையில் வறுமை ஒழிப்புத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். இதன் மூலம் அக்குடும்பங்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றங்கள் கண்காணிக்கப்பட்டு அவர்கள் வறுமையிலிருந்து விடுபடும் வரை அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்யப்படும்.**

## நகர்ப்புர வளர்ச்சி

**108.** **2011** ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் **48.45** விழுக்காடு மக்கள் நகர்ப்புரங்களில் வசித்து வருகின்றனர். இது, **2030** ஆம் ஆண்டில் **67** விழுக்காடாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மக்களின் இடப்பெயர்வினாலும், நகர மயமாதலாலும், பெரும்பாலான நகர்ப் பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளின் தேவை மிகவும் அதிகரித்துள்ளது. அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிவு நீர், சுகாதாரம், மழைநீர் வடிகால், சாலைகள், தெருக்கள், திடக் கழிவு மேலாண்மை மற்றும் வாகன நிறுத்துமிடம், பேருந்து நிலையம், பூங்காக்கள் போன்ற பிற தேவைகளும் பெரும்பாலான நகர்ப்புரங்களில் அதிகரித்துள்ளன. நகர்ப்புர வீட்டு வசதி, பொது போக்குவரத்து போன்றவற்றின் தேவையும் மிக அதிகமாக உள்ளது. நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த கட்டமைப்பு, அடிப்படை வசதிகளின் தேவையில் தற்போதுள்ள இடைவெளியைக் குறைக்க இந்த அரசு பாடுபடும்.

**109.** மத்திய அரசின் நிதி உதவியுடன் **2005** ஆம் ஆண்டில் நிருவாக சீரமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு இயக்க திட்டமாகத் தொடங்கப்பட்ட ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் **2012** ஆம் ஆண்டு வரையில் செயல்படுத்தப்படும். **2011–2012** ஆம் ஆண்டு கட்டமைப்பு, வீட்டு வசதித் திட்டங்களுக்கென **1,361** கோடி ரூபாய் இத்திட்டத்தில் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. நகர்ப் பகுதிகளில் குடிநீர் வழங்குதல், கழிவு நீர் அகற்றும் திட்டங்களுக்காக ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் மூலம் நீண்ட காலக் கடன் பெறப்பட்டு, குடிநீர், மழைநீர் வடிகால், பாதாள சாக்கடைத் திட்டம் போன்ற **13** பணிகள் **335** கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதி உதவியுடன் **345** கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மாதவரம், பழனி, குன்னூர், எடப்பாடி, தேவக்கோட்டை, திருச்சிராப்பள்ளி

ஆகிய இடங்களில் குடிநீர் வசதி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**110.** பேரூராட்சிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு 2011–2012 ஆம் ஆண்டில் 228 பேரூராட்சிகளில் 615.27 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 102.62 கோடி ரூபாய் செலவில் நபார்டு வங்கியின் ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன் மேம்படுத்தப்படும். சென்னை மாநகரத்தின் மிக முக்கியமான பெருவழிச் சாலைகளை உலக தரம் வாய்ந்த சாலைகளாக மாற்றவும், ஏனைய உட்புறச் சாலைகளை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென பல்வேறு வழித் தடங்கள் அடங்கிய 30 மிக முக்கிய பெருவழிச் சாலைகள் கண்டறியப்பட்டுள்ளன.

**111.** உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III நிறைவு பெற உள்ளதால், நகர்ப்புரங்களில் கட்டமைப்பு மேம்பாட்டிற்காகவும், அடிப்படை வசதிகளுக்காகவும் நிதி மேலும் குறைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, **இந்த அரசு சென்னைக்கும் அதன் புறநகர் பகுதிகளுக்குமென, சென்னை பெரு நகர் வளர்ச்சித் திட்டம் ஒன்றையும், பிற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கென ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் என இரண்டு சிறப்புத் திட்டங்களைத் தொடங்க உள்ளது. பல்வேறு திட்டங்களின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி தவிர இத்திட்டத்தில் சிறப்பு நிதியாக திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்காக 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்காக 750 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** நடைமுறையில் உள்ள திட்டங்கள் இப்புதிய திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு அடிப்படை கட்டமைப்பு வசதிகளான சாலைகள், தெருக்கள், குடிநீர் வசதி, கழிவுநீர் சுத்திகரிப்பு, வெள்ள நீர் வடிகால், திடக் கழிவு மேலாண்மை, பேருந்து நிறுத்த வசதிகள், வாகன நிறுத்துமிடம் போன்ற பணிகள் செயல்படுத்தப்படும். சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கும், ஒருங்கிணைந்த நகர்ப்புர

வளர்ச்சித் திட்டத்திற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்தக் கூடுதல் நிதியாதாரங்கள் நகர்ப்புரங்களின் அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு பெரும் உதவியாக இருக்குமெனக் கருதுகிறேன்.

**112.** சென்னையிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மைக்காக ஒரு விரிவான திட்டம் தயாரித்து, கரிம சேமிப்புக்காக கிடைக்கப்பெறும் நிதியையும் பயன்படுத்தி இத்திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு திட்டமிட்டுள்ளது. அவ்வாறே, சென்னையிலும், புறநகர் பகுதிகளிலும் கழிவு நீர் சுத்திகரிப்பு, மறுசுழற்சி, நகரின் நதிப் பகுதிகளில் கழிவு நீர் கலப்பதைத் தடுத்தல், நதிகளின் கரைகளை அழகுபடுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய, ஒருங்கிணைந்த கழிவுநீர் சுத்திகரிப்பு மேலாண்மை குறித்த விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயல்முறைபடுத்தப்படும். இத்திட்டம் கழிவு நீரினை ஒருங்கிணைந்த முறையில் சுத்திகரித்து மறுசுழற்சி மூலம் உபயோகிக்கவும், நகர்பகுதி நதிநீர் மாசுபடுவதை தவிர்க்கவும் உதவிகரமாக இருக்கும்.

## குடிநீர் வழங்கல்

**113.** சுத்தமான குடிநீரை தேவையான அளவு பொது மக்களுக்கு வழங்குவதே இவ்வரசின் முக்கிய நோக்கமாகும். நகர்ப்புர குடிநீர் மேம்பாட்டிற்கென 2011–2012 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் 844 கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளது. சென்னை மாநகரில் தற்போது சராசரியாக நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 135 லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்பட்டாலும், பல்வேறு இடங்களில் இந்த அளவு 50 முதல் 209 லிட்டர் வரை என வேறுபடுகிறது. இவ்வேறுபாட்டினை களைய 161 கி.மீ. தூரத்திற்கு குடிநீர் பகிர்வு அமைப்புகளை மேம்படுத்தவும், 154 கி.மீ. தூரத்திற்கு பழுதடைந்த குடிநீர்க் குழாய்களை மாற்றியமைக்கவும் அரசு முடிவு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2011 டிசம்பர் திங்களுக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**114. சென்னை மாநகருக்கான குடிநீர்த் தேவைக்கு, தற்போதுள்ள நீர் சேமிப்புக்கான கொள்ளளவு 1,851 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலும் 4.20 டி.எம்.சி. அதிகரிக்கப்படும். தேர்வாய் கண்டிகை, திருகண்டலம், இராமஞ்சேரி ஆகிய இடங்களில் தலா ஒரு டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட புதிய குடிநீர் சேமிப்பு ஏரிகள் உருவாக்கப்படும். நேமம், போரூர், அய்யம்பாக்கம், அம்பத்தூர், கொரட்டூர், மாதவரம் ஆகிய 6 ஏரிகள் மறுசீரமைக்கப்பட்டு 0.9 டி.எம்.சி. கொள்ளளவு கூடுதலாக ஏற்படுத்தப்படும். சோழவரம் ஏரியும் ஆழப்படுத்தப்பட்டு 0.3 டி.எம்.சி. நீர் கூடுதலாக சேகரிக்கப்படும். சென்னை நகரின் தற்போதைய குடிநீர் பற்றாக்குறையைச் சரிக்கட்டும் வகையில் நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறனுடன் கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை நிறுவ ஆய்வு மேற்கொள்ளப்படும்.**

115. தற்போது 7,020 ஊரக குடியிருப்புகளில் பகுதி அளவு குடிநீர் தேவை மட்டுமே நிறைவு செய்யப்படுகிறது. மத்திய அரசின் தேசிய ஊரகக் குடிநீர் திட்ட நிதியுதவியுடன் தமிழக அரசின் குறைந்தபட்ச தேவைகள் திட்ட நிதியுதவியையும் சேர்த்து ஊரகக் குடிநீர் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 2011–2012 ஆம் ஆண்டு தமிழக நிதிநிலை அறிக்கையில் குறைந்தபட்சத் தேவைகள் திட்டத்திற்கென 452 கோடி ரூபாய் மாநில நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் 6,000 ஊரக குடியிருப்புகளில் முழு தேவை அளவிற்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்படும். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கென 2011–2012 ஆம் ஆண்டிற்கு 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நகர்ப்புர வீட்டு வசதி

116. நாட்டிலேயே நகர்மயமாதல் அதிகமாக உள்ள மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். நகர்ப்பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்புகள் காரணமாக, ஊரகப் பகுதிகளில் உள்ளவர்கள் வேலை தேடி நகர்ப்புரங்களுக்குக் குடியேறுவது அதிகரித்துள்ளது. இவ்வாறு குடியேறிய ஏழை மக்கள், கல்வியறிவு குறைவினால், சேவைத் துறைகளில் குறைந்த

ஊதியத்தில் பணிபுரிகின்றனர். எனவே, இத்தகைய ஏழை மக்கள் பயன்பெற தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பல்வேறு திட்டங்களின் கீழ் 2011–2016 ஆம் ஆண்டுகள் வரையிலான கால அளவில் 10,768 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.72 இலட்சம் குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக **2011–2012 ஆம் ஆண்டில் 400 கோடி ரூபாய் செலவில் 8,733 குடியிருப்புகள் குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்படும். இது தவிர ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் 1,939.48 கோடி ரூபாய் மதிப்பிலான 44,870 குடியிருப்புகளையும் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

**117.** நகர்ப்புர குடிசைப்பகுதி மேம்பாட்டினைக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் முழுமையாக மேற்கொள்ளும் உயரிய நோக்குடன் **குடிசைப் பகுதிகளற்ற நகரத் திட்டத்தினை ராஜீவ் வீட்டுவசதித் திட்டத்தின்** கீழ் மேற்கொள்ள மத்திய அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசின் 50 விழுக்காடு உதவித் தொகையுடன் மாநில அரசின் 50 விழுக்காடு பங்கினையும் சேர்த்து ராஜீவ் வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் குடிசைப்பகுதியில் வாழும் குடும்பங்களுக்கான சமூகப் பொருளாதார நிலைபற்றிய கணக்கெடுப்பு ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது.

**118.** தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை 3.98 இலட்சம் குடியிருப்புகளைக் கட்டித் தந்துள்ளது. இத்திட்டத்தினால் பொருளாதாரத்தில் நலிவுற்ற, குறைந்த வருவாய் பிரிவினர் பெருமளவில் பயனடைந்துள்ளனர். தற்போது 742.64 கோடி ரூபாய் செலவில் 6,364 குடியிருப்புகளுக்கான கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது. **தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அதன் வசம் உள்ள நிலத்தில் அந்த வாரியத்தின் நிதியைப் பயன்படுத்தியும் தனியார் கூட்டு முயற்சியிலும் புதிய குடியிருப்புகளைக் கட்டித்தரும். 2011–2012 ஆம் ஆண்டில் வீட்டுவசதி**

**வாரியம் மூலம், 340 கோடி ரூபாய் செலவில் 2,427 குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.**

## போக்குவரத்து

**119.** தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழகங்கள் மிகவும் குறைந்த கட்டணத்தில் நம்பகத்தன்மையுடைய போக்குவரத்து வசதிகளை பொதுமக்களுக்கு அளித்து வருகின்றன. தற்போது 21,169 மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மாநிலத்தின் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன. அரசு போக்குவரத்து நிறுவனங்களின் தற்போதைய நிதிநிலை மிக மோசமான நிலையில் உள்ளது. எனவே, அன்றாட நிர்வாகச் செலவுகளுக்குக்கூட மாநில அரசு நிதியுதவி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. பணியாளர் கட்டுப்பாட்டுடன் செயல்பட வழிவகை செய்து தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், போக்குவரத்துக் கழகங்களின் செயல் திறனை மேம்படுத்துவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். **போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுதல் வருவாய் ஏற்படுத்தும் வகையில் தற்போது கணிசமாக நிலம் உள்ள பேருந்து நிலையங்களை அரசு–தனியார் கூட்டு முயற்சியால் பேருந்து நிறுத்தம் வசதியுடன் அடுக்கக வணிக வளாகம் கட்டி மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்களுக்கு போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கு 2011–2012 ஆம் ஆண்டில் 3,000 புதிய பேருந்துகள் வாங்கப்படும். இதற்காக திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் பங்கு மூலதன உதவிக்கென 125 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குவதற்கு இழப்பீடாக மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு உதவித் தொகை வழங்க 304 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**120.** நகர்ப்புர மக்கள் தொகையின் மிக வேகமான வளர்ச்சி நகர்புர போக்குவரத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சென்னைப் பெருநகரப் பகுதி அடுத்த பத்து ஆண்டுகளில் ஒரு கோடி மக்கட்தொகை

கொண்ட மிகப்பெரும் நகரமாக வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, சென்னையில் ஒருங்கிணைந்த நகர்ப்புர போக்குவரத்து முறையினை மேம்படுத்துவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது. மேதகு ஆளுநர் உரையில் ஏற்கெனவே அறிவித்தவாறு சென்னை நகரில் தற்போதுள்ள பொது போக்குவரத்துடன் மெட்ரோ இரயில் திட்டத்தினை ஒருங்கிணைத்தல், சென்னையில் பல பகுதிகளை ஒருங்கிணைக்கக் கூடிய விரிவான மோனோ இரயில் அமைப்பினை நிறுவுதல் வாயிலாக ஓர் ஒருங்கிணைந்த பன்முறை நகரப் போக்குவரத்து வசதி (multi modal transport system) ஏற்படுத்தப்படும். **மோனோ இரயில் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. இதற்கான ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை விரைவில் தொடங்குவதற்குத் தேவையான நிதி ஆதாரம் இந்த ஆண்டிலேயே கண்டறியப்படும்.**

## ஆதிதிராவிடர் நலன்

**121.** ஆதிதிராவிடர் நலனுக்கான சிறப்புத் திட்டக் கூறுகளைச் செயற்படுத்துவதற்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும். 2011–2012 ஆம் ஆண்டில் சிறப்புத் திட்டக் கூறுகளுக்காக 5,007 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மாநிலத்தின் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் 21.27 விழுக்காடாகும். பல பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதிக பலனளிக்கக் கூடிய வகையில் இத்தகைய அனைத்துத் திட்டங்களையும் இந்த அரசு நெறிமுறைப்படுத்தும்.

**122.** தாட்கோ நிறுவனம், ஆதிதிராவிடர் நலனுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் ஒருங்கிணைப்பு முகமையாகும். பொருளாதார மேம்பாட்டிற்காக தாட்கோ நிறுவனம் வழங்கிய கடன் வசூல் பெருமளவு குறைந்துவிட்ட நிலையில் தாட்கோ நிறுவனத்தின்

விரயக் காப்புத் தொகை (margin money), பங்கு மூலதனம் (share capital) வெகுவாகக் குறைந்துவிட்டது. எனவே, இந்த அரசு இந்நிறுவனத்திற்கு புத்துணர்வு அளிக்கும் வகையில் பங்கு மூலதனமாக 26 கோடி ரூபாய் அளிக்கும். இதன் மூலம், தாட்கோ நிறுவனம் மத்திய அரசிடமிருந்து இணையான மானியம் பெற இயலும். ஆதிதிராவிடர்களின், பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவித் தொகை வழங்கும் பொருட்டு, தாட்கோ நிறுவனத்திற்கு வழங்குவதற்காக சிறப்பு மத்திய உதவித்தொகையாக 81.03 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு சுய தொழில் தொடங்கும் நபர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் அளவு உச்சவரம்பு ஏதுமின்றி 30 விழுக்காடு மானியத் தொகையுடன் 7.5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். ஆதிதிராவிடர் தொழில் முனைவோரை ஊக்குவித்து உயர்த்துவதற்கு ஆதிதிராவிடர் நல ஆணையரகத்தில் கலந்தாலோசனை மையம் ஒன்று (counselling centre) ஏற்படுத்தப்படும்.**

123. ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 1,073 பள்ளிகளும், 1,294 விடுதிகளும் இயங்கி வருகின்றன. 2001–2002 முதல் 2007–2008 ஆம் ஆண்டு வரையில் ஏற்பளிக்கப்பட்டு பல்வேறு காரணங்களால் கட்டுமானப்பணி முடிக்கப்படாமல் உள்ள 35 விடுதிக் கட்டடங்களை விரைவாக கட்டி முடிப்பதற்குக் கூடுதலாக 6.43 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. **இன்னும் 93 விடுதிகள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இந்த 93 விடுதிகளுக்கும் கட்டடங்கள் கட்டும் பணி இந்த ஆண்டே தொடங்கப்படும். 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் விடுதிகள் கட்ட 21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1,080 விடுதிகளுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு 83.40 கோடி ரூபாய் ஏற்கெனவே அனுமதியளித்துள்ளது.**

124. **ஆதிதிராவிட பள்ளி மாணவ மாணவியருக்கு தற்போது வழங்கப்படும் மாத உணவுப்படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாக உயர்த்தப்படும். இதேபோன்று கல்லூரி மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் உணவுப்படி 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தப்படும். 2011–2012 ஆம் ஆண்டில் பத்து நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், பத்து உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.** கழிவறை வசதிகளை 779 பள்ளிகளில் ஏற்படுத்துவதற்காக, சிறப்பு மானியமாக 15.58 கோடி ரூபாய் அனுமதிக்கப்படும். பத்து இலட்சம் ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட உயர்படிப்பிற்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்காக, இந்த திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், 238.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவ மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்குவதற்காக, 43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

125. தாட்கோ நிறுவனத்தின் வாயிலாக பல்வேறு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதிக அளவில் வேலைவாய்ப்பினை பெற்றுத் தரும் வகையில் இத்திட்டம் இந்த அரசினால் திருத்தியமைக்கப்படும். **ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு திறன் வளர் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிப்பதற்கு இந்த திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

126. இந்த அரசு பழங்குடியினர் நலனில் தனிக் கவனம் செலுத்திவருகிறது. பழங்குடியினர் மேம்பாட்டுக்குப் போதுமான நிதியொதுக்கத்தினை உறுதி செய்யும் பொருட்டு, 1976–1977 ஆம் ஆண்டிலிருந்து பழங்குடியினர் துணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் பழங்குடியினர் நலனுக்காக 246 கோடி ரூபாய்

ஒதுக்கப்பட்டுள்ளது. இது மொத்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 1.05 விழுக்காடாகும். **பழங்குடியினர் வாழும் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 275(1) ஆம் பிரிவின்படியும் சிறப்பு மத்திய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு, 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 13.91 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அழிவின் விளிம்பு நிலையில் உள்ள குறிப்பிட்ட பழங்குடியினர் நலனை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 10.76 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

## பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன்

127. தமிழ்நாட்டின் மொத்த மக்கட்தொகையில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கை 73.50 விழுக்காடாகும். பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை செயல்படுத்துவதில் நாட்டிலேயே தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. இம்மாநிலம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு அளித்து வருகிறது. இந்திரா சஹானி – யூனியன் ஆப் இந்தியா ஆகியோருக்கு இடையேயான வழக்கில் மாண்பமை உச்ச நீதிமன்ற அரசமைப்பு நடுவர் ஆயம், 50 விழுக்காட்டிற்கு மேல் இட ஒதுக்கீடு செய்யப்படக்கூடாது என தீர்ப்பளித்ததனைத் தொடர்ந்து, ஏற்கெனவே சட்டப் பிரிவு 31–B யின் கீழ் அரசமைப்புச் சட்டம் ஒன்பதாம் அட்டவணையில் சேர்க்கப்பட்டு நடைமுறையில் இருக்கும் 69 விழுக்காடு இட ஒதுக்கீடு தொடர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்பட்ட தமிழக அரசுதான் 1994 ஆம் ஆண்டு சட்டம் 45–ஐ கொண்டுவந்தது. இச்சட்டத் திருத்தத்திற்கு எதிரான மனுக்களை ஏற்று, மாண்பமை உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடம் உரிய அளவீட்டு எண்ணிக்கை விவரங்களை சமர்ப்பித்து, அந்த எண்ணிக்கை அடிப்படையில் இட ஒதுக்கீடு அளவினை ஆணையம்

நியாயமெனக் கருதினால் அவ்வாறே முடிவு செய்யலாம் என பணித்தது. நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தலைமையிலான ஆணையம், 8.7.2011 அன்று அரசுக்கு அளித்த அறிக்கையில், தற்போது பல்வேறு தரப்பினருக்கு அளிக்கப்பட்டு வரும் இட ஒதுக்கீடு நியாயப்படுத்தப்பட்டுள்ளது. **ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டைக் காக்கும் வகையில் அரசு 11.7.2011 அன்று ஆணை வெளியிட்டுள்ளது. இதனால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு உட்பட நமது மாநிலத்தில் பின்பற்றப்படும் மொத்த இட ஒதுக்கீடு 69 விழுக்காடு அளவைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வழிவகை ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சமூக நீதியைக் காக்கும் இந்த மகத்தான முடிவு நிச்சயமாக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

128. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மாணவ மாணவியர்களுக்கு இலவசக் கல்வியையும், மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய, மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்புகளுக்கான படிப்பு உதவித் தொகையையும் இந்த அரசு வழங்கி வருகிறது. இதற்காக 2011–2012 ஆம் ஆண்டிற்கு, 89.73 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம், தேசிய அளவில் பாராட்டைப் பெற்றுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில், 112.08 கோடி ரூபாய் செலவில் ஆறு இலட்சம் மாணவ மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

129. மூன்று தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், மூன்று நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், மூன்று உயர்நிலைப் பள்ளிகளை மேனிலைப் பள்ளிகளாகவும் ஆக மொத்தம் ஒன்பது

கள்ளர் மறு சீரமைப்புப் பள்ளிகளை நிலையுயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. தற்போது, கள்ளர் மறுசீரமைப்பு பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பராமரிப்பு மானியம் ஆண்டொன்றிற்கு நான்கு இலட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்படும். இப்பிரிவு மாணவர்கள் பயன்பெறும் வகையில், நடப்பாண்டில், மாவட்டத்திற்கு ஐந்து பள்ளிகள் வீதம் மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் பாலர் பள்ளியுடன் கூடிய பதினைந்து ஆங்கில வழிப் பள்ளிகள் தொடங்கப்படும். இப்பிரிவில் 285 கள்ளர் மறு சீரமைப்புப் பள்ளிகளுக்கென இந்த திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 52 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

130. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில், அரசால் 1,238 விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 148 விடுதிகள் இன்னும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. **வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் எஞ்சிய அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்காக 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு தற்போது அளிக்கப்படும் மாத உணவுப்படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு 19 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.**

## மகளிர், குழந்தைகள் நலன்

131. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்கும்போதெல்லாம் மகளிர் மேம்பாடும், குழந்தைகள் நலனும் முக்கியத்துவம் பெறும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். **பல்வேறு திருமண உதவித் திட்டங்களில் பயன்பெறும் அனைத்துப் பயனாளிகளுக்கும்**

**திருமணத்திற்கு திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்கக் காசு வழங்கவும், அப்பயனாளிகள் பட்டம், பட்டயப்படிப்பு முடித்திருப்பின், அவர்களுக்கான திருமண உதவித் தொகையை உயர்த்தி வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளதை ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். இத்திட்டத்திற்காக, 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், 514 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

**132.** பெண் சிசுக் கொலையை முற்றிலும் தடுக்கும் பொருட்டு, '**தொட்டில் குழந்தைத் திட்டம்**' **1992** ஆம் ஆண்டு சேலத்தில் தொடங்கப்பட்டது. பின்னர், பெண் சிசுக் கொலை இருப்பதாகத் தெரியவந்த மதுரை, தேனி, திண்டுக்கல், தருமபுரி மாவட்டங்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது. **31.3.2011** வரையில் **3,131** குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் மறுவாழ்வு பெற்றுள்ளனர். இதன் விளைவாக, மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் குழந்தை பாலின விகிதத்தில் பெண்குழந்தை பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. **அண்மையில் வெளியிடப்பட்ட மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் குழந்தை பாலின விகிதத்தில் பெண்குழந்தை பிறப்பு விகிதம் குறைந்துள்ளதைக் காட்டுகின்றது. எனவே, 2011–2012 ஆம் ஆண்டில் இந்த ஐந்து மாவட்டங்களிலும் தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்களை அமைத்து இத்திட்டத்தை 47.45 இலட்ச ரூபாய் செலவில் இந்த அரசு செயல்படுத்த உள்ளது.**

**133.** பெண் சிசுக் கொலையைத் தடுத்து, பெண் கல்வியை ஊக்கப்படுத்தும் பொருட்டு, தற்போது பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் ஒரு பெண்குழந்தை மட்டும் உள்ள பெற்றோர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொள்ளும்போது பெண் குழந்தைக்கு **22,200** ரூபாய் வைப்புத் தொகையும் இரண்டு பெண்குழந்தைகள் மட்டும் உள்ள பெற்றோர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து

கொள்ளும்போது பெண்குழந்தைகளுக்கு தலா 15,200 ரூபாய் வைப்புத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. **இனி, முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒரு பெண் குழந்தைக்கான வைப்புத் தொகை 50,000 ரூபாயாகவும், இரண்டு பெண் குழந்தைகளுக்கான வைப்புத் தொகை 25,000 ரூபாயாகவும் இந்த அரசால் உயர்த்தி வழங்கப்படும். இது, பெண் சிசுக் கொலைத் தடுப்பிற்கு ஒரு முக்கிய உந்துசக்தியாகத் திகழும்.**

134. ஐந்து முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அளிக்கவும், அதனால் கல்வியறிவு நிலையை உயர்த்தவும் சத்துணவு அளிக்கப்படுகிறது. இதற்காக, 2010–2011 ஆம் ஆண்டில் 54,80,340 மாணவ மாணவியர்கள் பயன் பெறும் வகையில் 1,108 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்கு 1,246 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. **தற்போது, 15,313 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்த அரசு, பல்வேறு திட்டங்களில் உள்ள நிதியை ஒருங்கிணைத்து, குறித்த கால அளவிற்குள் படிப்படியாக அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் புதிய கட்டங்கள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கும்.**

135. **தேர்தல் அறிக்கையில் வாக்களித்தபடி பெண்களுக்கு மின் விசிறி, மிக்சி, கிரைண்டர் ஆகியவற்றை இலவசமாக வழங்கும் திட்டத்தை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் அன்று இந்த அரசு தொடங்கும்.** அரிசி பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டை வைத்துள்ள 1.83 கோடி குடும்பங்களிலுள்ள தாய்மார்கள் படிப்படியாக இதன்மூலம் பயனடைவார்கள். **2011–2012 ஆம் ஆண்டில், சுமார் 25 இலட்சம் குடும்பங்கள் இதன் மூலம் பயன்பெறும். இதற்காக 1,250 கோடி ரூபாய் இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.**

## முதியோர் மற்றும் ஆதரவற்றோர் நலன்

**136.** பணவீக்கம் அதிகரித்துவரும் இன்றைய சூழ்நிலையில் சமுதாயத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இப்பிரிவினரை சமூகப் பாதுகாப்பு வளையத்தின்கீழ் கொண்டுவருவது அவசியமாகும். இப்பின்னணியில் **இந்த அரசு பதவியேற்றதும் உடனடியாக சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை மாதம் 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 23.95 இலட்சம் பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.** மத்திய அரசு அண்மையில் முதியோர் ஓய்வூதியம் பெறுவதற்கான வயது வரம்பை 65 லிருந்து 60 ஆக குறைத்து உள்ளதால் கூடுதலாக 5.36 இலட்சம் பயனாளிகள் ஓய்வூதியம் பெறுவர். **இந்த அரசு 2011–2012 ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியங்களுக்காக 2,842 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.**

**137.** ஆதரவற்ற முதியோரும், குழந்தைகளும் தங்குவதற்கென ஒவ்வொரு வட்டாரத்திலும், ஒரு சிறப்பு இல்லத்தை ஏற்படுத்தித் தர இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. தற்போது 90 வட்டாரங்களில் அரசால் 27 குழந்தைகள் நல மையங்களும், அரசு சாரா நிறுவனங்களால் 173 குழந்தைகள் நல மையங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இதேபோன்று 62 வட்டாரங்களில் 93 முதியோர் இல்லங்கள் – பகல் நேர பராமரிப்பு இல்லங்கள் மத்திய மாநில அரசுகளின் உதவியுடன் இயங்கி வருகின்றன. **இந்த அரசு, ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும், முதியோருக்கும், ஆதரவற்ற குழந்தைகளுக்கும் தங்கும் சிறப்பு விடுதிகள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகம் ஒன்றை உருவாக்கும். மூத்த மாற்றுத் திறனாளிகளுக்கான இல்லமும் இந்த ஒருங்கிணைந்த வளாகத்தின் ஒரு பகுதியாக இருக்கும். இத்திட்டம், சிறந்த அரசு சாரா தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களின் சமூக கடமையின்**

**(Corporate social responsibility)** **ஒரு பகுதியாக, அவர்களது உதவியுடன் இந்த அரசால் நடைமுறைப்படுத்தப்படும்.**

## மாற்றுத் திறனாளிகள் நலன்

**138.** இந்த அரசு, வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று விழுக்காடு இட ஒதுக்கீட்டை உறுதி செய்யும். **இதற்கென தலைமைச் செயலாளரின் கீழ், பல்துறை செயலாளர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அனைத்து அரசுப் பணிகளிலும் மூன்று விழுக்காடு இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும்.** மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, தனியார் துறையில் பணியமர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில், சென்னைப் பெருநகர்ப் பகுதி வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளில் உரிய மாறுதல்களைச் செய்து மாற்றுத் திறனாளிகள் எல்லா இடங்களுக்கும் சிரமமின்றிச் சென்றுவர கட்டட விதிமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டது. தேவையான சட்டத் திருத்தங்களின் மூலம், தமிழகத்தின் மாநகராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றுடன் ஏனைய பகுதிகளிலும் கட்டட விதிமுறைகளில் இது போன்ற மாற்றம் கொண்டுவர இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**139.** மனவளர்ச்சி குன்றிய, கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள், தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பராமரிப்புத் தொகை இந்த அரசால் 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. **மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண உதவித் தொகையும் மற்ற திருமண உதவித் தொகைக்கு சமமாக வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏராளமான விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளதால், பயனாளிகளின் அனுமதி எண்ணிக்கையில் தற்போதுள்ள உச்ச வரம்பு முழுமையாக நீக்கப்படும்.**

## திருநங்கையர் நலன்

**140.** திருநங்கையர் நலனுக்காக, தமிழ்நாடு திருநங்கையர் நல வாரியத்தின் மூலமாக வருவாய் ஈட்டும் தொழில்களில் ஈடுபட முன்வரும் **சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் தொடங்க, 25 விழுக்காடு மானியத்தில் 15 இலட்சம் ரூபாய் வரை கடனுதவி இந்த அரசால் வழங்கப்படும்.** 2011–2012 ஆம் ஆண்டு திருநங்கையர் நல வாரியத்தின் மூலம் பல்வேறு நலப்பணிகளைச் செயல்படுத்துவதற்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சிறுபான்மையினர் நலன்

**141.** சிறுபான்மையினர் நலனைப் பாதுகாக்க சிறுபான்மையினர் நலத்துறை உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு நிருவாக மானியமாக தற்போது வழங்கப்பட்டுவரும் 45 இலட்ச ரூபாய், ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். **உலமாக்கள் ஓய்வூதிய திட்டத்தில் 2,400 நபர்கள் மட்டுமே தற்போது பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் நிலுவையிலுள்ள விண்ணப்பதாரர்களும் ஓய்வூதியம் பெறும் வகையில் மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை 2,600 ஆக உயர்த்தப்படும். இத் திட்டத்தில் தற்போது 750 ரூபாயாக உள்ள மாதாந்திர ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.** வக்பு வாரியம் சரியாக நிர்வகிக்கப்படாத காரணத்தால், வாரியத்திற்கு வருவாய் வரும் வகையில் அதன் சொத்துக்கள் சரியாக பராமரிக்கப்படவில்லை. வாரியம் தனது ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதிய நிலுவைத்தொகை, இதர பயன்களை அளிப்பதற்குக்கூட இயலாத நிலையில் உள்ளது. எனவே **இந்த அரசு வாரியத்தின் செயல்பாடுகளை சீரமைக்க முடிவு செய்துள்ளது. இதனால் வக்பு வாரியத்தின் சொத்துக்கள் அனைத்தும் திரும்ப அதன் வசம் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதுடன், நிலையான வருவாய் பெறுவது உறுதி செய்யப்படும். மேலும், வக்பு வாரிய ஓய்வூதியதாரர்களின் நிலுவையிலுள்ள ஓய்வூதியம் உள்ளிட்ட பணிக்கொடைகளை வழங்க**

**ஒருமுறை மானியமாக மூன்று கோடி ரூபாயை வக்பு வாரியத்திற்கு வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.**

## இலங்கைத் தமிழர் நலன்

**142.** தமிழக மக்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அனைத்து நலத் திட்ட உதவிகளையும், முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கும் நீட்டித்து தமிழக அரசு வழங்கி வருகிறது. இலங்கைத் தமிழர் முகாம்களின் நிலையினை மேம்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. **முகாம்களிலுள்ள வீடுகளையும், அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தும் பொருட்டு இந்த ஆண்டு 25 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். மேலும், 416 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு 10,000 ரூபாய் வீதம் சுழல்நிதி வழங்கப்படும். தற்போது குடும்பத் தலைவருக்கு 400 ரூபாயாக வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித் தொகை 1,000 ரூபாயாகவும், பிற குடும்ப உறுப்பினர்களுக்கு 288 ரூபாயாக வழங்கப்படும் உதவித்தொகை 750 ரூபாயாகவும், 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குத் தற்போது வழங்கப்படும் உதவித் தொகை 400 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.**

## தொழிலாளர் நலன்

**143.** மாநிலத்தின் முதல் நல வாரியமாக, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் 1994 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. இதுவரை மாநில அரசு பல்வேறு வகையான தொழிலாளர்களுக்காக 34 நல வாரியங்களை அமைத்துள்ளது. இவற்றுள் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் 17 நல வாரியங்களை தொழிலாளர் நலத்துறை நிருவகித்து வருகிறது. இந்த 17 நல வாரியங்களில் 51.37 இலட்சம் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதுநாள்வரை 13.85 இலட்சம் பயனாளிகளுக்குத் திருமணம், மகப்பேறு, அறுவை சிகிச்சை, கல்வி, ஓய்வூதியம், விபத்து, இறப்பு நிவாரணம்

போன்றவற்றிற்காக 356.59 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. **இந்த நல வாரியங்கள் திறம்பட செயல்படாத நிலையில் உள்ளதால் இந்த அரசு இவ்வாரியங்களை சீரமைத்து அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்தும்.**

## நெசவாளர் நலன்

**144.** நெசவாளர் நலனைப் பாதுகாக்கவும், அவர்களின் துயர் துடைக்கவும் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவு அமைப்பிலும், முறைசாராப் பிரிவுகளிலும் உள்ள நெசவாளர்களை நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியம், கல்வி, மருத்துவ உதவிகள், விபத்து, இயற்கை மரணத்திற்கான காப்பீடு போன்ற உதவிகள் இந்நல வாரியத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. **இவ்வாரிய உறுப்பினர்களுக்கு தற்போது தனிநபர் ஓய்வூதியமாக வழங்கப்படும் 450 ரூபாயும், குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும் 550 ரூபாயும் உயர்த்தப்பட்டு மாதம் 1,000 ரூபாயாக வழங்கப்படும்.** இவ்வாரியத்தின் வாயிலாக, இதுவரை 1,12,849 நெசவாளர்களுக்கு 24.56 கோடி ரூபாய் அளவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## அரசு அலுவலர் நலன்

**145.** அரசுப் பணியாளர்களின் ஒத்துழைப்பும், ஈடுபாடும் பல்வேறு நலத்திட்டப் பணிகளையும், வளர்ச்சிப் பணிகளையும் வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு இன்றியமையாதவை என இந்த அரசு கருதுகிறது. இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 27,091 கோடி ரூபாய் பணியாளர்கள் ஊதியச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஊதிய முரண்பாடுகளைக் களைய முந்தைய அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்திய பின்பும் ஊதிய முரண்பாடுகள் தொடர்பாக அரசுக்கு கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. இது தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளதால், இந்த அரசு ஊதிய

முரண்பாடுகள் தொடர்பான கோரிக்கைகளைக் கவனமுடன் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

## ஓய்வூதியதாரர் நலன்

**146.** தமிழகத்தில் தற்போது **6.53** இலட்சம் ஓய்வூதியதாரர்கள் உள்ளனர். இணையான பணிகளுக்கு சமமான ஊதியம் எனும் அடிப்படையில் ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் திருத்தி வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியதாரர்களின் வயது அதிகமாகும்போது ஓய்வூதியமும் அதிகமாகும் வண்ணம் ஓய்வூதியத் தொகையினை மத்திய அரசு வழங்குவதுபோல் தமிழக அரசும் வழங்கி வருகிறது. இதனால் ஓய்வூதியச் செலவினங்கள் கணிசமாக உயர்ந்துள்ளன. **2011–2012** ஆம் ஆண்டில் **11,942** கோடி ரூபாய் ஓய்வூதியச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## பத்திரிக்கையாளர் நலன்

**147.** பத்திரிக்கையாளர்களின் ஓய்வூதியம் **5,000** ரூபாயிலிருந்து **6,000** ரூபாயாகவும், அவர்களது குடும்ப ஓய்வூதியம் **2,500** ரூபாயிலிருந்து **3,000** ரூபாயாகவும் உயர்த்தப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **39** இலட்சம் ரூபாய் செலவில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள சென்னை பத்திரிக்கையாளர் சங்கக் கட்டடத்தை அண்மையில் திறந்து வைத்தார்கள். இந்த வளாகத்தில் ஊடகங்களுக்கென ஒரு மையத்தை **50** இலட்சம் ரூபாய் செலவில் அரசு ஏற்படுத்தும். தலைமைச் செயலக செய்திக் குறிப்புப் பிரிவிலிருந்து காணொளி – அச்சு ஊடகங்களுக்கு இணையதளத்தின் மூலமாக ஒளிப் பதிவுகளை அனுப்பும் வசதி ஏற்படுத்தப்படும்.

## வணிகர் நலன்

**148.** வணிகர் நல வாரியத்தின் மூலம் பல்வேறு நலத் திட்ட உதவிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மதிப்புக்கூட்டு

வரியில் விலக்களிப்பட்ட சிறு குறு வணிகர்களையும் நல வாரியத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்து தேவையான பயன்களைப் பெற இந்த அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், ஆண்டுதோறும் உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணமாக 100 ரூபாய் செலுத்த வேண்டும் என்பதற்குப் பதிலாக, உறுப்பினராக சேரும்போதே 500 ரூபாய் செலுத்தி ஆயுட்கால உறுப்பினராக அனுமதிக்கவும் இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

**149.** இதுவரை இந்த அரசால் மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு நலத் திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் தெளிவாக விவரித்துள்ளேன். தற்போது அதற்கான நிதி ஆதாரங்களைப் பற்றியும் நிதிநிலை பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன்.

## வரி நிருவாகத்தில் சீரமைப்பு

**150.** வணிகவரித் துறையில் மின்னணு ஆளுகை முறைகளைப் புகுத்துவது அவசியமாகக் கருதப்படுகிறது. இத்துறையில் முழுமையாக மின்னணு ஆளுகை முறைகளைக் கொண்டு வர ஏதுவாக மென்பொருள், வன்பொருள் ஆகியவற்றின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்து தர இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கென ஏற்படும் தொடராச் செலவு 79 கோடி ரூபாய் எனவும், 2011–2012 ஆம் ஆண்டிற்கு தொடர் செலவினத்துடன் சேர்த்து 101 கோடி ரூபாய் ஆகும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் வரி நிருவாகத்தில் உள்ள சேவையின் தரம் கணிசமான அளவு உயருவதோடு வரி ஏய்ப்பு தடுக்கப்பட்டு வரி செலுத்துவோருக்குத் தேவையான சேவை குறுக்கீடின்றி எளிதாகக் கிடைக்க வழிவகைகள் செய்யப்படும். இந்த புதிய முறை நேர்மையாக வரி செலுத்துபவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என கருதுகிறேன். வணிகவரித் துறையில் கணினிமயமாக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு 45.37 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதில் மத்திய அரசின் பங்கு 31.26 கோடி ரூபாயாகும். வணிக வரித் துறையில் மின் ஆளுகை முறையை

முழுமையாகப் புகுத்துவதற்கு இந்த அரசு இந்நிதியையும் பயன்படுத்திக் கொள்ளும்.

151. தமிழ்நாடு, 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் பிற சட்டங்களின் கீழும் வசூலிக்கப்பட வேண்டிய வரிகள், அபராதம், வட்டித் தொகை போன்றவை அதிக அளவில் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன. இந்த நிலுவைகளை முடிவுக்குக் கொண்டுவர ‘சமாதான்’ திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டுமென்று பல்வேறு வணிகச் சங்கங்களிலிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, இத்தகைய **நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு ‘சமாதான்’ திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் 2011 அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் 2012 மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அமலில் இருக்கும்.**

152. பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள், 47 (அ) பிரிவின் கீழ் ஆய்வுக்காகவும், சந்தை விலையை நிர்ணயம் செய்யவும் அனுப்பப்பட்டு அதிக எண்ணிக்கையில் நிலுவையில் உள்ளன. இதன் காரணமாக சம்பந்தப்பட்ட நபர்கள் பத்திரங்களைப் பெற முடியாமலும், அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் கிடைக்கப் பெறாமலும் உள்ளது. எனவே **வசூலிக்கப்படாமல் உள்ள இந்த தொகையை வசூலிக்கும் பொருட்டும் பொதுமக்களுக்குப் பத்திரங்கள் திரும்பக் கிடைக்கச் செய்யும் பொருட்டும் ‘சமாதான்’ திட்டத்தை மீண்டும் அமல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அரசு எடுத்துள்ள இம்முயற்சியின் காரணமாக 2011–2012 ஆம் ஆண்டில் 125 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஆதாரத்தைத் திரட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

## நிதி நிலைக் கணிப்புகள்

153. 2010-2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மொத்த வருவாய் வரவுகள் 72,413.82 கோடி ரூபாய் எனவும்,

அதில் மாநில அரசின் சொந்த வரி வருவாய் 49,125.10 கோடி ரூபாய் எனவும் கணக்கிடப்பட்டிருந்தது. வருவாய் செலவினம் 75,542.61 கோடி ரூபாய் எனவும், இதனால் ஏற்படக்கூடிய வருவாய் பற்றாக்குறை 3,128.79 கோடி ரூபாய் எனவும் கணக்கிடப்பட்டது. 2010–2011 திட்ட மதிப்பீட்டின் படி நிதிப் பற்றாக்குறை 17,607.71 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டது. 2011–2012 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் மொத்த வருவாய் வரவுகள் 79,413.26 கோடி ரூபாய் எனவும், வருவாய் செலவு 78,974.48 கோடி ரூபாய் எனவும், இதனால் வருவாய் உபரி 438.78 கோடி ரூபாய் எனவும் கணக்கிடப்பட்டது. இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் நிதிப் பற்றாக்குறை 13,506.85 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டது.

154. **இந்த அரசு தொடங்கியுள்ள பல்வேறு புதிய திட்டங்களையும் வளர்ச்சிக்கான முன் முயற்சிகளையும் என் உரையின் முன் பகுதியில் விரிவாக எடுத்துரைத்துள்ளேன். இத்தகைய திட்டங்களினால் ஏற்பட்டுள்ள கூடுதல் நிதித் தேவை சுமார் 8,900 கோடி ரூபாயாகும்.** எனவே, இந்தத் திட்டங்களை நிறைவேற்றிட அரசின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகிறது. இதைக் கருத்தில் கொண்டு இந்த அரசு மிக கவனமாகக் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் முயற்சியை மேற்கொண்டு, வணிக வரி, மாநில ஆயத்தீர்வை, முத்திரைத்தாள், பத்திரப் பதிவுக் கட்டணம் ஆகியவற்றில் சில மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. இத்தகைய முயற்சிகளினால் 2011–2012 ஆம் ஆண்டில் மீதமுள்ள காலத்திற்கு அரசுக்குக் கூடுதலாக 3,618 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

155. அரசு, தற்போது எடுத்துள்ள பல்வேறு முயற்சிகளின் காரணமாக பெறப்படும் கூடுதல் நிதி ஆதாரம், மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்த வருவாய் வரவுகள் 85,685 கோடி ரூபாய் என கணிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் சொந்த வரி வருவாய் 59,787

கோடி ரூபாய் எனவும், வரி அல்லாத வருவாய் 5,015 கோடி ரூபாய் எனவும் இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு வசூல் செய்யும் வரிகளிலிருந்து மாநில அரசுக்கு கிடைக்கும் பங்கும், மத்திய அரசின் உதவி மானியமும் முறையே 13,111 கோடி ரூபாயாகவும், 7,772 கோடி ரூபாயாகவும் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. மாநில அரசின் வருவாய் செலவினம் 85,511 கோடி ரூபாயாக இருக்குமென கணிக்கப்பட்டுள்ளதால் **2011–2012 ஆம் ஆண்டில் 173.87 கோடி ரூபாய் வருவாய் உபரி இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. அதே சமயம் நிதிப்பற்றாக்குறை 16,881 கோடி ரூபாயாக இருக்கும். இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.90 விழுக்காடாகும். இதன்மூலம் நிதிநிலை மேலாண்மையில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை வழுவாமல் பின்பற்றி வருவாய் பற்றாக்குறையை அறவே நீக்கியும், நிதிப்பற்றாக்குறையை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மூன்று விழுக்காட்டிற்குக் குறைவாக இருக்கும் வகையிலும் இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு அமைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நிதி மேலாண்மையில் இதே நெறிமுறையைத் தொடர்ந்து பின்பற்றுவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

156. 2011–2012 ஆம் ஆண்டில் மூலதனத் திட்டங்களுக்கான நிதியை கணிசமாக உயர்த்தி 15,877.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்ய 2011–2012 ஆம் ஆண்டில் பெறப்படும் நிகரக் கடன் 17,261 கோடி ரூபாயாக இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் 2011–2012 ஆம் ஆண்டின் இறுதியில் மாநில அரசுக்கு உள்ள மொத்த கடன் அளவு 1,18,610 கோடி ரூபாயாக இருக்கும். முந்தைய அரசால் இறுதியாக விட்டுச் சென்ற கடன் சுமைத் தொகை 1,01,349 கோடி ரூபாய் என்பதை அனைவரும் நன்கு அறிவீர்கள். அதனால் இந்த அரசு பொறுப்பேற்று குறுகிய காலமே ஆகியுள்ள நிலையில் வளர்ச்சிப் பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டியுள்ளதால் திடீரெனக் கடன் அளவைக் குறைத்து விட முடியாத சூழ்நிலையில் இந்த அரசு உள்ளது. வருங்காலங்களில் நல்ல பொருளாதார வளர்ச்சி காரணமாக

கூடுதல் வருவாய் ஆதாரம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் இத்தகைய கடன்களைக் குறைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என நம்புகிறேன். எனினும், **மாநில அரசின் தற்போதைய கடன் சுமை 2011–2012 ஆம் ஆண்டின் இறுதியில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 20.39 விழுக்காடு அளவே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது பதிமூன்றாவது நிதிக் குழு நிர்ணியத்துள்ள அளவான 24.50 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருக்கும்.**

157. **இந்த அரசு பொறுப்பேற்றவுடன் கொண்டுவரப்படும் முதல் வரவு–செலவுத் திட்டம் இது என்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தலின் போது அளித்த பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றிட மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வண்ணம் புதிய திட்டங்களும், கூடுதல் பயன்களும் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்டத்தின் மூலம் 8,900 கோடி ரூபாய் அளவிற்கு புதிய திட்டங்களும், புதிய சலுகைகளும் மக்களுக்குக் கிடைக்கும். இவற்றோடு கடந்த ஆண்டு ஏற்பட்ட 2,720 கோடி ரூபாய் வருவாய் பற்றாக்குறையையும் அறவே நீக்கி 2011–2012 ஆண்டில் 173.87 கோடி ரூபாய் வருவாய் உபரி ஏற்படக்கூடிய வகையில் வரவு–செலவுத் திட்டம் அமைந்துள்ளது. இந்த நிலையில் முதன்முறையாக நமது மாநில வரவு–செலவுத் திட்டத்தின் அளவு ஒரு இலட்சம் கோடியை மிஞ்சும் வரலாற்று சாதனையை, தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், தற்போது நிகழ்த்தி ஒரு முத்திரையைப் பதித்துள்ளார் என்பதைப் பெருமிதத்துடன் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கை நமது சமுதாயத்தின் பலதரப்பட்ட மக்களுக்கும் மன மகிழ்ச்சி அளிப்பதாக அமைந்திருக்கும் எனக் கருதுகிறேன்.**

**158.** இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்கி இந்த மாமன்றத்தின் முன் வைப்பதற்கு அனைத்து அறிவுரைகளையும் மனமுவந்து

வழங்கிய **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களின் பரந்த அனுபவத்தினாலும் ஆழ்ந்த அறிவாற்றலாலும் சிறந்த வழி காட்டுதலையும் அறிவுரைகளையும் எனக்கு வழங்கியதால் மட்டுமே இத்தகைய வரவு செலவுத் திட்ட அறிக்கையை உங்கள் முன் என்னால் வழங்கிட முடிந்தது.

**159.** இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு என்னோடு முழுமையாக ஒத்துழைத்த நிதித்துறை முதன்மை செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும் அவரோடு தளராது பணியாற்றிய நிதித்துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**160.** **2011–2012** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டினைத் தமிழ்நாட்டு மக்களுக்கு சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, **2011–2012** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கு பேரவையின் அனுமதியை பெற்றுத் தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஓ. பன்னீர்செல்வம்**
நிதி அமைச்சர்

சென்னை
**2011** ஆம் ஆண்டு
ஆகஸ்ட் திங்கள் **4** ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு **2042**
ஆடித் திங்கள் **19** ஆம் நாள்.

## இணைப்பு

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

1. தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டுள்ள 'தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டம், 2003', பன்னிரண்டாவது நிதிக்குழு மற்றும் பதின்மூன்றாவது நிதிக்குழுவினால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப திருத்தப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் 3(1) பிரிவின்படி, மாநில அரசு, வரவு செலவுத் திட்ட அறிக்கையுடன் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும் சட்ட பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின் 3(2) பிரிவின்படி, நிதி நிலைக் குறியீடுகளான, வருவாய் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவை குறித்த இலக்குகளை வரும் சில ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டு, அதற்கான அனுமானங்களை விளக்கி, இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, நடப்பு நிதிநிலைப் போக்குகளையும், புதிய அரசு மேற்கொண்டுள்ள கொள்கை முடிவுகளையும் கருத்தில் கொண்டு, 2011-2014 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிநிலை பற்றிய கணிப்புகளை உள்ளடக்கிய இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் தயாரிக்கப்பட்டு இந்தப் பேரவையின் முன் வைக்கப்படுகிறது.

### நோக்கங்கள்

2. 2012 முதல் 2017 வரையுள்ள 12–வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாயம், தொழில் மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றில் முதலீட்டை பெருமளவு அதிகரித்து தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் நிதிநிலையை பேணுவதற்கும் முக்கியத்துவம் அளித்து, இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தின்படி, பதின்மூன்றாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளவாறு

மாநிலம் நிதிநிலை ஒருங்கிணைப்பை நோக்கிச் செல்கிறது. இந்த நிதி ஆண்டின் இறுதிவரையில் வருவாய்ப் பற்றாக்குறையை முற்றிலும் நீக்கி, நிதிப்பற்றாக்குறையையும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் **3** சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்படும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலை**

**3.** உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையினாலும், ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியதாலும், அரசு செயல்படுத்திவரும் பல்வேறு நலத் திட்டங்களுக்கான செலவு அதிகரித்திருப்பதாலும், வரிசையாக கடந்த **4** ஆண்டுகளின் வருவாய் உபரிக்குப் பின் **2009–2010** மற்றும் **2010–2011** ஆம் ஆண்டுகளில், முறையே ரூபாய் **3531.32** கோடியும், ரூபாய் **2720.01** கோடியும் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும், நிதிப் பொறுப்புடைமைச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர் **2010–2011** ஆம் ஆண்டு நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் **3** சதவீதம் அளவை முதல் முறையாகத் தாண்டி **3.21** சதவீதமாக உள்ளது. இது பதின்மூன்றாவது நிதிக் குழு அனுமதித்தவாறு திருத்தப்பட்ட நிதிப் பொறுப்புடைமைச் சட்டம் வரையறுத்துள்ள அளவுகளுக்குள் அமைந்துள்ளது. நடப்பு நிதியாண்டில் புதிய அரசினால் பல்வேறு புதிய நல மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் பொருளாதார நிலை சீரடைந்ததால் மற்றும் கூடுதல் நிதியாதாரங்களை திரட்டியதால் வரிவருவாயில் ஏற்பட்ட உயர்வினால், திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடில் நடப்பு நிதியாண்டில் ரூபாய் **173.87** கோடி வருவாய் உபரி மதிப்பிடப்பட்டுள்ளது. **2011–2012** ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவினம் ரூபாய் **15,877.59** கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் **27.5** சதவீதமாக உயர்ந்துள்ளது. இதன் விளைவாக, நிதிப் பற்றாக்குறை ரூபாய் **16,881** கோடி என்ற அளவில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் **2.90** சதவீதமாக இருக்கும்.

இது, பதின்மூன்றாவது நிதிக் குழு வரையறுத்துள்ள அளவுகளுக்குள் அமைந்துள்ளது.

**4.** சேமநல நிதி முதலிய பொறுப்புகளை உள்ளடக்கிய மாநில அரசின் மொத்தக் கடன் **31.3.2011** அன்று ரூபாய் **1,01,349.45** கோடியாக இருந்தது. இது **31.3.2012–ல்** ரூபாய் **1,18,801.75** கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பதின்மூன்றாவது நிதிக்குழு கணித்தபடி, **2011–2012** ஆம் ஆண்டின் இறுதியில் மாநில அரசின் மொத்தக் கடன் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் **24.5** சதவீதத்திற்குள் இருக்க வேண்டும். மேலும், இந்த நிதியாண்டில் பெறப்படும் புதிய கடன்கள் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் **3** சதவீதத்திற்கு மேலாக இருக்கக் கூடாது. இந்த குறித்த நிலையின்படி, **2011–2012** ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டிற்காக ரூபாய் **17,437** கோடியென கடன் அளவை மத்திய அரசு அறுதியிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மாநிலம் பெறப்படும் புதிய கடன்கள் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் அந்த அளவைவிட ரூபாய் **17,260.81** கோடியென குறைவாக மதிப்பிடப்படுள்ளது. இதனால், **2011–2012** ஆம் ஆண்டு இறுதியில் மாநிலத்தின் கடன் பொறுப்புகளின் அளவு மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் **20.39** சதவீதமாக இருக்கும். வரும் ஆண்டுகளில் மாநிலத்தின் கடன் சுமையை மேலும் குறைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படும். திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய் உபரி மதிப்பிடப்பட்டுள்ளதால் பெறப்படும் புதிய கடன்கள் முழுமையாக தேவையான மூலதனச் செலவினங்களுக்காக பயன்படுத்தப்படும்.

**5.** தமிழ்நாடு தனது வாரியங்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் கடன் பத்திரங்கள் மற்றும் கடன்கள் பெறுவதற்காக அளித்துள்ள உத்தரவாதங்களின் பொறுப்புகளை கவனமாக நிருவகித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் அதற்கு

முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் **100** சதவீத அளவிற்குக் குறைவாகவோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **10** சதவீத அளவிற்குக் குறைவாகவோ, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும். **31.3.2010** அன்றுள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு மொத்த வருவாய் வரவுகளில் **10.82** சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **1.48** சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் **75** சதவீதத்திற்கு மிகாமலோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **7.5** சதவீதமோ இதில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் இருக்க வேண்டும். **31.3.2010** அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, மொத்த வருவாய் வரவுகளில் **2.32** சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **0.32** சதவீதமாவும் உள்ளது.

## எதிர்காலக் கணிப்புகள்

## வருவாய்க் கணக்கு வரவுகள்

### மாநில அரசின் சொந்த வரி வருவாய்

**6.** **2010–2011** ஆம் ஆண்டு முன் கணக்குகளின்படி மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதம் **9.21** சதவீதமாக இருக்கும். மாநிலத்தின் சொந்த வரி வருவாய் **2010–2011** ஆம் ஆண்டின் முன் கணக்குகளின்படி ரூபாய் **47,781** கோடி எனவும் **2011–2012** ஆம் ஆண்டின் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி ரூபாய் **59,787** கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

7. 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்டத்தில், வணிக வரிகளின் வரவு ரூபாய் 37,196 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2010–2011 ஆம் ஆண்டு முன் கணக்குகளை விட 20.50 சதவீத வளர்ச்சியை மற்றும் ஜூலை 2011 மாத நடுவில் வரி விகிதங்களை திருத்தியதால் நடப்பாண்டில் பெறப்படும் கூடுதல் வருவாய் ரூபாய் 2,716 கோடியை கொண்டு கணிக்கப்பட்டுள்ளது.

8. 2011–2012 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை வரவுகள் ரூபாய் 10,191 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டுகளின் போக்கின்படி, 2010–2011 ஆம் ஆண்டுக்கான முன் கணக்குகளை விட 17.33 சதவீதம் வளர்ச்சியை மற்றும் வரி விகிதங்களை திருத்தியதால் நடப்பாண்டில் பெறப்படும் ரூபாய் 669 கோடி கூடுதல் வருவாயை கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது.

9. பொருளாதாரம் சீரடைந்ததின் பயனாக முத்திரைத்தாள் தீர்வை 2010–2011 ஆம் ஆண்டில் 26.99 சதவீதம் அதிகரித்துள்ளது. 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் இது ரூபாய் 6,493 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளோடு ஒப்பிடுவதற்காக, வரி விகிதங்களை திருத்தியதால் திரட்டப்படும் கூடுதல் ஆதாரங்களான ரூபாய் 358 கோடியையும் இந்த நிதியாண்டிலிருந்து கோரிக்கை எண்.34–க்கு மாற்றம் செய்யப்பட்டு நகர்ப்புர உள்ளாட்சி மன்றத்திற்குரிய முத்திரைத்தாள் தீர்வையின் மீதான மேல் வரியான ரூபாய் 552 கோடியையும் கழித்தபின், முத்திரைத்தாள் தீர்வையில் 2010–2011 ஆம் ஆண்டுக்குரிய முன் கணக்குகளை விட 20 சதவீதம் வளர்ச்சி மதிப்பிடப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில், வாகனங்களின் மீதான வரிகள் ரூபாய் 3,235 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**10.** மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வளர்ச்சி **2012–2013** ஆம் ஆண்டில் **18** விழுக்காடும் **2013–2014** ஆம் ஆண்டில் **15** விழுக்காடும் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது. வரி விகிதங்களை திருத்தியதால் திரட்டப்படும் கூடுதல் ஆதாரங்களின் முழுப் பயன் **2012–2013** ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ளதால், **2012–2013** ஆம் ஆண்டிற்காக மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வளர்ச்சி **2013–2014** ஆம் ஆண்டிற்காக கணக்கிடப்பட்டுள்ள வளர்ச்சியை விட அதிகமாக உள்ளது.

**வரி அல்லாத வருவாய்**

**11.** வரி அல்லாத வருவாய், **2011–2012** ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் **4,483.72** கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த வருவாய் வரவுகளில், மாநிலத்தின் வரி அல்லாத வருவாயின் பங்கு **5.26** சதவீதமேயாகும். மாநிலத்தின் வரி அல்லாத வருவாயின் வளர்ச்சி சில ஒருமுறை வரவுகளைத் தவிர்த்து கடந்த ஆண்டுகளில் ஏறக்குறைய நிலையாகவே உள்ளது. இது வரும் ஆண்டுகளில் **3** விழுக்காடு அளவிற்கு வளரும் என கணக்கிடப்பட்டுள்ளது.

**மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு:**

**12.** மத்திய அரசு பகிர்ந்தளிக்கக்கூடிய நிகர வரி வருவாயில் தமிழக அரசின் பங்கு, சேவை வரியைப் பொறுத்த வரையில் **5.374** சதவீதத்திலிருந்து **5.047** சதவீதமாகவும், ஏனைய வரிகளைப் பொறுத்த வரையில், **5.305** சதவீதத்திலிருந்து **4.969** சதவீதமாகவும் குறைத்து பதின்மூன்றாவது நிதிக்குழு நிர்ணயித்துள்ளது. நமது மாநிலத்திற்கான மத்திய வரிகளின் பங்கு **2011–2012** ஆம் ஆண்டில் ரூபாய் **13,111** கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சி, மத்திய அரசின் வரி வருவாயில் ஏற்படும் வளர்ச்சியைச் சார்ந்துள்ளதால் **2012–2013** மற்றும் **2013–2014** ஆம் ஆண்டுகளில் **15** விழுக்காடு என்ற குறைந்த அளவிலேயே கணக்கிடப்பட்டுள்ளது.

**மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்:**

13. பல்வேறு திட்டப்பணிகளுக்கான உதவி மானியங்கள் மற்றும் பதின்மூன்றாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ள உதவி மானியங்களின் அடிப்படையில் 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ரூபாய் 7,772 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வருவாய் வரவுகளும் மாநில அரசின் நேரடி கட்டுப்பாட்டில் இல்லாததால் 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளுக்கான வளர்ச்சி 10 விழுக்காடு என்ற குறைந்த அளவிலேயே கணக்கிடப்பட்டுள்ளது.

**வருவாய்க் கணக்கில் செலவுகள்**

14. 2011–2012 ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கு செலவுகள் ரூபாய் 84,980 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2010–2011 ஆம் ஆண்டிற்கான முன் கணக்குகளை விட 17.36 சதவீதம் அதிகமாகும். வருவாய் கணக்கு செலவுகளின் முக்கிய கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

15. 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், சம்பளம் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவுகள் மொத்த வருவாய்ச் செலவுகளில் 45.93 விழுக்காடாகும். இது 2010–2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவான 48.97 விழுக்காட்டை விட குறைவாகும். சம்பளங்களைப் பொறுத்தவரையில் 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வு, அகவிலைப்படி ஆகியவற்றை கருத்தில் கொண்டு 15 விழுக்காடு உயர்வும் ஓய்வூதியங்களைப் பொறுத்தவரை அகவிலைப்படியை மட்டும் கருத்தில் கொண்டு 12 விழுக்காடு உயர்வும் கணிக்கப்பட்டுள்ளது. ஆறாவது ஊதியக் குழு நிலுவைத் தொகையான 1,800 கோடி ரூபாய் இந்த ஆண்டு முடிவுக்கு வந்தாலும், இதனால் ஏற்படும் உபரி, அகவிலைப்படியில் ஏற்பட்டுள்ள அபரிமிதமான உயர்வு, காலிப் பணியிடங்களை நிரப்புவதனால் ஏற்படும் செலவு ஆகியவற்றால் ஈடுசெய்யப்படும்.

16. 2010–2011 முன் கணக்கைக் காட்டிலும் 2011–2012 திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் உதவித் தொகை மற்றும் மானியம் 23.15 விழுக்காடு உயர்ந்துள்ளது. இந்த உயர்வு, இலவச அரிசி வழங்குவதாலும், பல்வேறு சமூக பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியத் தொகை உயர்வாலும், பல்வேறு திருமண உதவித் திட்டங்கள் மற்றும் மகப்பேறு உதவித் திட்டங்களில் உதவித் தொகை உயர்வாலும், கறவை மாடுகள், ஆடுகள் இலவசமாக வழங்குவதாலும், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் அதிகரிப்பதால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகமாக மானியம் வழங்குவதாலும், மின்சார வாரியத்திற்கு கூடுதல் உதவித் தொகை வழங்குவதாலும் ஏற்பட்டுள்ளது. இச் செலவினங்களை முழு நிதியாண்டிற்கும் கணக்கிடும் பொழுது 2012–2013 –ல் 15 விழுக்காடும் 2013–2014–ல் 10 விழுக்காடும் உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.

17. 2010–2011 முன் கணக்கைக் காட்டிலும் 2011–2012 திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஊதியம் அல்லாத செயல்முறை மற்றும் பராமரிப்பு செலவுகள் 53.75 விழுக்காடு அதிகரித்துள்ளது. இந்த உயர்வு இலவச மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு இரண்டு ஜோடி சீருடை வழங்குதல் போன்ற திட்டங்களால் ஏற்பட்டுள்ளது. இச் செலவினங்கள் நடப்பாண்டிலேயே கணக்கில் கொள்ளப்பட்டுள்ளதால், 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளுக்கு 10 விழுக்காடு என்ற அளவிற்கு குறைவான உயர்வே கணிக்கப்பட்டுள்ளது.

18. 2011–2012 ஆம் ஆண்டிற்கான வட்டி செலுத்துதல் மொத்த வருவாய் வரவில் 10.31 விழுக்காடு ஆகும். இவ்விகிதம் நிதிப் பொறுப்புடைமைச் சட்டம் செயல்படுத்தியதிலிருந்து குறைவான அளவாகும். இவ்விகிதம் 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் முறையே 10.25 மற்றும் 10.27 விழுக்காடு இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

### முடிவு

19. 2010–2011 ஆம் ஆண்டைக் காட்டிலும் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் நிதிநிலை நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் தொடர்ச்சியாக உயர்

வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் நடப்பு நிதியாண்டில் மாநிலம் மீண்டும் வருவாய் உபரி நிலையை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு நிதி ஆண்டில் நிதிப் பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.90 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் வருவாய் உபரி முறையே 1350.11 கோடி ரூபாயாகவும் 3190.62 கோடி ரூபாயாகவும் இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக நிதிப் பற்றாக்குறை இந்த ஆண்டுகளில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் முறையே 2.74 விழுக்காடு மற்றும் 2.55 விழுக்காடு இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. எனவே நிதிக்குழு நிர்ணயித்த நிதி இலக்குகள் அனைத்தையும் அடையக்கூடிய நிலையில் மாநிலம் இருக்கும்.

20. மாநிலத்தின் கடன் அளவை இந்த அரசு தொடர்ந்து கண்காணித்து வரும். இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளதுபோல 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கடன் மற்றும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்புக்கிடையே உள்ள விகிதம் பதின்மூன்றாவது நிதிக்குழு பரிந்துரைத்த 24.50 விழுக்காட்டைக் காட்டிலும் குறைவாக 20.43 விழுக்காடு என்ற அளவிலேயே இருக்கும். வரும் ஆண்டுகளில் வருவாய் உபரி கணிக்கப்பட்டுள்ள நிலையில் மாநிலத்தின் கடன் தேவைகள் குறைந்து அதன் விளைவாக கடன் மற்றும் மாநில மொத்த உற்பத்தி மதிப்புக்கு இடையிலான விகிதம் மேலும் குறையும்.

* * * *

## அட்டவணை - இடைப்பட்ட க

| ஆகஸ்டு-2011 | 2 க |
|---|---|
| வருவாய் | 5 |
| மாநிலத்தின் சொந்த வருவாய் | 4 |
| வரி | 3 |
| வரி அல்லாதவை | |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை | 1 |
| பங்கிடப்பட்ட வரிகள் | 1 |
| உதவி மானியம் | |
| | |
| வட்டியல்லாத செலவு | 6 |
| சம்பளங்கள் (கல்விக்கான மானியங்கள் உட்பட) | 1 |
| ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும் | |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும் | |
| உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும் | 1 |
| ஏனைய வருவாய்ச் செலவினங்கள் | |
| மூலதன ஒதுக்கீடு | 1 |
| நிகரக் கடன் வழங்கல் | |
| | |
| நிதிக் குறியீடுகள் | |
| முதன்மை உபரி(+) / பற்றாக்குறை (–) | - |
| வட்டி செலுத்துதல் | |
| மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை | |
| வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–) | |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–)% | |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(–)யில் வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–)% | |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(–) (சரிக்கட்டப்பட்டவை) | - |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி(+) / பற்றாக்குறை(–) (சரிக்கட்டப்பட்டவை) % | |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) | 3, |

**# இவை, சில கணக்குகளிடையே மாற்றம் என்பதால் இந்த மதிப்பீடுகள் நிதிக் கணக்குகள்  மற்றும் ஆண்டு நிதிநிலை அறிக்கையுடன் பொருந்தாது.**